KALKI

25.3.84

ரூ.1.20



கொலை! கொள்ளை! கற்பழிப்பு!



குற்றங்கள் குறையுமா?

கல்கி

மூவர் வளர்த்த மணிக்கொடி

ஐந்து ஆண்டுக்கும் குறைவான காலமே வெளி வந்து, இன்று நினைவுகளும், பெருமிதங்களும் ஆகி நிலைத்து விட்ட ஒரு தமிழ்ப் பத்திரிகை 'மணிக்கொடி.' இந்தப் பத்திரிகை அலுவலகத்துக்கு மூதறிஞர் ராஜாஜி தாமே சென்று சந்தா செலுத்தியதுண்டு. தமிழ் உரை நடையின் முதல்வர் என்று பேராசிரியர் கல்கி அவர்களால் போற்றப்பட்ட அறிஞர் வ.ரா. அவர்களை ஆசிரியராகக் கொண்டு, இந்த மணிக்கொடியைத் தோற்றுவித்தவர் ஸ்டாலின் சீனிவாசன். இவர்களுக்குத் துணையாக நின்று உதவியவர் டி. எஸ். சொக்கலிங்கம். முழுக்க முழுக்க தேசியத்திலும், காந்தீயத்திலும் நம்பிக்கை வைத்திருந்த இந்த மூலவர்களின் இலக்கிய முயற்சி தரமானதாக அமைந்து ஓர் அன்பர் படையையே உருவாக்கி விட்டதில் வியப்பதற்கொன்றும் இல்லை.

'மணிக்கொடி' தோன்றி ஐம்பதாண்டுக் காலம் நிறைவடைந்ததையொட்டித் தமிழறிஞர்கள் சிவபாதசுந்தரம், சிட்டி, சி. சு. செல்லப்பா மூவரும் ஒரு விழா எடுக்க ஆர்வம் கொண்டார்கள்.



ஸ்டாலின் ஸ்ரீனிவாசன்

மணிக்கொடி தோன்றுவதற்கு முன் ஐம்பது ஆண்டுகள், பின் ஐம்பது ஆண்டுகள் என்று குறியீடு அமைத்துக் தமிழ் மறுமலர்ச்சி இலக்கியப்போக்கின் நூறாண்டுக் கால விசுவரூபச் சாதனையைத் தரிசனம் செய்ய, செய்விக்க அமைப்பாளர்கள் ஆர்வம் காட்டினார்கள்; திட்டங்கள் வகுத்தார்கள்.

இது எவ்வளவு தூரம் வெற்றியடைந்தது என்பதில் கருத்து வேறுபாடுகள் நிச்சயம் இருக்கும். மணிக்கொடி என்கிற இதழையும் அதன் ஆளுமையையும், மூலவர்களின் பெருமையையும் சரியான அளவில் எத்தனை பேர் புரிந்து கொண்டு கட்டுரை தயாரித்திருந்தார்கள் என்



வ. ரா

பது கேள்விக்குரிய ஒன்றாகி விட்டது.

டாக்டர் இரபிசிங், பேராசிரியர் இராமநாதன், வல்லிக்கண்ணன், பேராசிரியர் பி. வி. சுப்பிரமணியம் திரு. த. நா. சேனாபதி போன்ற சிலர் மட்டுமே கட்டுரைகளைச் சிரமப்பட்டுத் தயாரித்திருந்தனர். மற்றவர்களில் பலர் கேட்பவர்களைச் சிரமப்படுத்தவே செய்தார்கள். வகுப்பறையை விட்டு மாணவர்கள் ஏன் தெருவுக்கு வருகிறார்கள் என்கிற ஆராய்ச்சியில் ஈடுபடுவோமானால், அதற்கு இங்கே படிக்கப்பட்ட சில கட்டுரைகள் பெரிதும் உதவியாக இருக்கும். கட்டுரை படித்த ஒருவரே, விவாதம் ஒன்றுக்குப் பதிலளித்து விட்டு, ''இனிமேலும்



டி. எஸ். சொக்கலிங்கம்

உங்களை நான் அறுக்க விரும்பவில்லையாகையால்...'' என்று முடித்ததில் நியாயம் உண்டு.

தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வ. அய். சுப்பிரமணியம் துவக்க உரையாற்றியபோது மணிக்கொடி இதழ்களை 'மைக்ரோ ஃபிலிம்' செய்து பல்கலைக் கழகம் பாதுகாக்கும் என்று வழங்கிய செய்தி, தமிழ் கூறும் நல்லுலகம் முழுமைக்குமே கிடைத்த பரிசாக நினைத்துப் பெருமிதம் கொள்ளலாம்.

முதல் நாள் மாலை நிகழ்ச்சியில் நா. பார்த்தசாரதி தலைமையேற்றுப் பேசும்போது தான் மணிக்கொடி இதழைப் பற்றிய சரியான அறிமுகம் கிடைத்தது. அதுவரை நிலவிய வகுப்பறை உணர்வு மாறி விவாதங்களிலும் சூடு பிடித்து, மறுநாளும் 'டெம்போ'வைக் காப்பாற்ற உதவியது. சீனிவாசன் யார், வ.ரா. யார் சொக்கலிங்கம் யார் என்று மேற்கோள்களுடன் எடுத்துச் சொல்லி, அவர்களுடைய இலக்கிய காம்பீர்யம், அறிவுத் திமிர் பற்றியெல்லாம் விளக்கம் தந்த போது மேடையில் அவர்களுடைய உருவப் படங்கள் ஏதும் இல்லாத நிலையிலும் அவர்களை நன்கு தரிசனம் செய்ய முடிந்தது. குற்றாலத்துத் திரிகூடமலைச் சிகரத்தில் கொட்டுகிற மூன்று அருவிகளின் சங்கமிப்



செல்லப்பா

பாக அவர்களை உருவகப்படுத்தியது நயமானதொன்று.

படிக்கப்பட்ட கட்டுரைகளில் நாவல் இலக்கியம் பற்றிய டாக்டர் தேவதத்தாவின் கட்டுரையும் கவிதை பற்றிய டாக்டர் கனகசபாபதியின் கட்டுரையும், இன்னும் சில கட்டுரைகளும் முழுமையான மதிப்பீட்டைச் செய்யத் தவறி விட்டது மட்டுமல்லாமல் ஒரு பக்கச் சார்புடையதாகவும் கூட அமைந்தது வருந்துதற்குரியதுதான். ஒரேயொரு குறுநாவலை எழுதியவரைக்கூட தேடிப் பிடித்துப் புகழாரம் சூட்டுகிற கட்டுரையில் சாதனைகள் பல புரிந்த பி. வி. ஆர்., ர. சு. நல்ல பெருமாள், ஜெகசிற்பியன், சோமு போன்றவர்களின் பெயர்கள் கூடச் சொல்லப்படவில்லை. இன்னும் சில புகழ்பெற்ற எழுத்தாளர்களைக் குறிப்பிட வேண்டி வருமே என்கிற எண்ணத்தாலோ என்னவோ 'சரித்திர நாவல்கள்' என்கிற பிரிவைத் தொடவே இல்லை.

அவ்வாறே, பாரதிதாசனின் பிரபலமான மரபுக் கவிதைகளை வெளியிட்டுப் பெருமை கொண்ட மணிக்கொடிக் கருத்தரங்கில், கவிதை பற்றிப் படிக்கப்பட்ட கட்டுரையில், மரபுக் கவிதையின் வளர்ச்சியையே அலட்சியப்படுத்தியிருந்தார்கள். முழுக்க, முழுக்கப் புதுக்கவிதைகளை-அதுவும் ஒரு குறிப்பிட்ட வட்டாரக் கவிஞர்களைப் பற்றி மாத்திரமே விலாவாரியாகப் பேசினார்கள்.

அலை ஓசையை ஒரு வரலாற்று நாவல் என்கிற

சிவபாதசுந்தரம்






சிட்டி

கணக்கில் ஒருவர் விமரிசனம் செய்ததைத் தவிர மற்றபடி அமரர் கல்கியின் எழுத்துக்களுக்கு நியாயமான மதிப்பீடு ஏதுவும் கிடைக்கவில்லை. விவாதத்துக்கு வந்த சிலரும் மணிக்கொடிக் கருத்தரங்கு மேடையைப் பயன்படுத்தி 'எஸ்கேப்பிஸம்' 'ப்ளேகரிஸம்' என்கிற வார்த்தைகளை வைத்துக் கல்கியை ஒரு பிடி பிடிப்பதில் சந்தோஷப்பட்டார்கள்.

எப்படியிருந்தாலும் ஒரு நல்ல நோக்கத்தோடு ஏற்பாடு செய்யப்பட்டது இந்த விழா. இதில் கலந்து கொண்ட சிலரின் சிறுமைத்தனத்தால் மணிக்கொடி காலத்தின் பெருமை குன்றி விடப் போவதில்லை.

—சுப்ரபாலன்



கடந்த 12.2.84 அன்று மிருந்த மழையில் கோவில்பட்டியிலிருந்து நெல்லை சென்று கொண்டிருந்தேன். வழியில் ரஸ்தா தடைபடவே நான் ஏறியிருந்த பேருந்து அகிலாண்டபுரம் வழியே மிகவும் குறுகலாக சாலை வழியே மெயின் ரோட்டை நோக்கி சென்று கொண்டிருந்தது. வரிசையாக லாரிகளும் பேருந்துகளும் ரேஷன் கியூ போல் சென்று கொண்டிருந்தன. அவ்வூரின் இறுதியிலுள்ள பள்ளத்தில் சேற்றில் எங்கள் முன் சென்ற லாரி பதிந்து விட. போக்குவரத்து நின்றுவிட்டது. முன்னும் பின்னும் செல்ல முடியாத நெருக்கடி.

இந்நிலையில் அவ்வூரிலிருந்த சிறார் முதல் பெரியோர் வரை ஒன்று சேர்ந்து அந்த லாரியை மிகுந்த சிரமத்துடன் தள்ளிவிட்டு அந்த ரஸ்தாவில் மணல் வாரி இட்டுச் செம்மை செய்து எங்களைவழி அனுப்பி வைத்த காட்சி என் நெஞ்சில் நிறைந்தது.

—இராதா சீனிவாசன்.

சிறப்புப் பேட்டி





குற்றங்கள் குறையுமா?

பணம் கொள்ளை அடிப்பதற்காக கர்நாடகா பாங்க் மானேஜர் ஞானசம்பந்தம் படுகொலை செய்யப்படுகிறார்.

ஒன்பது பேர் அடங்கிய ஒரு குடும்பம் முழுவதையும் கொலை செய்த ஜெயப்பிரகாஷ், சினிமா பார்த்ததால் ஏற்பட்ட வெறியில் இப்படிச் செய்ததாகக் கூறுகிறான்.

மாமியாரை அரிவாள் மனையால் வெட்டிக் கொன்றதாகக் கருதப்படும் வெங்கட்ரமணியை அசோக் நகர் போலீஸ் கைது செய்கிறது.

இதுபோல் ஒன்றா, இரண்டா, பத்திரிகையைப் பிரித்தால் தினந்தோறும் எத்தனையோ செய்திகள்.

குற்றங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றனவா, அல்லது நாளிதழ்கள் முன்னைவிட இப்போது இத்தகைய செய்திகளுக்கு அதிக முக்கியத்துவம் தருவதால் இப்படித் தோன்றுகிறதா?

இன்று பரபரப்பான செய்திகளை வெளியிட நாளிதழ்கள் ஆவல் காட்டுவது உண்மை: ஆனால் குற்றங்களும் அதிகரித்துத்தான் வருகின்றன என்பதைப் புள்ளி விவரங்கள் உறுதி செய்கின்றன. ஏன் இப்படி? காரணங்கள் யாவை? குற்றங்கள் குறையுமா? அதற்கு என்ன செய்ய வேண்டும்? தமிழகத்தின் முன்னாள் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் **திரு. கிருஷ்ணசாமி** பதிலளிக்கிறார்:

நிருபர்: குற்றங்கள் மலியக் காரணங்கள் என்ன?

கிருஷ்ண: ஜனநெருக்கடியே கூட ஒரு காரணம். சிறிய இடத்தில் நிறையபேர் வாழும் போது ஒரு டென்ஷன் உருவாகிறது. வேலை இல்லாத் திண்டாட்டமும் வறுமையும் அதை வளர்க்கிறது.

நிருபர்: ஆனால் இந்தச் சூழலில் வாழும் எல்லாருமே குற்றம் புரிந்து விடுவதில்லையே?

கிருஷ்ண: இல்லை. பெரும்பான்மையினர் மனத்தை அடக்கி ஆண்டு வருகிறார்கள். சிலர் பலவீனமான மனமுடையவர்களாய் இருந்து தவறு இழைக்கிறார்கள். அடுத்த வேளை உணவுக்கு வழி இல்லை எனில் அதுவே சிலரைத் திருடத் தூண்டும். பேராசை, ஆத்திரம், ஏற்றத் தாழ்வுகள் கண்டு ஏற்படும் பொறாமை போன்ற உணர்ச்சிகளுக்குச் சிலர் அடிமைப்படுகிறார்கள்; குற்றங்களைப் புரிகிறார்கள். பம்பாயில் ஜனத்தொகையில் ஐம்பது சதவிதம் நடைபாதை வாசிகள்தான். ஒரு பக்கம் வானளாவும் மாளிகைகள் மறுபுறம் வறுமையின் கொடுமை. இச்சூழ்நிலை குற்றங்கள் வளரச் சாதகமானது. இவற்றைச் சீர்திருத்த ஆட்சியில் இருப்போர் முயற்சி மேற்கொள்ளாமல் மக்களுடைய நடத்தையை மட்டும் கட்டுப்படுத்தி நல்வழிப்படுத்தி விடலாம் என்று நினைப்பது வெறும் பகற்கனவு!

நிருபர்: அப்படியானால், கிராமங்களிலிருந்து நகருக்கு மக்கள் வந்து ஜனத்தொகையைப் பெருக்கும் போக்குக்கு முடிவு கட்டியாக வேண்டுமில்லையா?

கிருஷ்ண: ஆமாம். கிராமபுறங்களில் வேலைவாய்ப்புக்களைப் பெருக்கிப் பட்டணப் பிரவேசத்துக்கு அவசியமே இல்லாமல் செய்தாகவேண்டும். இதற்கு ஏற்ப அரசின் அடிப்படைக் கொள்கைகள் மாறினால் நலம். அரசியல் ஆதாயத்தை வைத்துப் பார்த்தால் கூட வோட்டுக்கள் கிராமப்புறபகுதிகளில்தானே அதிகம்! இதையெல்லாம் கவனிக்காமல் நகர்ப்புறங்களில் குற்றங்கள் மலிகின்றன என்பதால் போலீஸாரை ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாதவர்கள் என்று குறை கூறுவதில் பொருள் இல்லை.

நிருபர்: என்னதானிருந்தாலும் நாளுக்கு நாள் குற்றங்கள் மலிவது அச்



என். கிருஷ்ணசாமி

எம். எஸ்ஸி (கெமிஸ்ட்ரி) படித்த இவர் 1948—ல் போலீஸில் சேர்ந்து 79—ல் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக ஓய்வு பெற்றார். மாவட்டம், நகரம், மாநிலம், தேசம் ஆகிய எல்லா நிலைகளிலும் பலவகை சிறப்புப் பணிகள் ஆற்றியுள்ளார். பல வெளி நாடுகளுக்குச் சென்று பயின்றவர். ஜனாதிபதியின் போலீஸ் மெடல் பெற்றவர்.

கம்ப்யூட்டர் நிர்வாகத்தில் சிறப்புப் பயிற்சி பெற்றவர். மைக்ரோவேவ் செய்தித் தொடர்பு குறித்தும் படித்திருக்கிறார்.

தமிழக போலீஸ் படையை நவீனமாக்கும் திட்டத்தையும் தமிழக போலீஸுக்குத் தேவையான கம்ப்யூட்டர்களை நிர்மாணித்துப் பயன்படுத்தும் திட்டத்தையும், மைக்ரோவேவ் திட்டத்தையும் உருவாக்கி, அமல்படுத்தி பாராட்டுக்கள் பெற்றவர்.

இதன் பிறகு தேசிய அளவிலும் குற்றம் புலனாய்வுக்கான கம்ப்யூட்டர் திட்டத்தை மத்திய உள்துறை அமைச்சகத்துக்காக உருவாக்குவதில் முக்கியப் பங்கு வகித்தார்.

சத்தை ஊட்டவே செய்கிறது. சாலையில் தைரியமாக ஆண்களே நடமாட முடியாது போயிருக்கிறதே!

கிருஷ்ண: திருடர்களால் மட்டும்தானா ஆபத்து வருகிறது? கொசுக்களால் மலேரியா பரவி எத்தனை உயிர்களைப் பலி கொள்கிறது? தண்ணீர் சுத்தமாய் இராததால் எத்தனை ஆபத்தான வியாதிகள் பரவுகின்றன? இவையெல்லாம் பெரிது படுத்தப் படுவதில்லை. ஆனால் ஒரு கொள்ளை, அல்லது கொலை நடந்து விட்டால் ரொம்பப் பரபரப்பு ஏற்பட்டுப் போகிறது.

திருபர்: அதிகரித்து வரும் குற்றங்களுக்கு ஏற்பப் போலீஸ் படை பலம் பெருகியுள்ளதா?

கிருஷ்ண: போலீஸ்படை அதிகரித்தால் குற்றங்கள் குறையும் என்று நம்புவதற்கில்லை. ஒரு நெருக்கடி கட்டத்தில்தான் போலீஸ் வருகிறதேயன்றி மக்களின் அன்றாட வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் பாதுகாப்புத் தந்து கொண்டிருக்க முடியாது. ஜனநெரிசல் குறைவது, வேலை வாய்ப்பு அதிகரிப்பது, ஏழ்மை ஒழிந்து சுபிட்சம் நிலவுவது இவைதாம் குற்றங்கள் குறைய வழி செய்யும்.

திருபர்: நமது வட்டாரத்தில் இரண்டு கான்ஸ்டபிள் இரவு ரோந்து சுற்றினால் தேவலாம் என்று ஒவ்வொரு பேட்டை வாசியும் நினைக்கிறார்....?

கிருஷ்ண: இதுவும் தவறான அணுகு முறைதான். இதற்குத் தேவைப்படக் கூடிய ஏராளமான போலீஸ் படையை உருவாக்கினால் வரிச் சுமைதான் மக்களுக்கு அதிகரிக்கும். எனவே அந்தந்த வட்டார மக்கள் ஒன்று கூடித் தங்களுக்குத் தாங்களே பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து கொள்வது நல்லது. பக்கத்து வீட்டில் நடப்பது நமக்குத் தெரியாது என்ற நிலை மாற வேண்டும். இதேபோல் தொழிலகங்கள் சிறு பாதுகாப்புப் படையை உருவாக்கிக் கொள்ளலாம்.

திருபர்: மதுவிலக்கை ரத்து செய்ததால் பல குற்றங்கள் நடக்கின்றனவே?

கிருஷ்ண: இந்தக்கருத்தும் ஒரு மாயைதான். குடித்து போதை ஏறியவன் குற்றமிழைக்கக் கூடிய சக்தியையே இழந்தவனாயிருக்கிறான். தொட்டால்விழுந்து விடுவான். ஆனால் அவனைக் கண்டால் எல்லோருக்கும் அனாவசிய பயம்! இந்த மனப்பிரமையால் தான் குடிபோதையில் குற்றங்கள் மலிவதாகக் கருதுகிறோம். குடிபோதையில் ஒருவன் ஒழுங்கற்ற முறையில் நடந்து கொள்வானேயன்றி மிக அபூர்வமாகவே பெரிய குற்றங்களைச் செய்வான்.

திருபர்: குடிக்கவேண்டும் என்ற 'தாகம்' ஏற்படுகையில் காசில்லாத போது திருடுகிறார்களே...?

கிருஷ்ண: இது ஓரளவு உண்மையே. ஆனால் இதையும் வறுமை அல்லது வேலையில்லாத் திண்டாட்டத்தோடு தான் சேர்க்க வேண்டும்.

திருபர்: கண்டுபிடிக்கப் படாத குற்றங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறதே. இதற்கு ஃபாரின்ஸிக் லாப் (ஆய்வகம்) எந்த அளவுக்கு உதவும்?

கிருஷ்ண: பெரிய குற்றங்களைக் கண்டுபிடிக்கத்தான் ஆய்வகம் அதிகமாக உதவும் — கொலை, கொள்ளை போன்றவை. விரல்ரேகைப் பதிவு திருடர்களைப் பிடிக்க உதவும். ஆனால் நாம் எத்தனை குற்றவாளிகளின் விரல் ரேகைகளைச் சேகரித்து வைத்திருக்கிறோம் என்பதைப் பொருத்துத் தான் இதன் பயன் அமையும். சென்னையில் இத்துறையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அபிவிருத்திக்கு எதிலும் எப்போதும் இடமுண்டு. இன்னொன்று. இவ்விஷயத்தில் மக்களின் ஒத்துழைப்பு மிக அவசியம். போலீஸ் வந்து ஆய்வு நடத்தும் வரை குற்றம் நடந்த இடத்தில் எதையும் தொடவே கூடாது. இதற்கு நிறையவே பிரசாரம் தேவை.

திருபர்: கம்ப்யூட்டர்கள் எந்த அளவுக்குக் குற்ற

வாளிகளைக் கண்டுபிடிக்க உதவும்?

கிருஷ்ண: விரல் ரேகை அடையாளம் போல்தான் இதுவும் — அதாவது—கம்ப்யூட்டரில் எத்தனைத் தகவல்களை நாம் பதியச் செய்கிறோமோ அதையொட்டித் தான் கம்ப்யூட்டரால் நமக்குப் பயன் கிட்டும். ஒவ்வொரு சிறு விவரமும் கம்ப்யூட்டரில் பதிவாக வேண்டும்.

நிருபர்: சினிமாவினால் கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற குற்றங்கள் அதிகரிப்பதாகப் பரவலாக ஒரு கருத்து நிலவுகிறதே அதுவும் தவறான எண்ணம்தானா?

கிருஷ்ண: இல்லை, இல்லை! அது முற்றிலும் சரியான கருத்து. சினிமாவினால் ஏற்படும் பாதிப்பு மிகவும் ஆழமானது. எனவே ஆபத்தானது. களிப்பூட்டும் படங்கள் எடுக்கட்டும், சிரிக்க வைக்கட்டும், வரவேற்கலாம். ஆனால் செக்ஸ், வன்முறைப் படங்கள் கூடவே கூடாது!

நிருபர்: இதென்ன, சினிமாவை மட்டும் தீவிரமாக எதிர்க்கிறீர்கள்? 'வாழ்க்கையில் பார்ப்பதைத்தான் படம் எடுக்கிறோம்' என்கிறார்களே? 'கராட்டே, ஜூடோ எல்லாம் வீரத்தை வளர்க்கும்' என்கிறார்களே? செக்ஸ் வாழ்க்கையில் இன்றியமையாத அம்சம்; அதை எதிர்ப்பது ஹிப்பாக்ரஸி என்கிறார்களே?

கிருஷ்ண: வாழ்க்கையை அப்படியே பிரதிபலிப்பது போல் படமெடுத்தால் வரவேற்கலாம். ஆனால் சினிமாக்கள் மிகைப்படுத்தவே செய்கின்றன. அசல்வாழ்க்கையில் எந்த ஒரு சண்டையும் ஒரு நிமிஷம் இரண்டு நிமிஷத்துக்கு மேல் நீடிக்காது. ஆனால் சினிமாவில் ஒரு ரீல் இரண்டு ரீல் ஓடுகிறது. கராட்டே பள்ளியில் போய்ப் பாருங்கள். ஜூடோ பிடிகள் பயங்கரமானவை அல்ல என்பது தெரியும். ஆனால் சினிமாவில் இந்தச் சண்டைகள் அதி பயங்கர ஆவேச உணர்வுடன் காட்டப்படுகின்றன. கற்பழிப்புக்காட்சிகளும் இப்படித்தான். இவையெல்லாம் ரொம்ப ரொம்பத் தவறு. மக்களின் மனப்போக்கையே உருமாற்றி விடக் கூடிய சக்தி வாய்ந்த சாதனம் சினிமா.

நிருபர்: அயல் நாடுகள் பலவற்றுக்குப் போய் வந்திருக்கிறீர்கள். போலீஸ்காரர் என்ற முறையில் நமது நாட்டுக்குப் பயன்படக் கூடிய அனுபவம் என்று எதைக் கருதுகிறீர்கள்?

கிருஷ்ண: ஜப்பானில் நான்பெற்ற அனுபவத்தைக் கூறலாம். அங்கே கோபான் என்ற ஓர் அமைப்புஉண்டு. அதாவது ஒரு சின்ன பேட்டை அல்லது வட்டாரத்துக்கு ஒரு கோபான்

ஒரு குற்றவாளி சொல்கிறார்!



என் பெயர் மைக்கேல் பாலஸ். வயது 44. என் இருபதாவது வயதில் நண்பனுடன் ஊர் சுற்றுவேன். ஒருநாள் அவன் என்னை மயிலாப்பூர் அழைத்துப் போனான். சில வீடுகளில் பூட்டைத் திறந்து நகை, பணம் எடுத்தோம். சில நாட்கள் சென்று நான் தனியே பிரிந்து என் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்தேன். மாட்டிக் கொண்டேன். ஒரு வருடம் சிறை வாசம் அனுபவித்து வெளியே வந்தேன்.

சில நாள் சும்மா இருந்து மறுபடி பழைய தொழிலில் இறங்கினேன். ஒரு வீட்டில் திருடும்போது கையும் களவுமாய்ப் பிடிபட்டேன். நாலு வருஷம் தீட்டிவிட்டார்கள். விடுதலை அடைந்ததும் ஆந்திரா சென்று பல வேலைகள் செய்தேன். கையில் பணம் சேரவில்லை. ஒவ்வொரு நாளும் சாப்பாட்டுக்குப் பஞ்சம். மறுபடி தமிழகம் திரும்பி வீடு புகுந்து திருட ஆரம்பித்து சிக்கினேன். மீண்டும் இரண்டாண்டுச் சிறை வாசம்!

வெளியே வந்ததும் சிறையில் பழகிய சிலருடன் சேர்ந்து அடையாறில் ஒரு வீட்டைக் குறி வைத்தேன். நான் வெளியே காத்திருக்க அவர்கள் உள்ளே போய்த் திரும்பினார்கள். பாதிப் பொருள்களைத் தான் எனக்குக் காட்டினார்கள். ஏமாந்தேன். மறுபடி இரண்டாண்டு கம்பி எண்ணினேன். சிறையில் தச்சு வேலை செய்வேன். 100 நாற்காலிகள் செய்தால் 45 ரூபாய் கிடைக்கும்.

1977—ல் வெளியே வந்தபோது இன்ஸ்பெக்டர் கோபால கிருஷ்ணன் கூப்பிட்டு அனுப்பி அறிவுரை வழங்கினார். ஒரு ஓட்டல் வாசலில் சைக்கிள்களைப் பார்த்துக்கொள்ளும் வேலை வாங்கித் தந்தார். ஒருநாளைக்கு 15 ரூபாய் கிடைக்கிறது. இன்னொரு இன்ஸ்பெக்டர் ஜேம்ஸ் ராஜ் எனக்கு ரேஷன் அட்டை வாங்கித் தந்தார். இவர்கள் உதவியை நான் மறக்கவே மாட்டேன். நான் திருந்தியதற்கு இவர்களே காரணம்.

எனக்கு மனைவி, மக்கள் உண்டு. மூத்த மகன் ஊதுபத்தி தயாரிப்பு தொழிலகத்தில் வேலை செய்கிறான். மகள் ஒருத்தி ரெடிமேட் ஆடைகள் தயாரிக்கும் நிறுவனத்தில் பணியாற்றுகிறாள்.

இருக்கும். அதிலே ஒரு பொறுப்புள்ள ஆசாமி ஒரு டெலிஃபோனுடன் இருப்பார். அவர் போலீஸ்காரர் அல்ல. ஆனால் அவரை எந்த விஷயமும் யார் வேண்டுமானாலும் அணுகி உதவி கோரலாம். போலீஸ் விஷயமாகத்தான் அவரை அணுக முடியும் என்பதில்லை. எந்த ஓர் அவசர இங்கும் அமல் படுத்துவது மிக எளிது. உதாரணமாக எல். ஐ. ஜி. பிளாட்டுக்கள் பல – அடுக்கு மாடிக் கட்டிடங்களாக – அருகருகே உருவாகின்றன. இதில் ஒரு ஃப்ளாட்டை ஒரு மாஜி போலீஸ்காரருக்கு ஒதுக்கி ஒரு ஃபோனைத் தந்து அந்தக் குடியிருப்புப் பகுதி மக்களுக்கு அவசர உதவி அதிகாரி. அந்த வட்டாரத்து வீடுகள் ஒவ்வொன்றிலும் ஆண்டுக்கு ஒரு முறையாவது நுழைந்து குசலம் விசாரித்துத் திரும்புவார். இதனால் போலீஸாருக்கும் மக்களுக்கும் இடையில் ஓர் அன்னியோன்னிய பாவம் வளர்கிறது. பரஸ்பரம் பிரச்னைகளைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஒருவ

1983–ஆம் ஆண்டில் சென்னையில் நடந்த திருட்டு, கொள்ளைக் குற்றங்கள் 6869. போலீஸார் கவனத்துக்கு வராமல் இன்னும் பல நடந்திருக்கும். இதில் மக்கள் இழந்த சொத்துக்களின் மதிப்பு ஒரு கோடியே பத்து லட்சம் ரூபாய்க்கும் அதிகம். 1982–ல் கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களில் 76 சதம் மீட்கப்பட்டது. 1983–ல் 69 சதம் தான் மீட்கப்பட்டது.

1983–ல்

வீட்டில் புகுந்து கொள்ளை	3050
சைக்கிள் திருட்டு	1350
பிக்பாக்கெட்	370
சங்கிலி பறிப்பு (மீட்கப்பட்டது 130)	160
கொள்ளை அடிப்பதற்காக நடந்த கொலைகள்	5

உதவிக்கும் அணுகலாம். உடனே ஃபோன் மூலம் அந்த உதவியைப் பெற்றுத் தருவார். கோபான் இருக்கிறது என்ற எண்ணமே ஒரு பாதுகாப்பு உணர்வை அந்த வட்டார மக்களுக்கு அளிக்கிறது. இந்தக் கோபான் முறையை தேவையெனில் அணுகலாம் என்று ஏற்படுத்தலாம். இதற்காக ஒரு சிறு ஊதியம் அவர் பெறலாம்.


இன்னொரு பழக்கமும் ஜப்பானிய போலீஸாரிடம் உண்டு. அதாவது ஒரு வட்டாரத்துக்குப் பொறுப்பேற்றுள்ள ஒரு போலீஸ் ரோடு ஒருவர் ஒத்துழைப்பதும் சாத்தியமாகிறது. இதையும் இங்கு அமுல் படுத்துவது சாத்தியமே.

–சலன்

மேலட்டை வண்ணப்படம்:
புகைப்படங்கள்: **யோகா**

'ஆர்மடில்லோ' என்னும் விலங்கு போடும் குட்டிகள் எல்லாமே ஆண்களாகவோ அல்லது பெண் குட்டிகளாகவோ இருக்கும். இந்த அதிசய விலங்கை நாம் 'அழுங்கு' என்று கூறுகிறோம்.

–எஸ். விஜயா சீனிவாசன்






கிரீஸ் நாட்டைச் சேர்ந்த அர்ஜன்டேரியா தீவிலுள்ள மண் சோப்பு போன்ற வழுவழுப்பான பொருளால் ஆனது. அங்குள்ள மக்கள் இந்த மண்ணை உபயோகித்தே துணிகளை வெளுத்து வருகின்றனர். அங்கு மழை பெய்தால் தரை மீதெல்லாம் சோப்பு நுரை படிந்தது போல் காணப்படுமாம்.
'அதிசயச் செய்திகள் நூலிலிருந்து'
தகவல்: மாணிக்கம் வெங்கட்.

சட்லெஜ்– யமுனை இணைப்புக் கால்வாய் திட்டத்தில் வேலைசெய்பவர்களுக்குச் சம்பளம் தர, போதிய பணம் இல்லாததால் திட்ட வேலைக்காக வந்துள்ள சிமெண்ட், இரும்பு முதலியவற்றை விற்று, ஊழியர்களுக்குச் சம்பளம் தரப் போகிறார்கள்!

ஆதாரம்: சண்டே.
–சம்பத்குமாரி.




சிங்கத்தை நல்லா பழக்கியாச்சா? வெளியே விட்டா, சொன்னபடி கேக்குமா?
இ-காங்கிரஸ் எம்-எல்-ஏ-க்கள் எம்-பி-க்கள்
எப்படிங்க சொல்ல முடியும்? வெளியே விட்டா தானே தெரியும்!
பொதுத் தேர்தல்


இந்தக் கிழம் இருக்கிறவரைக்கும் நம்ம இஷ்டத்துக்கு விளையாட முடியாது! துரத்தியடிச்சுடலாம்னு பார்த்தா நடக்கலியே!..
அரசியல் அபிலாஷைகள்
மேல்சபை


பிரசாதம் ரொம்பப் பிரமாதம்! உங்களுக்குப் புண்ணியமா போகட்டும்!
பிரமாதமாம்!.. பிரமாதம்! எல்லாம் சக்கரபாணிக்குத் தான் வெளிச்சம்!
ராமப்ரசாதராவ் கமிஷன்

கல்கி



1984 மார்ச் 25
ருத்ரோத்காரி பங்குனி 12
மலர் : 42 இதழ் : 34



சில நேரங்களில் சில அரசியல்வாதிகள்!

❊ ராமபிரசாத ராவ் கமிஷன் தீர்ப்பு வெளியாகி விட்டது. அமைச்சர்களோ முதல்வரோ எந்தவிதமான லஞ்ச ஊழல் செயலிலும் ஈடுபடவில்லை என்று நற்சான்றிதழ் தந்துவிட்டார் நீதிபதி. எம். ஜி. சக்கரபாணி, சுகுமாரன் மீது பத்தேமுக்கால் லட்ச ரூபாய் வழக்கு உயர்நீதிமன்றத்தில் தொடர்கிறது. அதற்கும் முதல்வர் — அமைச்சர் — அதிகாரிகளுக்கும் சம்பந்தமில்லை என்பதாக ராமபிரசாதராவ் கூறியிருக்கிறார். நீதிபதி தமக்குக் கிடைத்த சாட்சியங்களின் அடிப்படையில் இப்படி முடிவுக்கு வந்ததை யாரும் ஆட்சேபிப்பதற்கில்லை. ஆனால் ஓர் அரசியல்வாதியின் நிலை வேறு. 'சக்கரபாணி விவகாரத்துக்கும் எனக்கும் நேரடித்தொடர்பு இல்லை என்றாலும் என் சகோதரர் மீது களங்கம் சுமத்தப்பட்டிருப்பதால் நான் அதற்கும் தார்மீகப் பொறுப்பேற்க வேண்டியவனாய் இருக்கிறேன்' என்று கூறும் துணிவுள்ளவன்தான் முதல் தரமான ஜனநாயகவாதி. அண்ணல் காந்தியடிகளும் சுதந்திரத்துக்குப் பின் பதவிக்கு வந்த முதல் தலைமுறைத் தலைவர்களும் இந்த ஜனநாயக மரபைத்தான் நமக்குக் கற்றுத்தந்தார்கள். ஆனால் அதையெல்லாம் எண்ணிப் பார்ப்பவர்களே இன்றில்லை எனும்போது கடைப்பிடிக்கப் போகிறவர் யார்?

❊❊ அந்துலேயைக் காப்பாற்றுவதற்காகப் பாட்டீல் தாமே சட்டத் திருத்த மசோதா கொணர வேண்டும் என்று இ. காங்கிரஸ் மேலிடம் விரும்பியது. அதாவது தனக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லாதது போல் காட்டிக் கொள்ள நினைத்தது. ஆனால் பாட்டீல் குட்டை உடைத்து விட்டார். உடனே மேலிடம் விழித்துக் கொண்டது. தேர்தல் நேரத்தில் இந்திராகாந்திக்கு நேரக்கூடிய அபகீர்த்தியைத் தவிர்ப்பதற்காக, 'பாட்டீல் தவறாகப் புரிந்து கொண்டு விட்டார்' என்றும், 'சட்டத் திருத்த மசோதாவுக்கு மேலிடத்தின் ஆதரவு இல்லை' என்றும் ராஜீவ் அறிக்கை விட்டார். அதே மூச்சில் 'அந்துலேக்கு நியாயம் கிடைக்க ஆவன செய்ய வேண்டும்' என்றும் ராஜீவ் சொல்லியிருக்கிறார். ராஜீவின் இந்தப் பேச்சும் இ. காங்கிரஸ் மேலிட நடவடிக்கைகளும் மகாராஷ்டிரத்தில் கட்சியைப் பிளவுபடாமல் கட்டிக் காப்பதற்காக நீதி, நேர்மை, நியாயம், நல்லொழுக்கம், ஜனநாயக மரபு போன்ற எதை வேண்டுமானாலும் காவு கொடுக்க இ. காங்கிரஸ் தலைமை தயாராக இருப்பதையே உணர்த்துகின்றன.

❊❊❊ தேர்தல் நெருங்குகிறது என்றதுமே எதிர்க்கட்சியினருக்கு இந்திரா ஜுரம் கண்டு விடுகிறது. 'இந்திரா காந்தியைப் பதவியிலிருந்து இறக்க ஒன்று கூடுவோம்' என்கிறார் சந்திரசேகர். ஆந்திராவில் தெலுங்கு தேசம் மாநிலத் தேர்தலில் அமோகவெற்றி பெற்ற போதிலும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்திரா காங்கிரஸுக்கே மக்கள் வோட்டளிப்பார்கள் என்று நம்பப்படுகிறது. தமிழகம் ஏற்கெனவே இவ்விஷயத்தில் வழிகாட்டியிருப்பதால் கலகலத்துப் போயிருக்கும் எதிர்க்கட்சிகள், 'என். டி. ஆரைப் பிரதமராக்குவதாக ஆந்திர மக்களுக்கு ஆசைகாட்டினால் என்ன?' என்று யோசிக்கின்றன. அதனால் நாடாளுமன்றத் தொகுதிக்கு என். டி. ஆர். வேட்பாளராக நிற்கிறார்!

❊❊❊❊ தமிழகத்திலோ இ. காங்கிரஸும் அ. தி. மு. க. வும் கூட்டணி சேர்ந்தால் எதிர்க்கட்சிகள் பாடு அதோகதிதான் என்பதால் இதைத் தவிர்க்க முயற்சி நடக்கிறது. 'இந்திரா காங்கிரஸ் வடமாநிலங்களில் நிச்சயமாய்த் தோற்கவே போகிறது; எனவே இந்திராவை நம்பி கோதாவில் இறங்காதீர்கள்' என்று எம். ஜி. ஆருக்கு மூளைச்சலவை செய்ய உத்தேசிக்கப்படுகிறது!

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்



டெலிஃபோனே சாட்சி!



ஸுஜாதா விஜயராகவன்

புது ஃபோன் எக்ஸ்சேஞ்சுகள் நகரின் பல பாகங்களில் இந்த மாதம் தொடங்க இருப்பதால் இனிமேல் எந்தவிதத் தொந்தரவும், குறைவும் இல்லாமல் டெலிபோன்கள் அனைத்தும் சுறுசுறுப்பாக இயங்கும் என்ற ஃபோன் இலாக்கா அறிக்கை பத்திரிகைகளில் வந்ததுதான் தாமதம்.... இந்த அறிவிப்பினால் மனம் உடைந்து போய்க் கசப்போடு என்னிடம் பேசியவர்களைப் பற்றி உங்களிடம் சொல்லியே ஆக வேண்டும்.

என் சிநேகிதி உமாவுக்குத் துக்கம் சொல்லி முடியாது. மாமியார் கொடுமையில் ரொம்பவும் கஷ்டப்பட்ட பெண். பாவம். ஒருநாள் மாமியார் எங்கேயோ வெளியே சென்றிருந்த நேரம் பார்த்து டெலிபோனில் இன்னொரு சிநேகிதியிடம் பேசும்போது மாமியாரை அலசு அலசு என்று — வெள்ளை வெளேர் சலவை சோப் ஏதுவும் இல்லாமல் — அலசி இருக்கிறாள். அதே நேரம் பார்த்து வெளியே பெண் வீட்டுக்குச் சென்றிருந்த மாமியார் வீட்டுக்குப் போன் செய்ய, எப்படியோ ஏசகுபீசகாய் இரண்டு லைன்களும் பின்னிக் கொள்ள மொத்த சம்பாஷணையும் மாமியார் காதில் விழுந்து வைத்தது. அன்று சபதம் செய்தவள்தான் மாமியார், பிறகு பிள்ளை வீட்டுப் பக்கமே போகவில்லை. தன் கஷ்டத்தைத் தீர்த்து வைத்த டெலிபோனுக்குப் பூசூட்டி, கற்பூரம் காட்டி, பிரதக்ஷிணம் வந்து வெள்ளிக்கிழமைதோறும் நமஸ்காரம்பண்ணுகிறாள் உமா. அப்பேர்ப்பட்ட டெலிபோன் இனிமேல் கோளாறு எதுவும் இல்லாமல் கச்சிதமாகத் தன் வேலையை மட்டும் செய்யும் என்றால் இவளைப் போன்ற எத்தனை பெண்களின் கஷ்டம் விடியாமலே போய் விடுமோ!

அவளை விடுங்கள். என் பக்கத்து வீட்டு மாமி பங்கஜம் தலையில் வைத்த கையை எடுக்கவே இல்லை. முன்னொரு காலத்தில் மாமா பொறுமையற்ற மகா முன்கோபக்காரராம். ஒரு தோசை சாப்பிட்டு முடிக்கு முன் அடுத்த தோசை தட்டில் வந்து கடக்கட விழவில்லையென்றால் தட்டு சமையலறையில் வந்து டணார் என்று விழுந்து விடுமாம். உத்தியோக உயர்வு வந்தபிறகு டெலிபோன் வீட்டுக்கு வந்தது. யாராலும் சாதிக்க முடியாத மகத்தான காரியத்தை ஒரே மாதத்தில் அது சாதித்து விட்டது. நூற்றுக்கணக்கான ராங் நம்பர்களுக்குப் பதில் சொல்லியும், ஒரே நம்பரை ஒன்றரை மணி நேரமாக டயல் செய்தும், இவ்வாறான பல நிர்ப்பந்தங்களில் மாமா அடியோடு மாறிப் போனார்.

''மெள்ள நிதானமாகப் பார்த்து வா. என்ன அவசரம் அடுத்த தோசைக்கு? அதற்குள் நான் பேப்பரில் ஒருபக்கம் படித்துவிட்டால் போயிற்று'' என்று அவரே மாமியிடம் சாத்விகமாகப் பேசுவதை என் காதாலேயே கேட்டிருக்கிறேன். டெலி



போன் சரியானால் மாமா என்ன ஆவாரோ என்று மாமிக்குக் காபரா.

என் பெரியப்பா பையன்கள் இரண்டு பேரும், ஒருவன் டாக்டராகவும் மற்றொருவன் வக்கீலாகவும் ஒரே வீட்டின் இருபக்கங்களில் பிராக்டிஸ் செய்கிறார்கள். ''கொர்ர்ர்ர்'' என்று டெலிபோன் ரிசீவர் திடீரென்று காதுக்குள் இரைச்சலிட்டதால் காது வலி ஏற்பட்ட பலருக்கு வைத்தியம் செய்து தேர்ந்து பெயர் போன ஈ.என்.டி. ஸ்பெஷலிஸ்ட் இந்தப் பெரியப்பா பிள்ளை. சில கேஸ்களில் செவிப்பறையே ஓட்டை விழுந்து செவிடான கேஸ்களும் இவனிடம் வருவதுண்டு. அவன் சளைப்பதில்லை. அப்படிப்பட்ட கேஸ்களை வக்கீலான அண்ணனுக்கு அனுப்பி விடுகிறான். டெலிபோன் டிபார்ட்





மெண்டின் மீது கேஸ் போட. இது தவிர பத்தாயிரத்துக்கும், பதினையாயிரத்துக்கும் பில் தயார் பண்ணிச் சம்பந்தா சம்பந்தமில்லாமல் கண்ட கண்ட நபருக்கெல்லாம் அனுப்பி வைக்கும் கம்ப்யூட்டர்கள் வேறு. இந்த பில்லைப் பார்த்து ஹார்ட் அட்டாக் வந்தவர்கள் மறுபடி டாக்டர் பில்லைப் பார்த்துச் சுதாரித்துக் கொண்டு பிறகு டெலிபோன் டிபார்ட்மெண்டின் மீது கேஸ்போட வக்கீலை நாடுகிறார்கள். மூலைக்கு மூலை பிள்ளையாரைப் பிரதிஷ்டை செய்வது போல் இந்த அண்ணன் தம்பி அனுமதிக்கப்பட்டால் டெலிபோனை பிரதிஷ்டை பண்ணிக் கும்பிடுவார்கள்.

சிலர் விஷயத்தில் டெலிபோன் பில் பத்து மடங்காக வருகிறதா. சிலர் விஷயத்தில் நேர் எதிர். மாடி வீட்டுப் பெண் சுபாஷிணியின் காதலன் பெங்களூரில் புரொபேஷனர். மணிக்கணக்காகத் தினமும்



இவள் அவனுக்கு போனில் கிசுகிசுக்கத் தவறுவதில்லை. இந்த அழகில் எஸ். டி. டி. வேறு. எப்படிக் கட்டுப்படி ஆகும் என்ற கவலையை வாய் விட்டே கேட்டுவிட்டேன். "அதென்னவோ தெரியலே ஆன்ட்டி. எங்க போன்லே எவ்வளவு எஸ். டி. டி. கால் பண்ணினாக் கூட பில் ஒரு க்வார்ட்டருக்கு மினிமம் சார்ஜ்தான் வருது. நல்லதாப் போச்சுன்னு நான் தெனமும் பண்ணிக் கிட்டே இருக்கேன். அடுத்த மாதம் தீபக் டிரான்ஸ்பர்லே மெட்ராஸ் வந்துரும். நான் எஸ். டி. டி. போடுவதும் நின்னுடும். அப்புறம் ஃபோன் பில் ஏறிடுமோன்னு ஒரே கவலையா இருக்கு!" என்றாள்.

இளைஞர்களிடம் மட்டும் அல்ல. முதியவர்களிடம் கூட இந்த டெலிபோனுக்குத்தான் என்ன இரக்கம் பாருங்கள். என் கணவரின் ஒன்றுவிட்ட மாமா ரிடையரான பின் கடற்கரையோரமாக ஆசிரமம் மாதிரி அழகான பங்களா கட்டிக் கொண்டு தான் உண்டு, தன் நூலகம் உண்டு என்று இருக்கிறார். மாமியும் போய்ச் சேர்ந்து விட்டார். பாவம் மாமா, பேச்சுத்துணைக்கு என்ன செய்வார் என்று ஒருமுறை அவரிடமே நான் வருத்தம் தெரிவித்தேன். மாமா பதில் அப்படியே தருகிறேன்.

"அதொன்றும் கஷ்டமில்லே. இந்த டெலிபோன் இருக்கும் போது என்ன கவலே? அப்பப்போ எடுத்துக் காதுல வச்சுண்டாப்



போதும். யாராவது ரெண்டு பேர் பேசிண்டு இருப்பா. ஆனந்தமாக் கேட்டுண்டே இருக்கலாம். சுமுகமான மனுஷாளாத் தோணினா நாமும் பேச்சுலே கலந்துக்கலாம். சில சமயம் நாலஞ்சு பேராக் கூடப் பேசறதுண்டு. எனக்கு எத்தனை பேர் இதுனால ஸ்நேகிதமாயிட்டா தெரியுமோ? ஆனா ஒரு கஷ்டம் என்னன்னா அப்புறமா அவா என் நம்பரை டயல் பண்ணி என்னோட பேச ட்ரை பண்ணா நம்பர் கெடைக்க மாட்டேங்கறதாம். நேரேயே வந்து சொன்னா. லோகத்துலே மனுஷாளுக்கு எவ்வளவு விதமான பிரச்னைகள் கவலைகள் இருக்குங்கறது இந்த சம்பாஷணைகளிலே தெரியறது. எனக்குப் பொழுது போக்கும் ஆச்சு."

தனியார் வீடுகளில் இப்படி என்றால் அலுவலகங்களில் வேறுவிதமான நிகழ்ச்சிகள். பொது நிறுவனம் ஒன்றில் மிக முக்கிய பதவி வகிக்கும் ஒரு எக்ஸிக்யூடிவ் அவருடைய பியூனை அழைத்து ஒரு நம்பரை டயல் பண்ணித் தரச் சொல்லி இருக்கிறார். பி. பி. எக்ஸ். போர்டு வேலை செய்யாததால் ஆபரேட்டர் மூலம் வெளித் தொடர்பு கிடைக்கவில்லை. எனவே அவரது மேஜை மேல் இருந்த நேரடித் தொடர்பு டெலிபோன் மூலம் பேச விரும்பி இருக்கிறார். பியூன் சிறிது நேரம் டயல் பண்ணிப் பார்த்தான்.

"எங்கேஜ்டாவே இருக்குங்க சார்."

"பரவாயில்லப்பா. கொஞ்சம் விடாம ட்ரை பண்ணு. அர்ஜன்ட் விஷயம்ப்பா."

சற்று நேரம் பொறுத்து. "மொத நம்பர் பண்றப்பவே எங்கேஜ்ட் சத்தம் கூவுது சார்."

"அப்படின்னா 199 ட்ரை பண்ணி நம்பர் தரச் சொல்லுப்பா."

பியூன் 199 டயல் பண்ணி வெகுநேரம் கழித்து 198 கிடைத்து. "கம்ப்ளெயின்ட்ஸ்" என்று சோர்ந்த குரல் கேட்டது. பியூன் பயந்து போய் "அய்யய்யோ அஸிஸ்டென்ஸ் டயல் பண்ணினா கம்ப்ளெயின்ட் பண்றாங்க சார்" என்று வைக்கப்போனான். இதாவது கிடைத்ததே என்று பாய்ந்து ரிஸீவரைப் பிடுங்கி அந்த எக்ஸிக்யூட்டிவ் "தயவு செய்து அஸிஸ்டென்ஸுக்குக் கனெக்ஷன் தர முடியுமா?" என்று கம்ப்ளெயின்டிடம் கெஞ்சி இருக்கிறார். "முடியாது" என்று மறுமுனை சைவிரித்து விட்டது. "அஸிஸ்டென்ஸ் நம்பர் கிடைப்பதற்கு அஸிஸ்டென்ஸ் நம்பர் உண்டா" என்று பதற்றத்துடன் மறுபடியும் கெஞ்சி இருக்

கிறார். ''இல்லை'' என்று இரக்கமில்லாமல் மொழிந்து விட்டது கம்ப்ளெயிண்ட்ஸ் அசரீரி.

மறுபடியும் பியூனை அழைத்து முதலில் தந்த நம்பரையும் அஸிஸ்டென்ஸ் நம்பரையும் மாறி, மாறி டயல் பண்ணச் சொன்னார். கிட்டத்தட்ட இரண்டு மணிநேரம் போராடிய பிறகு வெற்றி. நம்பர் கிடைத்தே விட்டது. அதற்குள் பிரச்னை வேறு பக்கம் திரும்பி விட்டது. வெளியேறிய பியூன் மறுபடியும் யூனியன் தலைவரை அழைத்துக் கொண்டுதான் நுழைந்தான்.

1. ஓயாது டயல் செய்ததால் ஆள்காட்டி விரல் வீங்கி ரத்தம் கட்டிப்போய் விட்டது.
2. எங்கேஜ்ட் சப்தம் கேட்டுக் கேட்டுக் காதில் ஒரு அலை ஓசை – கல்கி எழுதியதல்ல – ஒலிக்கத் தொடங்கி விட்டது.
3. யந்திரத்துடன் போராடிப் போராடிக் கிட்டத்தட்ட பாய் பிறாண்டும் நிலைக்குக் கொண்டுபோய் விட்டது.
4. இப்படிப்பட்ட மறைமுகக் கொடுமைகளை, அதாவது ஹராஸ்மெண்டை யூனியன் அனுமதிக்காது..

என்று பலவிதமான கோஷங்கள் கிளம்பின. கொடிகள் அசைந்தன. முடிவாக மானேஜ்மெண்டும் யூனியனிலும் ஒரு உடன்படிக்கைக்கு வந்தன. அதாவது

1. டெலிபோன் டயலர் என்று ஒரு புதுப் பதவி பியூன்களிடையே ஏற்படுத்தப் பட்டது.
2. அதற்குத் தனி அலவன்ஸ் உண்டு.
3. அந்த வேலைக்கு யாரை நியமிப்பது என்று தனி ஸீனியாரிடி லிஸ்ட் தயாராகியது.
4. ஒருநாளைக்கு இத்தனை நம்பர்கள்தான் டயல் செய்து தரப்படும் என்று நிர்ணயிக்கப்பட்டது.

இந்த நிலைமையில் டெலிபோன்கள் எல்லாம் சரிவர இயங்கத் தொடங்கி விட்டால் இத்தனையும் என்ன ஆவது? ஒரு பதவியே பறிபோய் விடுமே!

ஏன் என்னையே எடுத்துக் கொள்ளுங்கள். எங்கள் வீட்டில் போனைப் பூட்டுவதே இல்லை. ஏன் பூட்ட வேண்டும்? டயல் செய்தால் எந்த நம்பரும் கிடைக்காதே! ஆனால் வருகிற கால் வந்து விடும்! எங்கள் வீட்டிலும் போன் இருக்கிறது என்ற பெருமைக்குப் பெருமை. செலவும் கிடையாது! புது எக்ஸ்சேஞ்ச் வந்தால் எல்லா டெலிபோன்களும் ஒரு கோளாறும் இல்லாமல் வேலை செய்யத் தொடங்கினால் ஓ. சி. போன் போடுகிறவர்கள் அதிகமாவார்கள். பில் எக்கச்சக்கமாக வரும். டெலிபோனை சரண்டர் செய்வதாக எழுதிக் கொடுத்து விடலாமா என்று கூட யோசிக்கிறோம்.

ஒன்றைச் சொல்ல விட்டுவிட்டேனே. என் சிநேகிதி நளினாவுக்கு எதிலும் புதுமை வேண்டும். ''இனி பிழைக்காது'' என்று கைவிட்ட கேஸாக உயிர் துறந்த டெலிபோனை அவள் இகிபானா செய்வதற்குப் பயன்படுத்தி மலர்களைச் செருகி வரவேற்பறையில் வைத்திருப்பது எல்லோர் கண்களையும் கவருவதாக இருக்கிறது. இனிமேல் அவள் என்ன செய்வாள்? பாவம்! இவர்களுக்கெல்லாம் ஆறுதலளிக்கும் ஒரே ஒரு விஷயம் புதிய எக்ஸ்சேஞ்சுகள் திறக்கப்பட்டாலும் டெலிபோன் இயங்குகிற விதத்தில் விசேஷமான அபிவிருத்தி ஏதும் ஏற்பட்டு விடாது என்ற நம்பிக்கைதான். நம்பிக்கை பொய்க்காது என்பதற்கு டெலிபோனே சாட்சி!

மாயம் அம்மா!


கன்னியாகுமரி கடற்கரையில் ஒரு மாயம். 150 வயதுக் கிழவி ஒருத்தி கடற்கரைத் தேவதை போல உலவி வருகிறார். பெயர் மாயம்மா. இவரை எப்பொழுதுமே முப்பது நாய்கள் சுற்றிச் சுற்றி வருகின்றன. காவல் காக்கின்றன. மாயம்மா அவற்றைத் தன் குழந்தைகளைப் போலப் பாவித்து மடியிலும், தோளிலும் ஏறி விளையாட அனுமதிக்கிறார். பக்தர்கள் 'கன்னியாகுமரி தேவதை' என இவரை அழைக்கிறார்கள். பெரிய தொழில் அதிபர்கள் தங்கள் தொழிலைத் துவக்குவதற்கு முன்பு மாயம்மாவின் கால்களைத் தொட்டுக் கும்பிட வருகிறார்கள்! பெண்கள் தங்கள் தாலியை மாயம்மாவின் கையில் படும்படி வைத்து ஆசி பெறுகிறார்கள்.

காலையில் எழுந்ததும் கடற்கரையில் உள்ள சங்குகளையும், கிளிஞ்சல்களையும் பொறுக்கி அவற்றை எரிப்பதுதான் இவரது பூஜை! வாய் திறந்து பேசுவதில்லை. முணுமுணுத்தவாறே பக்தர்களுக்குக் குங்குமம் இடுகிறார்.

ஆதாரம்: வீக் எண்ட்.

—இரைஞானி.





கல்கி

ஏப்ரல் 15உ

சித்திரைச் சிறப்பிதழில்

மூலக் கனல்

நா·பார்த்தசாரதியின்

தொடர்கதை

இன்றைய சமுதாயத்தின்
பிரதிபலிப்பு

இல்லறம் எனும் நல்லறம்

ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்கவேண்டிய

இலவச இணைப்பு

தெய்வ தரிசனம் - ஆனந்தி

எழுதும் தொடர் கட்டுரைகள்

முழுநீள நாவல்; மற்றும் பல புதிய பகுதிகள்.



- பி. ராமகிருஷ்ணன், மேல கிருஷ்ணன்புதூர்.

? மகளிர் பல்கலைக்கழகத்துக்கு ஒளவையார் பெயரை சூட்டியிருந்தால் எப்படி இருக்கும்?

! சப்பென்று இருந்திருக்கும். இப்போதோ பரபரப்புடன் பேசப்பட்டு முதல்வருக்கும் பிராபல்யம் அளித்திருக்கிறது. அன்னையின் வருகையால் அநாதைகளை விட அரசியல்வாதிக்கே அதிக லாபம்.

- ப. மூர்த்தி, பங்களூர்.

? தமிழக பஞ்சாயத்துத் தேர்தல் தற்போதைய அறிவிப்பின்படி நடக்கும் என நம்புகிறீர்களா?

! நாலாமிடத்தில் சுக்கிரனும் எட்டாமிடத்தில் திங்களும்... ஸாரி, எனக்கு சோதிடம் தெரியாது. ஆனால் ஒன்று. சட்டசபையிலேயே அறிவித்து விட்டதால் இனிப் பின் வாங்குவது சிரமம்; ரொம்பத் தலைக்குனிவு. எனவே 95 சதம் நடந்தே விடும்.

- மேலக்கோட்டை இரவிதாசன், நாகப்பட்டினம்.

? 704 வோட்டு வித்தியாசத்தில் ஜனதா தலைவர் தேர்தலில் சந்திரசேகர் வெற்றி பெற்றிருந்தும் அதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூறும் சுப்பிரமணிய சுவாமி பற்றி?

! உட்கட்சி ஜனநாயகமும் விவாதங்களும் கட்சிக்கும் நாட்டுக்கும் நல்லதே செய்யும். சிந்தனையைக் கடைந்து தெளிவான கொள்கை என்ற வெண்ணெய் திரட்டலாம். ஆனால் இத்தேர்தலில் 'மோசடி நடந்திருக்கிறது' என்று சு. சு. கூறிய போது அளவு மீறி விட்டார். எனினும் சந்திரசேகர் தலைமையை ஏற்கிறேன்' 'என்றபோது சிறந்த வழிகாட்டியாகிறார்.



- தேர்தல் மோசடி?



- விக்கெட் வேங்கை

- ஆர். பெருமாள், திருச்சி 2.

? டெஸ்ட் மாட்ச்களில் 500 விக்கெட்டுகள் வீழ்த்திப்புள்ள வெங்கட்ராகவன் பற்றி?...

! அவரவர் ரெண்டுமூன்று என்று புத்தகங்கள் எழுதி விட்டார்கள், தத்தமது கிரிக்கெட் வாழ்க்கை அனுபவங்களை வைத்து. இவர் என்னடா வென்றால், 'நான் இன்னும் ஃபீல்டிலே இருக்கிறேன் ஸார்' என்று கூறிக் கொண்டே நழுவுகிறார். உங்களைப் போன்ற ரசிகர்கள் கடிதம் எழுதி வற்புறுத்தலாம். திறமையாளர்கள் தங்கள் அனுபவங்களைப் பிறருடன் பகிர்ந்து கொள்வது புதிய ஆற்றல்களை வளர்க்கும்.

- ஆ. சந்திரசேகரன், லால்குடி

? காஞ்சிப் பெரியவருக்கு அரசு வரவேற்பு கொடுத்தது தவறு என்று கருணாநிதி கூறியிருப்பதுபற்றி...?

! நானே இவர் பதவிக்கு வந்தால் தமக்கு மாபெரும் வரவேற்பு கொடுப்பார் என்று நம்பியிருக்கக் கூடிய மதுரை ஆதீனத்துக்கு ரொம்பக் கவலையை உண்டாக்கியிருக்கலாம், கலைஞரின் இந்தப் பேச்சு.

- என். சண்முகம், உள்ளி.

? அந்துலேயைக் காப்பாற்ற 150 சட்டசபை உறுப்பினர்கள் பிரதமருக்குக் கடிதம் எழுதியுள்ளது பற்றி...?

! அந்துலே ஊழலை விட அதிகமாகச் சிரிப்பாய்ச் சிரிக்கும் விஷயம் ஒன்று உண்டென்றால் அவரை காப்பாற்ற இ. காங்கிரஸ் மேலிடம் எடுத்துக் கொள்ளும் முயற்சி தான். லஞ்ச ஊழல் சட்டத்தை மாற்ற மாநில அரசு மசோதா கொணர்ந்து நிறைவேற்ற வேண்டும் என்று கூறி மகாராஷ்டிர



- கவலையோ கவலை?

முதல்வரைச் சம்மதிக்க வைத்து, அவரும் வேண்டா வெறுப்பாகக் காரியத்தில் இறங்கிய பிறகு திடீரென்று இதனால் ஏற்படக் கூடிய அபக்கியாதியை உணர்ந்து, 'முதல்வர் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை' என்று உளறிக் கொட்டி அவரைத் தர்ம சங்கடத்தில் ஆழ்த்தி...... போதுமைய்யாபோதும், வெட்கக்கேடு!

- ஏ. சுகுமார், காஞ்சிபுரம்.

? கூட்டு தி. மு. க. வுடனு,

எந்த நடிகைக்கு டாக்டர் பட்டம்

நீங்கள் கேட்டவை — தராசு தரலாம்?

அ. தி. மு. க. வுடன் என்று யோசிக்கும் இ. காங்கிரஸை தன்னைத் தமிழக இ. காங்கிரஸ் தலைவருக்கிறால், ஆனும் கட்சியாக்குவேன் என்று சிவாஜி கூறியிருப்பது பற்றி...?

! இதை மட்டுமா சொன்னார்? 'அம்மையார் என்னைப் பாழுங்கிணற்றில் விழுந்து சாகச் சொன்னால் சாவேன்' என்றும் கூறியுள்ளாரே!

O பொன். நெடுமாறன், வளவனூர்.

? பி. எச். இ. எல். இருக்க ஹாங்காங்கிலிருந்து நெய்வேலிக்கு பாய்லர் தருவிப்பது எவ்வகை நியாயம்?

! ஸ்விஸ் பாங்க் நியாயமாக இருக்கலாம்.

O எம். சம்பத், வேலாயுதம் பாளையம்.

? பாக்கியராஜ் பூர்ணிமா திருமணம் பற்றி குழந்தைகளுக்குப்பரீட்சையில் கேள்வி கேட்கப்படுவது அவசியமா?



O காப்பாற்றப்படுவோரா?

! ஆட்சியாளரைத் திருப்திப்படுத்த அசட்டுத்தனத்துடன்சில அப்பாவிகள் நடந்து கொள்வதில் வியப்பில்லை. 'இதெல்லாம் கூடாது' என்று அழுத்தம் திருத்தமாகக் கூறி நல்வழிப் படுத்தாமல் இவற்றை ஊக்குவிக்கும் விதமாக அமைச்சர்கள் பேசுவது தான் விசனத்துக்கும் கண்டனத்துக்கும் உரியது.

O கார்த்தை து. சுவாமிநாதன், தஞ்சை.

நற்போது எந்த நடிகைக்கு டாக்டர் பட்டம் தரலாம்?

! மனோரமா.

O ஆர். எஸ். மணி, கோவை.

? பாக்கியராஜ் பூர்ணிமா திருமணத்துக்கு எம்.ஜி.ஆர் சென்றது பற்றித் தங்கள் பதில் மறுபடி Biased ஆகத்தானிருக்கிறது... ஆல வட்டம் போடுங்கள்...... கெட்ட கேட்டிற்கு இல்லண்டி ரேட்டட் விக்கியைக் குறை சொல்ல வாயிருக்கிறதே...?

! நண்பரே, என்னிடமிருந்து கருத்து மாறுபடவும் அதை வெளியிடவும் தங்களுக்கு உரிமை உண்டு. அதை மதிக்கிறேன். ஆனால் அதற்காகக் கடித்தும் நிறைய விஷத்தைக் கக்காதீர்கள். எனக்கு யாரிடமும் விரோதமுமில்லை; விசேஷ பற்றுதலும் இல்லை. வாழ்த்தினாலும் குறை கூறினாலும் நட்பின் அடிப்படையிலேயே எழுதி வருகிறேன்.

O பி. ஆர். பார்த்தசாரதி, மன்னார்குடி. ★

? பெருந்துகளில் பலதரப்பட்ட மனநிலையில்பயணிகள் இருக்க அனைவர் மீதும் காஸெட் டேப் ரிகார்டு பாடல்கள் திணிக்கப்படுகிறதே...?

O சாகவர் குமார்!



O [illegible]



தனித்தனியே ஹெட் ஃபோன்கள் வழங்கி, வேண்டியவர் கேட்கலாம், வேண்டாதவர்கள் தவிர்க்கலாம் என்ற அமைப்பு இருந்தாலொழிய இதற்குத் தடை விதிக்கப்பட வேண்டும்.

O ரம்யா, கோவை.

? தியேட்டரில் கால் மிதி அனுபவம் உண்டா?

! ஆசனத்தை மடக்கி விட்டு எழுந்து நின்று விடுவேன். கால் தப்பித்துக் கொள்ளும்.

O எம். எச். சாதிக்பாட்சா, நீடூர்.

? உங்கள் பதில் ஒன்று, நிர்ப்பந்தமாக எல்லா மதத்தினரும் குடும்பக் கட்டுப்பாடு சட்டத்தை ஏற்கவேண்டும் என்று மறைமுகமாகக் கூறுவது போல் உள்ளதே?

! கு. க.வில் சட்டமுமில்லை நிர்ப்பந்தமும் இல்லை. பிரசாரம் தான் உண்டு. மனமாற்றத்தை உருவாக்கத்தான் முயற்சி.

O பி. ராமகிருஷ்ணன், மேல கிருஷ்ணன் புதூர்.

? இப்போது அரசியல் தந்திரம் அதிகம் தெரிந்தவர் யார்?

! கருணாநிதி. மேலவைத் தேர்தலுக்கு நிற்பதன் மூலம் 1. சட்டசபையில் வலுவானஎதிர்ப்பு பணி நடக்கவில்லைஎன்ற குறையை நீக்கி; 2. பொதுத் தேர்தலுக்கு தமது தொகுதியைக் கவனித்துக் கொண்டிராமல் அனைத்துத் தொகுதியிலும் பிரசாரம் செய்யவாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டு; 3. மேலவைத் தேர்தலில் நின்று எம். எல். ஸி. ஆக கட்சிக்குள் நடக்கக் கூடிய பதவிப் போட்டியையும் தவிர்த்து விட்டார்!

O லட்சுமிசிவம், சென்னை.

? ஜெயலலிதா எம்.பி. ஆனால் என்ன செய்வார்?

! ராஜ்ய சபையை அழகுபடுத்துவார்.

★ ரூ. 10 பரிசு பெறுபவர்:
பி. ஆர். பார்த்தசாரதி,
33, ஹரித்ராநதி தெற்கு,
மன்னார்குடி, தஞ்சை மா.வ.

பயன் தந்த பழமொழி

ரூ. 15,000 கொடுத்தால் வெளிநாட்டில் வேலையும் சுகபோக வாழ்வும் கிடைக்கும் என்று உத்தரவாதம் தந்தார் ஏஜண்ட். ரூ. 500 சம்பள வேலையை ராஜினாமா செய்துவிட்டுப் போக முற்பட்ட என்னைப் பெற்றோர் தடுத்து நிறுத்தினர். நண்பர்கள் சிலர் கையிலிருந்த வேலையை விட்டுவிட்டு ஏஜெண்டை நம்பி பம்பாய் சென்று நட்சத்திர ஹோட்டலில் தங்கினர். சீக்கிரமே ஏஜெண்ட் தலைமறைவானான். நட்சத்திர ஹோட்டலிலிருந்து வெளியேற்றப்பட்ட நண்பர்கள் வேலையிழந்து நடுத்தெருவில் நின்றார்கள். நானும் ஏஜெண்டை நம்பி வேலையை விட்டிருந்தால் அரசனை நம்பி புருஷனைக் கைவிட்ட கதையாய் இருந்திருக்கும்.

வேலூர். வெ. கிருஷ்ணன்.

புகுந்த வீட்டில் புதுப் பெண்ணாய் நுழைந்தசமயம். மாதத்தின் முதல் இருபது நாட்கள் மாமியார் சமைப்



பார்கள். பிறகு பத்து நாட்கள் தான் என் சமையல். அந்த இருபது நாட்களில் வாங்கி வைத்த சாமான்களைக் காலி செய்து விடுவார் மாமியார். கடைசி பத்து நாட்களில் என் சமையல் வாயில் வைக்க வழங்காது! மாமியாரின் சமையலுக்கே புகழ் மாலைகள் கிடைக்கும். அப்போது என் தாயார் அடிக்கடி சொல்லும் "அரியா

இருந்தா அரியாப் பொண்ணும் கறி சமைப்பா" எனச் சொன்னது நினைவுக்கு வந்து கோபத்தைத் தணிக்கும்.

வளவனூர்.

என். சீதாலட்சுமி.

1962-ம் வருஷம் நானும், என் நண்பர்களும் பம்பாய் ஏர்-இந்தியா காலனியில் ஒரு சிறிய அறையில் ஒரு பள்ளியை 10 குழந்தைகளுடன் துவக்கினோம். 10 வருஷகாலம் ராப்பகல் ஓடியாடிப்பள்ளியின் வளர்ச்சிக்கு உழைத்தேன். இன்று ஏர்-இந்தியா மாடர்ன் ஸ்கூல் 2000



குழந்தைகளுடன், 2 மாடிக் கட்டிடத்தில் 60 ஆசிரியர்களுடன் நடந்து வருகிறது.

இந்த பத்து வருடங்களும் என் மூன்று குழந்தைகளின் படிப்பை கவனிக்கவே முடியவில்லை. சில சமயம் யார் எந்த வகுப்பில் படிக்கிறார்கள் என்று கூடச் சொல்லத் தெரியாமல் இருந்தது.

என் தாயாரும், மனைவியும் அடிக்கடி இந்தக் குறையை எடுத்துச் சொல்வார்கள். நான் பதிலுக்கு 'ஊரார்க் குழந்தையை ஊட்டி வளர்த்தால் தன் குழந்தை தானே வளரும்'' என்ற பழமொழியைக் கூறுவேன். என் நம்பிக்கை வீண் போகவில்லை. என் மூத்த பையன் சமீபத்தில் சார்ட்டர்ட் அக்கௌண்டண்ட் (சி.ஏ.) பரீட்சை பாஸ் செய்தான். இரண்டாவது பிள்ளை இன்ஜினியரிங் படிக்கிறான். கடைசி பெண் பி.எஸ்ஸி (நர்ஸிங்)ஸ்காலர்ஷிப்பில் படிக்கிறாள்.

பம்பாய். வி. பிச்சுமணி.




நான் அந்தப் பள்ளிக்குத் தலைமையாசிரியையாகப் பதவியேற்று பள்ளிக் கட்டிடத்தைச் சுற்றிப்பார்க்கும்போதே எனக்குப் பேரதிர்ச்சி காத்திருந்தது. வகுப்பறைகள், வெளிச் சுவர்கள், கழிப்பிடங்கள், ஆகிய எல்லா இடங்களிலும் ஒரே கிறுக்கல்மயம்! உடனே பள்ளிக்கட்டிடம் முழுவதற்கும் வெள்ளை அடிக்க ஏற்பாடு செய்தேன். அசிங்க எழுத்துக்கள் ஆபாசப் படங்கள் ஒழிந்தன! சரி, மீண்டும் இவ்வாறு செய்யாதபடி மாணவர்களைத் தடுப்பது எப்படி? அப்போதுதான் ஓர் அருமையான ஆங்கிலப் பழமொழியைப் பள்ளியின் பல இடங்களிலும் அட்டைகளில், எழுதி மாட்டி வைத்தேன். அதற்குச் சரியான பலன் இருந்தது. அந்தப் பழமொழி, சுவர், 'முட்டாளின் காகிதம்' என்பதுதான்!

நெய்வேலி.

கே. வைத்தியநாதேஸ்வரன்


ரெக்ஸோனா உங்கள் சருமத்தைப் பராமரிக்கிறது...





மென்மையோடு மெருகுமிளிர வைத்திருக்கிறது.

நாலு இயற்கைத் தைலங்கள்
இணைந்துள்ளன ரெக்ஸோனாவிலே:
ஹூபுஷா (தேவதாரம்),
கருவா, கிராம்பு, சரளம்.
மென்மையோடு மேனிமின்னக்
குளித்தெழுவீர் ரெக்ஸோனா
சோப்பினால். நெஞ்சம்
கவரும் நறுமணமுடன்
நேரமெல்லாம் உங்கள் மீது
மணக்கும் ரெக்ஸோனா,
உங்கள் மேனியழகைப் பேண
இயற்கையான வழி.



ரெக்ஸோனா உங்கள் சருமத்திற்கு நல்லது.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

லின்டாஸ்-RX.78-2015 TM

சொல் ஒன்று வேண்டும்

11

மீண்டும் மீண்டும் விஜியின் கண் முன்னால் அந்தப் பெண்ணே வந்து நிற்கிறாள்.

'என்ன சொன்னாள் அவ...'

நினைத்துப் பார்க்கையில், வாழ்க்கையே வெறுத்துப் போயிற்று அவளுக்கு.

'உமா' என்று சொன்னாள்...

இல்லையில்லை... என்னையே உமா என்று தான் அழைத்தாள். அப்படியானால், இதற்கு முன் அவள், உமாவைச் சந்தித்ததே இல்லை. உமா யாரென்றே தெரியாதவளுக்கு—உமாவிடம் சொல்ல என்ன செய்தி இருந்திருக்கப் போகிறது...

ஏதோ— முக்கியமான செய்திதான். இல்லாவிட்டால் அந்தக் கண்களும், முகமும் அத்தனை பரபரத்துப் போயிருக்காது....

யோசித்தபடி வீடு திரும்பியவள், நேரே ராஜாவின் அறைக்குப் போய், புத்தக அலமாரியின் மேல் தட்டிலிருந்த ராஜா வேலை பார்க்கும் நி...வனத்தின் ஆண்டு விழா மலரைப் புரட்டி, அதிலிருந்த புகைப்படங்களை உற்றுப் பார்க்கிறாள்...

ஊஹும்... அதில் அவள் இல்லை....

அடுத்தாற்போல, ராஜாவின் திருமணப் புகைப்பட ஆல்பம்,

அதிலும் இல்லை....

கட்டிலில் சுருண்டுக் கிடந்த உமாவின் அருகில் சோர்வுடன் வந்தமர்கிறாள் அவள்.

'உனக்காக ஒரு பெண் முக்கியமான செய்தி ஒன்றை என்னிடம் சொன்னாள். என்னவென்று அறிந்து கொள்ள முடியாத ஜடமாக உன்னெதிரில் வந்து நிற்கிறேன்...'

இதயம், ஊமைப் புலம்பலாய்ப் புலம்புகிறது. ஊமைப் புலம்பல்தான். வேறென்ன..

அந்த அறையின் கண்ணாடி வழியே கூடத்தின் ஒரு பகுதி பளீரெனத் தெரிய...

கூடத்து சோபாவில் அலுப்புடன் உட்கார்ந்திருக்கிறாள் மீனாட்சி. எத்திராஜ் காய்கறிக் கூடைகளையும், பழக் கூடைகளையும் சுறுசுறுவென உள்ளே கொண்டு வந்து வைத்துக் கொண்டிருக்கிறான்...

இவனைப் பார்த்ததுமே உள்ளுக்குள் ஒரு சந்தேகம் முளை விடாமலில்லை விஜிக்கு.

'அந்தப் பெண் என்னுடன் பேசினதை இவன் பார்த்திருப்பானோ...'

'நான் பார்க்கும் போது எவனோ ஒரு ஆளிடம் நின்று பேசிக் கொண்டிருந்தானே. சிகரெட்டுக்கு நெருப்பு வாங்கிப் பற்ற வைத்துக் கொண்டிருந்தானே... எல்லாம் யதார்த்தமானதா — இல்லை இவன் போலீசுக்கு உள் கையா...'

அவள் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே — எத்திராஜ், வளையல்கள் நிறைந்த அட்டைப் பெட்டியை, மீனாட்சியின் எதிரில் வைத்துவிட்டுக் கைகட்டி நிற்கிறான்.

மீனாட்சி, 'அவ்வளவுதான்' என்பது போலத் தலையசைக்கிறாள். அவன் தயங்கித் தயங்கி வெளியேறுகிறான்.

'இது — இவனது சொந்த முகமில்லை. இவனுள் இன்னொரு முகம் — இவனின் நிஜமான முகம் — ஒளிந்து கொண்டிருக்கிறது... அது எப்படிப்பட்டது...'

விஜியின் வளைந்த புருவங்கள் முடிச்சிடுகிறது. 'இத்தனை வருஷ அனுபவத்தில்— இவன் ஒருவனிடம்தான் நாம் ஏமாந்து கொண்டிருக்கிறோம்' என்கிற நினைப்பு.... அவமானத்தை உண்டு பண்ணுவதாக...

எத்தனை நேரம்தான் அப்படியே உட்கார்ந்திருந்தாளோ... தனக்காக இல்லாவிடினும், பிள்ளைத்தாய்ச்சிப்பெண் உமாவுக்காகவாவது சாப்பிடப் போய் உட்காருவாள் விஜி. அன்றிரவு அதுவும் இல்லை.

இந்தப் பெண்கள் இருவரும் வெகு நேரமாகியும் வெளியே வராதது கண்டு,

---

'காந்தி' படத்தில் காந்திஜி —கஸ்தூரிபாய் வேடங்களில் நடிப்பதற்கு மூன்று ஜோடிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அந்த ஜோடிகள்: 'நசுருத்தீன் ஷா — சுமிதா படேல்; பக்திபாவே— ஜான் ஹர்ட்; ரோஹிணி — பென் கிங்ஸ்லி. இந்த மூன்று ஜோடிகளுக்கும் காந்திஜி கஸ்தூரி பாயைக் கழிவறையைச் சுத்தம் செய்யச்சொல்ல அவர் மறுக்கும் காட்சியை விளக்கி நடிக்கச் சொல்லிப் படமெடுத்தார்கள். மூன்று ஜோடிகளும் நடித்த அந்தக் காட்சியைப் பல தடவை பார்த்து இறுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜோடிதான்: ரோஹிணி — பென் கிங்ஸ்லி.

—'பாதுஷா'





அனுராதாரமணன்

மீனாட்சியே இவர்களைத் தேடிக் கொண்டு வருகிறாள்.

''சாப்பிடலையா இரண்டு பேரும்.... எழுந்து வாங்க...''

''.......''

''பிள்ளைத்தாச்சிப் பொண்ணு... எத்தனை நேரம் தான் பட்டினி கிடப்பே.... உன்னால இவனும் பாரு... கொலைப் பட்டினி கிடக்கா...''

''எனக்குப் பசியே இல்லே அத்தை.... விட்டுடுங்க...''

உமா, அழுதபடி கைகூப்ப...

''ஐயோ, அங்கே சாப்பாட்டு ஹால்லே அரை மணி நேரமா உங்க மாமா அல்லாடிக் கிட்டிருக்காரு... வேண்டியிருக்கோ — இல்லையோ... ஒரு கவளம் உருட்டிப் போட்டுட்டு வந்திரும்மா. எல்லாரும் பிடிச்சா சாப்பிடறோம்...''

மீனாட்சி, விஜியின் தலையைக் கோதி, அவனையும், உமாவையும் இரு கைகளாலும் அணைத்து, தூக்கி எழுப்ப முயற்சி செய்ய...

''என்ன சொல்றீங்க...''

பரந்தாமனே, அந்த அறை வாசலில் நின்று எட்டிப் பார்த்தபடி கேட்கிறார்...

''ஒண்ணுமில்லீங்க...''

மீனாட்சி ஏதோ சமாதானமாய்ச்சொல்ல முயலும் பொழுதே உமா 'சட்'டென எழுந்து நிற்கிறாள்.

பரந்தாமன் அவளையே கூர்ந்து பார்க்கிறார்... முகத்தில் கவலை படருகிறது.

'என்ன பெண் இவ... ஓடிப் போனவனுக்காக இப்படித் தன்னையே வருத்திட்டு.... இப்படித் தவிக்க நிக்கறவகிட்டே, இன்னிக்கு மேலிடத்துலயிருந்து எனக்கு வந்திருக்கற உத்தரவை எப்படிச் சொல்லுவேன்...'

கமிஷனரின் உத்தரவு, அவரையே பொறி கலங்கச் செய்து விட்டதே...

''மிஸ்டர் பரந்தாமன்...''

''எஸ், சார்...''

''உங்க மகனைப் பற்றி ஏதாவது துப்பு கிடைச்சுதா...''

''இன்னும் எதுவும் கிடைக்கலே...''

''இது வரைக்கும் நீங்க இந்த கேஸ்லே சம்பந்தப்படாம ஒதுங்கியே இருக்கீங்கன்னு நினைக்கறேன்...''

மலை போன்ற பரந்தாமன், அவர் முன் தலைகுனிந்து நின்றார். அவமானத்தில் கன்னத்துச் சதை மாத்திரம் 'விடுவிடு'வெனத் துடித்தது.

''சாதாரணமா நீங்க எடுத்துட்ட கேஸ் எதுவுமே ஒரு வாரத்துக்குள்ளே ஸால்வ் ஆயிடும். இந்த கேஸை நான் இதுவரைக்கும் உங்க கிட்ட ஒப்படைக்காததற்குக் காரணம் — நீங்க கொலையாளியோட மிக நெருங்கின உறவுங்கறதாலே தான். ஆனா— இதையே மேலிடத்துல ரொம்பத் தப்பாய்ப் பேசறாங்க. நான் என்னமோ, உங்களுக்காகத் தனிச் சலுகை கொடுத்திருக்கிறதா வதந்தி நிலவறது...''

''சார்...''

''ஒரு நிமிஷம்... இந்த மாதிரிப் பேச்சுக்கள் என்னைப் பாதிக்கறதை விடவும், உங்க கௌரவத்தைத்தான் ரொம்பவும் பாதிக்கறதா நான் வருத்தப்படறேன். அதனாலே...''

அவர், தம் பேச்சை ஒரு கணம் நிறுத்தி விட்டு, பரந்தாமனையே துளைப்பது போலப் பார்த்தார்.

''இந்தக் கேஸை நீங்கதான் எடுத்துக்கணும் பரந்தாமன். உங்களுக்கு எல்லா உரிமைகளையும் தர்றேன். இன்னிலேருந்து உங்க வீட்டைச் சுத்தியிருக்கிற காவல்களைக் கூட எடுத்துடப் போறேன். கொலையாளியை எங்கே பார்த்தாலும் அவன் கால்லே சுட உங்களுக்குப் பூரண உரிமை உண்டு. இன்னும் ஒரு மாசத்துக்குள்ளே அவனை எங்க கிட்ட ஒப்படைக்க வேண்டியது உங்க பொறுப்பு.. நீங்க போகலாம்...''

ஒருகணம் விக்கித்து நின்று விட்டார் பரந்தாமன். அவர் கடமை தவறாதவர் தான். குற்றம் என்று வரும் பொழுது சுற்றம், சொந்தம் எதுவும் பார்க்காதவர் தான். இந்தப் பொறுப்பை அவரிடம் ஒப்படைக்காமலிருந்தாலும், அவரே குற்றவாளியைப் பார்த்து விட்டால், மகனென்றும் பாராது காலில் சுடக் கூடியவர்தான்.

இருந்தாலும் அந்தப் பொறுப்பை அவர் தலையிலேயே சுமத்தி விட்டவுடன் கொஞ்சம் தடுமாறித்தான் போனார்.

எடுத்த எடுப்பில் உப்பிய வயிறும், கலங்கிய கண்களுமாக உமாதான் அவர் மனக்கண் முன் வந்து நின்றாள்.

'உன் புருஷனுக்கு நானே எமனாக வந்திருக்கிறேன் தாயே... என்னை மன்னித்து விடு...'

அவர் தாள முடியாத சோகத்துடன் வீட்டுக்கு வந்தவர்தான் — இதோ, இப்பொழுது மருமகளின் முன் ஒரு குற்றவாளியைப் போல நிற்கிறார்.

''யாரும் சாப்பிட வரவில்லையா...''

''அப்பலேருந்து கூப்பிடறேன். வந்தாத்தானே...''

—மீனாட்சி துக்கம் தொண்டையை அடைக்கச் சொல்ல...

''உங்க பாடாவது தேவலை. போனவனை நினைச்சு அழுதுக்கிட்டே வீட்டுல கிடக்கலாம். என் தொழில் அப்படி இல்லே. இதோ, நாளைக்கு விடிகாலையிலேயே கிளம்பி செங்கல்பட்டு வரைக்கும் போகணும்...''

''செங்கல்பட்டுல என்ன வேலை...''

பரந்தாமன் இதற்குப் பதிலளிக்காமல் சிரிக்கிறார்.

''போலீஸ்காரன் ரகசியத்தை, தன் பொண்டாட்டிகிட்ட கூடச் சொல்லக்கூடாதும்பாங்க மீனு...''

''என்னவோ செய்யுங்க.''

மீனாட்சி அலுத்தபடி சாப்பாட்டு மேஜையை நோக்கி நடக்கிறாள். கம்பீரமான அவரது தோற்றம் — இந்தச் சில மாதங்களில் எப்படி உருக்குலைந்து விட்டது என்கிற வருத்தத்துடன் அவர் மருமகள்களின் பக்கம் திரும்பிப் பார்க்கிறார்.

''அம்மா உமா...''



போர்ன்விடாவின் இனிமைக் காலம்

போர்ன்விடா அளித்தவரை பாச மனங்கள் நேசத்தோடு நினைத்து மகிழும் ஒருநாள்!

வளரும் குழந்தைகள் வேறு எந்த மால்ட்ட் பானங்களையும்விட போர்ன்விடாவை விரும்புவதேன்?

போர்ன்விடா அருந்தி வளர்ந்த இரு தலைமுறையினர் வெளிப்படையாகவே கூறுகிறார்கள்.

"என்னுடைய குழந்தைகளுக்கு போர்ன்விடா தவிர வேறு எதுவும் உகந்தது அல்ல."


குழந்தைகளைக் கேளுங்கள்

பெற்றோர்களைக் கேளுங்கள்

உங்களையே கேட்டுக் கொள்ளுங்கள்

அதில்... உற்சாகம் துள்ளும் சுவை மட்டுமல்ல, காட்பரியின் பிரபல பெயர் மட்டுமல்ல... அவற்றைவிட அதிகமோ அதிகம்!

அதுதான் போர்ன்விடா! அதோடு வளருங்கள்.



காட்பரிஸ்

போர்ன்விடா

நல்ல வளர்ச்சி, போர்ன்விடா பயிற்சி.

OBM/2661-TAM



1967—ல் சட்டப் பேரவையின் தலைவராக ஆதித்தனார் இருந்தபோது, அங்கு சட்டமன்ற உறுப்பினராக நுழைந்தவன் நான். அன்று மூன்று ராமச்சந்திரன்கள் சட்டப் பேரவையின் உள்ளே இருந்தோம். அழைப்பது, எந்த ராமச்சந்திரனை என்ற குழப்பம் ஏற்படாமல் இருக்க ஆதித்தனார் 'பண்ருட்டி' ராமச் சந்திரன் என்று பெயர் வைத்தார். ஆனால் இன்று ராமச்சந்திரன் போய் 'பண்ருட்டி' தான் நிலைத்து நிற்கிறது!

ஆதித்தனார் கல்லூரி விழாவில் 'பண்ருட்டி' கூறக்கேட்டவர்எஸ். சேகர்

''என்ன மாமா...''

''ஒரு கிண்ணத்துல தயிர் சாதமாப் பிசைஞ்சு, கொஞ்சம் ஊறுகாயோ, பொரியலோ போட்டுக் கொண்டா...''

ஒரு விநாடி நேரம் ஒன்றும் புரியாமல் திகைத்தவள், அடுத்த கணமே, பரந்தாமன் சொன்னபடி செய்ய விரைய..

''நிறைய கொண்டாம்மா நாலு பேருக்குக் காணும்படியா...''

பரந்தாமனின் குரல் சமையல் அறை வரையில் கணீரென்று ஒலிக்கிறது...

உமா, கன்னத்தில் வழியும் கண்ணீரைப் புறங்கையால் துடைத்தபடியே, பாத்திரத்தில் சோற்றைப் போட்டு, தயிர் விட்டுப் பிசைய...

அதற்குள், பரந்தாமன், உடைமாற்றிக் கொண்டு வருகிறார்...

''பிசைஞ்சுட்டியா...

''இதோ ஆச்சு மாமா...''

''உங்க அத்தையக் கேட்டு, கொஞ்சம் மாங்கா ஊறுகாய் வாங்கிட்டு வா... விஜிக்குப் பிடிக்கும்...''

அவள் விரைய, அவர் விஜியை இழுத்து, தம்மருகில் அமர்த்திக் கொள்கிறார்...

''மீனாட்சி... நீயும் வா...''

மீனாட்சியும், உமாவும் வந்த பின், அவர்களையும் வற்புறுத்தி, தன்னைச் சுற்றி அமர வைத்தவர், உமாவின் கையிலிருந்த பாத்திரத்தை வாங்கி, ஒவ்வொரு கவளமாய் அவர்களது கைகளில் வைக்க...

''என்னங்க இது...''

ஏதோ சொல்ல வந்த மீனாட்சியை, வாயில் விரல் வைத்து அடக்குகிறார் அவர்...

''உஷ்... முதல்லே சாப்பாடு... அப்புறம் பேச்சு... மீனு, ரொம்ப நாளாச்சு இல்லே இது மாதிரி சாப்பிட்டு, முந்தி ராஜாவும், விஜியும் குழந்தைங்களா இருந்தப்ப நீ என்னையும் உட்கார்த்தி வச்சு, கையிலே சோற்றை உருட்டிப் போடுவே... எவ்வளவு சாப்பிட்டேன்ற அளவே தெரியாம சாப்பிடுவேன்...''

அவர் எதிரில் அமரவே கூச்சப்படும் உமா தன் உடம்பைக் குறுக்கியபடி அமர்ந்து, தலைகுனிந்து, கையில் பந்து பந்தாய் வந்து விழும் சோற்றுக் கவளங்களைக் கண்ணீர் மல்கப் பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

அவளது கவனத்தைத் திசை திருப்ப நினைத்தவராய், பரந்தாமன், மனைவியிடம் வளையல் காப்பு வைபவ ஏற்பாடுகளைப் பற்றிப் பேசுகிறார்.

''சமையலுக்கு ஆள் சொல்லிட்டியா மீனு...''

''இன்னும் இல்லீங்க...''

''நம்ம ரங்கு சாரையே சொல்லிடு... வளையல் எல்லாம் வாங்கிட்டியா...''

''உம்...''

''கங்கண வளை கிடைச்சுதா...''

''நாளைக்குத் தரேன்னு சொல்லியிருக்கா. டவுன்லே ஏதோ ஒரு இடம்... அட்ரஸ் கூட எழுதித் தந்தாள்...''

மீனாட்சி, கையைக் கழுவிக் கொண்டு, வளையல்கள் நிரம்பிய அட்டைப் பெட்டியைக் கணவனெதிரில் கொண்டு வந்து வைக்கிறாள்.

பரந்தாமனுக்கு வளையல்களைப் பற்றி ஒன்றும் தெரியாதுதான். இருந்தாலும் சூழ்நிலையைக் கலகலப்பாக்குவதற்காகவே ஒவ்வொரு வளையலாக எடுத்துப் பார்க்கிறார்.

''உமா, அந்தக் கடைக்காரி, ஏதோ ஒரு வளையல் பெட்டி பின்னாடியே அட்ரஸ் எழுதித் தரேன்னு சொன்னா... கங்கண வளையல் கிடைக்கற இடம்... இருக்கா பாரு...''

மீனாட்சி, மருமகளிடம் சொல்ல, அவள் ஒவ்வொரு அட்டைப் பெட்டியாகப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில்தான் விஜியின் கண்களில் பச்சை வளையல்களை அடுக்கடுக்காகச் சுற்றியிருந்த அந்தக் காகிதம் பட்டது...

ஏதோ ஒரு நோட்டுப் புத்தகத்திலிருந்து கிழிக்கப்பட்ட காகிதம்...

''சந்தைக்குப் போற தடத்துமேலே
சாதிலிங்க மரத்தடியே
ரத்தனக் கம்பளி விரிச்சுப் போட்டு
நித்திரை செய்யற நம்ம தொரை
வாராண்டி தொரை வாராண்டி... நீங்க
பங்களாவுட்டு வெளி வாங்கி
வந்ததும் பொட்டிதொறப்பாண்டி-புள்ளே
வளையத் தருவான்டீ...''

விஜிக்கு அந்தப் பாட்டுப் புதுசு... ஆனால் அந்தக் கையெழுத்து?...

அவள், அந்தக் காகிதத்தை மாமா அறியாத வண்ணம் உருவி, தன் இடுப்பில் செருகிக் கொள்கிறாள். உதடுகள் சிந்தனைச் சுமையில் நெளிகின்றன.

(தொடரும்)



ஏன் எல்லோரும் பாம்பே டையிங் கடையை நோக்கி ஓடுகிறார்கள்?
ஒரு டிராவுலர்லெங்த் விலையிலே ஒரு கார் கிடைக்குமே !
ஒரு சேலை வாங்கினா, ஒரு கலர் டிவியும் கிடைக்குது!
பாம்பே டையிங் சினி ப்ளிட்ஸ்
ஸ்டார் போட்டி
ரூ. 1கோடிக்கும் மேல் பரிசுகள் வெல்லுங்கள்
வெல்வதற்கு 60,000 பரிசுகளுக்கும் மேல்
HTB-BDM-1085
விரைவீர் ! விவரங்களுக்கு உங்கள் பாம்பே டையிங் சில்லறை விற்பனையாளரை அணுகுவீர்.

அபயதானம்

பத்மா கிருஷ்ணன்

வெளியில் சோவென்று மழை கொட்டிக் கொண்டிருந்தது.

கார்மேகம் துப்பாக்கிப் பிடித்திருந்த கையை மேலே தூக்கி நெற்றிப் பொட்டருகே வைத்துக் கண்களை மூடிக் கொண்டான்.

விசையை அழுத்து. இந்த அவல வாழ்க்கை இப்போதே முடிந்து போகட்டும். இன்னொரு ஜென்மம் என்ற ஒன்று இருந்தால் அது நல்லதாக அமையட்டும்.

மூடிய கண்களில் கல்யாணி தெரிந்தாள். வான மண்டலத்தில் சிறகடித்துப் பறந்தவாறு இரு கைகளையும் நீட்டி அவனை வாவென்று அழைத்தாள்.

'வருகிறேன் கல்யாணி, இதோ வருகிறேன். நீயில்லாமல் எனக்கு இங்கே என்ன வாழ்க்கை காத்துக் கிடக்கிறது? உன்னை என்னுடன் சேர்த்துக் கொள்ளத் தவறி விட்ட எனக்கு உன்னுடன் வந்து சேர்ந்து கொள்வது ஒன்றுதான் நியாயமானதாகப்படுகிறது.'

கதவை யாரோ படபடவென்று தட்டினார்கள்.

நோ திறக்காதே. யார் என்று பார்க்காதே. எடுத்த முடிவில் தாமதம் ஏற்படுத்தாதே.

கதவு விடாமல் தட்டப்பட்டுக் கொண்டிருந்தது. அந்தத் தட்டலில் அவசரம் இருந்தது. வெறி பிடித்த யாரோ தட்டுவது மாதிரியாக வேகம் தெரிந்தது.

கார்மேகம் துப்பாக்கியை டிராயரில் வைத்து மூடினான். அமைதியாக நடந்து போய்த் தாழ்ப்பாளை நீக்கிக் கதவைத் திறந்தான்.

புயலாக அவனைத் தள்ளிக் கொண்டு உள்ளே பாய்ந்தாள் ஒரு பெண்.

''தயவுசெய்து கதவைச் சாத்துங்கள். ஐயோ, சீக்கிரம் சாத்துங்கள்.''

அந்த அலறலில் அவன் கை உதறிக் கொண்டு கதவைச் சாத்தியது. தாழ்ப்பாளைப் போட்டுவிட்டுக் கதவின் மேல் சாய்ந்தவாறு நின்று உள்ளே நுழைந்தவளைப் பார்த்தான்.

அவள் வெகுவாக நனைந்து போயிருந்தாள். புடவையிலிருந்து சொட்டிய நீர் தரையைக் குளமாக்கிக் கொண்டிருந்தது. இருபது வயதிருக்கலாம். நல்ல சிவப்பாக, உயரமாக, அழகாக இருந்தாள். கண்களில் பயம் தெரிந்தது. உடல் வெடவெடவென்று நடுங்கிக் கொண்டிருந்தது. மிரள மிரள விழித்தாள்.

''யார் நீ. நீ யாராயிருந்தாலும் இந்த நடு ராத்திரியில் இங்கே நுழைந்திருப்பது முறையல்ல. இந்த வீட்டில் நான் தனியே இருக்கிறேன்.''

அவள் கைகளைக் கூப்பினாள்.

''உங்களுக்குப் புண்ணியமாகப் போகும். எனக்கு அபயம் கொடுங்கள். இன்றிரவு மட்டும் என்னைக் காப்பாற்றுங்கள். நீங்கள் யாராயிருந்தாலும் என்னைத் துரத்தி வரும் கயவனை விட நல்லவராகத் தான் இருப்பீர்கள்.''

கார்மேகம் உட்புறம் நோக்கி நடந்தான்.

''உள்ளே வா.''

கப்போர்ட்டைத் திறந்து கல்யாணிக்காக வாங்கி வைத்திருந்த புடவையை எடுத்து அவளிடம் நீட்டினான்.

''அதோ, அந்தக் கதவைத் திறந்து கொண்டு போனால் பாத்ரூம் இருக்கும். டவலால் சரத்தைத் துடைத்துக் கொண்டு இந்தப் புடவையை மாற்றிக் கொள்.''

ஏதோ ஆணைக்குக் கட்டுப்படுவதுபோல்



அவள் அவன் நீட்டிய புடவையை வாங்கிக் கொண்டு பாத்ரூம் இருந்த திசையை நோக்கி நடந்தாள்.

கல்யாணி, நீ எனக்காக இன்னும் கொஞ்ச நேரம் காத்திருக்க வேண்டும். புதிதாக முளைத்துள்ள இந்தப் பிரச்னைக்கு வழி கண்டுவிட்டு உடனே வந்து விடுவேன்.

டிராயரைத் திறந்து துப்பாக்கியை விரல்களால் ஒருமுறை தொட்டுப் பார்த்துவிட்டு மீண்டும் மூடினான் கார்மேகம்.

பிளாஸ்கிலிருந்து இரண்டு கப்புகளில டீயை நிரப்பிக் கொண்டிருந்த போது அவள் கல்யாணியின் புடவையைக் கட்டி கொண்டு வந்து நின்றாள்.

''உட்கார். முதலில் இந்த டீயைக் குடி. அதற்கப்புறம் சரியென்று தோன்றினால் உன்னைப் பற்றிய விவரங்களைச் சொல்.''

நடுங்கும் கையை நீட்டி அவன் தந்த கப்பைப் பெற்றுக் கொண்டு எதிரிலிருந்த சோபாவில் ஒருக்களித்த மாதிரி உட்கார்ந்தாள் அவள்.

அவளுக்கு டீ கசந்தது. ஒரு வாய் குடித்து விட்டு மேஜை மேல் கப்பை வைத்தாள். சிகரெட் ஒன்றை வாயில் வைத்துக் கொண்டு இவள் முன்னிலையில் குடிப்பதா, வேண்டாமா என்று தயங்கிப் பின்னர் பற்ற வைத்தான்.

''உங்களுடைய உதவிக்கு நன்றி'' என்று தட்டுத் தடுமாறிச் சொன்னாள் அவள்.

அதற்கு எதுவும் பதில் சொல்லத் தெரியாமல் கார்மேகம் அவளுக்கு எதிரே தானும் உட்கார்ந்து கொண்டான்.

''எதில் ஆரம்பிப்பது, எப்படிச் சொல்வது என்றே தெரியவில்லை.''

''பேரிலிருந்து ஆரம்பி.''

''அருணா.''

''என் பெயர் கார்மேகம். ஏன் கொட்டுகிற மழையில் இவ்வளவு பதற்றத்துடன் ஓடிவந்தாய். யார் உன்னைத் துரத்திக் கொண்டு வந்தது. எதனால் துரத்தப்பட்டாய் என்பதையெல்லாம் நான் தெரிந்துகொள்ளலாமா?''



''சொல்கிறேன். கொஞ்சம் அவகாசம் கொடுங்கள்.''

''அவசரமில்லை. உன்னுடைய படபடப்பு முதலில் தீரட்டும்'', என்று சொல்லிவிட்டு சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் தேய்த்து அணைத்தான் கார்மேகம்.

அருணா டீயை முழுவதுமாகக் குடித்து விட்டுக் காலியான கப்பை வைக்க இடம் தேடினாள். அவன் எழுந்து அதை அவள் கையிலிருந்து வாங்கி மேஜைமேல் வைத்து விட்டு மீண்டும் உட்கார்ந்து கொண்டான்.

''இவ்வளவு தூரம் ஆகிவிட்ட பிறகு சொல்வதில் என்ன வெட்கம் இருக்கிறது? யாருக்காக பயந்து கொண்டு நான் இங்கே வந்து தஞ்சம் புகுந்தேனோ அவன் என்னுடைய காதலன். அதாவது என்னால் இன்று மாலை வரை காதலிக்கப்பட்டவன்.''

கார்மேகம் மௌனமாய் அவள் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தான். கல்யாணிக்காக வாங்கிய புடவையில் அவள் மிகவும் அழகாய்த் தெரிந்தாள். அவளுடைய சிவப்பு நிறத்துக்கு கருநீலம் நன்றாக எடுபட்டது. கல்யாணி கட்டியிருந்தாலும் இப்படித்தான் எடுப்பாக இருக்கும்.

''இரண்டுபேர் வீட்டிலும் அங்கீகரிக்கப்படாத காதல். ஓடிப்போவது என்று முடிவு செய்து நேற்று மாலை யாருக்கும் தெரியாமல் ரயிலேறினோம். இன்று காலை இங்கு வந்து ஹோட்டலில் ரூம் எடுத்துக் கொண்டு தங்கினோம்.''

கல்யாணி, நாமிருவரும் ஓடிப்போய் விடலாம் என்று எவ்வளவு முறை சொன்னேன். கேட்டாயா? நெறிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு அடங்கியிருந்த நீ இப்படி நான் வருவதற்குள் அவசரப்பட்டு விட்டாயே, இன்னும் கொஞ்சம் பொறுத்துப் பார்த்திருக்கக் கூடாதா?

''நடக்கக் கூடாதது நடந்து முடிந்து போய் விட்டது. என்னை அவனிடம் பறி கொடுத்தேன். எப்படி என்று கேட்பீர்கள். என்னுடைய இணக்கத்தை அவன் எதிர்பார்க்கவில்லை. வலிய எடுத்துக் கொண்டான். அது கூட அவ்வளவு கொடூரமில்லை. ஆனால்...''

உன்னுடைய கட்டாயக் கல்யாணத்துக்கு இன்னும் ஒரு நாள் அவகாசம் இருந்ததே கல்யாணி, நான் வருவேன் என்று காத்துக் கொண்டிருந்திருக்கக் கூடாதா, அநியாயமாய் உன்னையே நீ அழித்துக்கொண்டு விட்டாயே. என்னைத் தனியே விட்டுவிட்டாயே. இல்லை, உன்னைவிட்டு நான் தனியே இருக்க மாட்டேன். நிச்சயம் உன்னிடம் வருவேன். இவள் பேசி முடிக்கட்டும்.

''இரவு எட்டு மணியிருக்கும். இன்னொருவனை அழைத்துக் கொண்டு வந்தான். என்னையும் வைத்துக் கொண்டு அவர்கள் இருவரும் அறையில் வயிறுமுட்டக் குடித்தார்கள். அசிங்கமாகப் பேசிக் கொண்டார்கள். பின்னர் கூட வந்தவனை என்னோடு விட்டுவிட்டு என் காதலன் வெளியே போய் விட்டான். அந்த மிருகத்திடமிருந்து எப்படியோ தப்பித்துக் கொண்டு வெளியே வந்து கண்மண் தெரியாமல் ஓடினேன். என் காதலன் பின்னாலேயே துரத்திக் கொண்டு வந்தான். இங்கே அடைக்கலம் புகுந்தேன்.''

கார்மேகத்துக்குக் குமட்டிக் கொண்டு வந்தது. அவள் சொன்ன கதையில் ஏதோ பிசிறு தட்டுவது மாதிரி பட்டது. அவனால் அவளுக்குப் பரிதாபப்பட முடியவில்லை.

''இனிமேல் எனக்கு வாழ்க்கை இல்லை. வாழவே தகுதியில்லாதவள் நான். அந்தக் கயவனின் பிடியிலிருந்து தப்ப இன்று மட்டும் எனக்குத் தஞ்சம் கொடுங்கள். நாளைக் காலை விடிந்ததும் எங்காவது போய் என்னை அழித்துக் கொண்டு விடுகிறேன்.''

நாடகத்தனம் அதிகமாக இருப்பதாக எண்ணினான் கார்மேகம். இது உண்மையில்லை, பொய் என்று மனம் சப்தமிட்டது. இவளைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லை. எவ்வளவு சர்வ சாதாரணமாகப் பேசமுடிகிறது இவளால் என்று தோன்றியது.

விருக்கென்று சோபாவை விட்டு எழுந்தான் அவன். டிராயரைத் திறந்து துப்பாக்கியைக் கையிலெடுத்தான்.

''இந்தா. எப்படியிருந்தாலும் உன் வாழ்க்கையை நீ அழித்துக் கொள்ளத்தான் போகிறாய். அதற்கு முன் போய் இதனால் உன்னை இந்த நிலைக்கு ஆளாக்கியவனைத் தீர்த்துக் கட்டு. பின்னர் உன்னையும் அழித்துக் கொள்.''

அருணா மிரண்டு போய் எழுந்து நின்றாள்.

''இதை உபயோகப் படுத்தத் தெரியாதே என்ற தயக்கம் வேண்டாம். நான் சொல்லித் தருகிறேன். என்ன, செய்வாயா?''

''எனக்கு பயமாக இருக்கிறது.''

''சாகத் துணிந்தவளுக்குப் பயம் என்ன வேண்டிக் கிடக்கிறது? உனக்கு நேர்ந்தது இன்னொரு பெண்ணுக்கு நேரக் கூடாது என்ற நல்ல நோக்கத்துடன் செய்.''

அவள் எச்சிலைக் கூட்டி விழுங்கினாள்.

''இல்லையென்றால் என்னையும் கூட்டிப்போ. அந்த ஹோட்டலுக்கு அழைத்துப்போய் அவன் யாரென்று எனக்குக் காட்டு. நீ செய்ய வேண்டிய காரியத்தை நானே செய்கிறேன். ஏனென்றால் நானும் சாகத் துணிந்தவன் தான். நீ வந்துகதவைத் தட்ட ஒரு சில வினாடிகள் தாமதமாகியிருந்தால் இந்தத் துப்பாக்கியால் என்னைச் சுட்டுத் தீர்த்துக் கொண்டிருக்க வேண்டியவன்.''

யாரோ பைத்தியத்துடன் தனியாகச் சிக்கிக் கொண்டுவிட்ட மாதிரியான சிரமத்தில் அருணா நெளிந்தாள்.

''வா, போகலாம்.''

கதவை யாரோ தட்டினார்கள்.

அருணாவின் முகம் பேயறைந்தது போல் வெளிறியது. கார்மேகம் அவளைப் பார்த்துச் சிரித்தான்.

''உன் காதலன் தான் தட்டுகிறான். நீ திறக்கிறாயா, நான் திறக்கட்டுமா?''

அமைதியாகக் கால் சட்டைப் பாக்கெட்டுக்குள் துப்பாக்கியைப் போட்டுக்கொண்டு கதவை நோக்கி நடந்தான் அவன்.

''வேண்டாம், திறக்காதீர்கள்'' என்று கிரீச்சிட்டாள் அருணா.

கார்மேகம் கதவைத் திறந்தான்.

''வரவேண்டும். உங்களுக்காகத் தான் காத்திருக்கிறோம்.''

''என் தங்கச்சியை என்னடா பண்ணினே?''

''ராமு, ஓடிப்போ. அவன் கையிலே துப்பாக்கி இருக்கு.''

பாக்கெட்டுக்குள் கையை விட்டு கார்மேகம் துப்பாக்கியைக் கையிலெடுப்பதற்குள் வந்தவன் மாயமாய் மறைந்து விட்டான்.

கதவை அறைந்து சாத்தித் தாழ்ப்பாள் போட்டுவிட்டுத் திரும்பினான் கார்மேகம்.

''வேண்டாம். என்னை ஒண்ணும் பண்ணாதே. விட்டுவிடு.''

அருணாவின் அலறல் துப்பாக்கி வெடித்த சப்தத்துடன் கலந்து தேய்ந்தது.

கல்யாணி, சாவிலும் ஒரு அர்த்தம் இருக்க வேண்டும். நீ பிறந்த இந்த மண்ணில் அருணாவைப் போன்றவர்களும் பிறந்திருக்கிறார்கள். அவர்களில் ஒருவரையாவது அழித்தோம் என்ற திருப்தியுடன் உன்னிடம் வருகிறேன்.

நெற்றிப் பொட்டில் குறிவைத்து விசையை அழுத்தினான் கார்மேகம்.


மறுநாள் செய்தித்தாளில் 'காதலர்கள் தற்கொலை' என்ற தலைப்பிட்டுப் புகைப்படத்துடன் செய்தி வெளி வந்தது.




அருள்வாக்கு

ஏதேது அவசியம்' என்று இருக்கின்றனவோ அவற்றையே ஒவ்வொரு சமயத்தில் தள்ள வேண்டியதாயிருக்கிறது. கிருஹஸ்தன் பண்ணியே தீர வேண்டுமென்றிருக்கிற அத்தனை வைதிக கர்மாக்களையுமே ஒரு காலத்தில் தள்ளி விட்டு ஸந்நியாசம் வாங்கிக்கொள்ளச் சொல்லியிருக்கிறது. ஜீவிப்பதற்குஅவசியமான ஆஹாரத்தை மந்திர பூர்வமாகப் புசிப்பதற்கு வழி சொன்ன சாஸ்திரங்களே ஆஹாரத்தைத் தள்ளி விட்டு உபவாசமிருக்க வேண்டிய காலங்களையும் சொல்கிறது. முழுக்க ஆகாரத்தைத் தள்ளாவிட்டாலும், அதில் இன்னின்ன காலத்தில் இன்னின்ன பதார்த்தங்களைத் தள்ள வேண்டுமென்று அநேக விதிகளைச் சொல்கிறது. இதில் 'அலவணம்' என்று ஒன்று. சாப்பாட்டில் உப்பு சேர்த்துக் கொள்ளக் கூடாது என்பதே அலவணம். ''உப்பில்லாப்பண்டம் குப்பையிலே'' என்று , ஒருபக்கம் சொல்லிவிட்டு சில காலத்தில் உப்பு கூடாது என்றும் வைத்திருக்கிறது. உணர்ச்சி வேகத்துக்கு உப்பு காரணம். ''மானம் ரோஷம் இல்லே? நீ உப்புப் போட்டுண்டு தின்றதில்லே?'' என்று கேட்கிறோமல்லவா? ரொம்பவும் ஆத்ம மார்க்கத்தில் போகும் போது இந்த மானம், ரோஷம், மற்ற உணர்ச்சி வேகமெல்லாம்போகத்தான் வேண்டும். அதனால் ஸந்நியாசி முதலியவர்கள் அலவணமாகச் சாப்பிட வேண்டும். டாக்டர்கள் ஒரு காரணத்துக்காக உப்பு கூடாது என்றால் சாஸ்திரமும் ஒரு காரணத்துக்காகத் தள்ளுகிறது. 'வருண ஜபம்' முதலான வேதமந்திர ஜபங்களின் போது ஜபிக்கிறவர்கள் உப்புச் சேர்த்துக் கொண்டால் நிச்சயமாகப் பலன் கிடைக்காமலிருப்பதையும் அதுவே அவர்கள் அலவணமாய் இருந்தால் மழை பெய்கிறதையும் இந்தக் காலத்திலும் நிதர்சனமாகப் பார்க்கலாம். முருகன் சம்பந்தப்பட்ட செவ்வாய்க்கிழமை, ஷஷ்டி, கிருத்திகை முதலானவற்றில் குறிப்பாக அலவண நியமம் அனுஷ்டிக்கப்படுகிறது.

-ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள்





○ நாஸாவில் ராக்கெட்


20

அமெரிக்கத் தென் மாநிலப் பிரதேசத்தில் வாழும் தமிழர்களின் பிரத்யேக முயற்சியில் ஹூஸ்டனில் எழுந்தருளியிருக்கும் மீனாட்சி கோவிலை நோக்கி, இளம் காலைப் போதில், திரு. உதயமூர்த்தியுடன் பயணமானேன். திரு. சங்கர் ரமணியும் குடும்பத்தாரும் வாகனில் தொடர்ந்தார்கள்.

சீராக ஓடிய சாலையின் இருமருங்கிலும் கண்ணுக்குக் குளிர்ச்சியாகப் பச்சைபசேலென்று இயற்கை எழில் கொஞ்சிற்று.

பல லட்சம் டாலர்கள் செலவில் மீனாட்சி கோவிலை நிர்மாணிக்கும் பணியில் உற்சாகமாக ஈடுபட்டு அதற்காகத் தங்களது நேரத்தையும், செல்வத்தையும் தயங்காமல் கொடுக்கும் இந்தியர்களின் சமயப் பற்றை நியாயமான பெருமையுடன் திரு. உதயமூர்த்தி குறிப்பிட்டார்.

'நமது தத்துவம் ஆழ் கடலைப் போன்றது. எடுக்க எடுக்கக் கிடைக்கும் அரிய பொருள் கொண்டது. நமது முன்னோர்கள் எத்தனை கெட்டிக்காரர்கள்! அவரவர் மனநிலைக்குத் தகுந்தாற்போல் பரம்பொருளை உணரும் மார்க்கங்களைக் காட்டியிருக்கிறார்கள். பாமரர்களும் அறிவு ஜீவிகளும் கடைப்பிடிக்கப் பக்தி மார்க்கம் ஞானமார்க்கம் என்று வகுத்தார்கள்! இப்படிப்பட்ட ஒரு சுதந்திரம் வேறு எந்த சமயத்தில் பார்க்க முடியும்'' என்று வியந்தார்.



× ஹூஸ்டன் ஆஸ்ட்ரோடோம்

அவருடன் பேசிக் கொண்டு சென்ற அந்த ஒரு மணி நேரமும் மிக உபயோகமான நேரமென்று நான் நினைத்துக் கொண்டேன். சமய நூல்களிலும் தமிழிலக்கியத்திலும் அவருக்கிருந்த ஆழ்ந்த புலமையின் பிரத்தியட்சத்தில் நான் அமெரிக்க மண்ணில் இருப்பதே மறந்து போயிற்று. என்னிடம் அவரும் திரு. ரமணியும் காட்டிய அன்பிற்கும், அக்கறைக்கும் நான் இந்தியாவிலிருந்து வந்தவள், தமிழ்நாட்டைச் சேர்ந்தவள் என்கிற அபிமானமே முக்கிய காரணம் என்று எனக்குத் தோன்றிற்று. தாயகத்திடம் அவர்களுக்கிருந்த பற்றுதலின் மறைமுக வெளிப்பாடு இது என்று என்னுள் நெகிழ்ச்சியேற்பட்டது.

இந்தியாவின் தொழில் வளர்ச்சியைப் பற்றிய ஆத்மார்த்த கவலை இவர்களது பேச்சில் தெரிந்தது. சுதந்திரம் கிடைத்த இத்தனை ஆண்டுகளில் இன்னும் எத்தனையோ முன்னேற்றமடைந்திருக்க வேண்டும். அரசியலும், அவனவன் சுயநலமும், ஊழலும் சுவாபாவிக இந்தியச் சோம்பலும் நம்மை இன்னும் பின் தங்கிய நிலையிலேயே வைத்திருக்கிறது என்று திரு உதயமூர்த்தி வருத்தப்பட்டுக் கொண்டார்.

''எப்படியாவது முன்னுக்கு வரவேண்டும் என்கிற ஆர்வமோ துணிச்சலோ நம் இளைஞர்களுக்கு இல்லவே இல்லை!'' என்று ஆதங்கப்பட்டார்.

''இத்தனைக்கும் இந்தியர்கள் மிக புத்திசாலிகள். சராசரி அமெரிக்கனின் IQ வைவிட பல மடங்கு அதிகம் உடையவர்கள். இப்படிப்பட்ட புத்திசாலிகள்

மெய்ஞ்ஞானமும் விஞ்ஞானமும்

=வாஸந்தி=

கொண்ட நாடு ஏன் எதிர்பார்த்த அளவு முன்னேறவில்லை? சிந்தனையிலும் செயலிலும் ஒரு கட்டுப்பாடில்லை. ஒரு பொறுப்புணர்வு இல்லை. இங்கு அமெரிக்கர்கள் உன் விதி உன் கையில் என்று செயல்படுகிறார்கள். விதி நம்மை ஆட்டுவிக்கிறது என்கிற சுலபமான வியாக்கியானத்தில் தோல்விகளை ஏற்கும் சுபாவம் நம் ஜனங்களுக்கு!

அவர் சொல்வதெல்லாம் வாஸ்தவமான இந்திய பலவீனங்கள் என்கிற உணர்வில் நான் மௌனமாக அமர்ந்தேன்.

''ஒவ்வொரு முறையும் வெகு ஆர்வத்துடன் இந்தியாவுக்குப் போகிறேன். இந்த விஷயங்கள் எல்லாம் மனசை மிகவும் சஞ்சலப்படுத்தும்'' என்றார்.



✕ பிரமிப்பூட்டும் அமெரிக்கப் பன்மாடிக் கட்டிடங்களும்...

''அமெரிக்காவிலேயே இருந்து விடப் போகிறீர்களா?'' என்றேன்.

இல்லை. இல்லை. வந்து விடுவதாகத்தான் இருக்கிறேன். பிறந்த மண்ணுக்கு ஒரு ஆகர்ஷணம் இருக்கிறதல்லவா?''

இந்த ஆகர்ஷிப்பு இவர்களையெல்லாம் எந்த அளவிற்குப் பாதித்திருக்கிறது என்று மிக பக்தி சிரத்தையுடன் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் மீனாட்சிகோவிலை அடைந்த போது புரிந்தது.

விஸ்தாரமான நிலப்பரப்பில் அடக்கமான கம்பீர அழகுடன் தமிழ் நாட்டுப் பிரத்தியேக சிற்பக்கலையின் உதாரணமாய் மீனாட்சி கோவில் காட்சியளித்தது. தங்களுக்குப் பழக்கமில்லாத சீதோஷ்ண நிலையைப் பொருட்படுத்தாது கணபதி ஸ்தபதியின் மேற்பார்வையில் அனுப்பப்பட்டிருந்த சிற்பிகளும் கட்டட நிபுணர்களும் திருப்பணியில் ஆழ்ந்திருந்தார்கள். பின்னையார் சன்னிதியைத் தாண்டி மூலஸ்தானத்துக்கு சென்று, இனி கொஞ்சும் அழகுடன் நிற்கும் அம்மனைத் தரிசித்து. மிக அழகான தெள்ளிய தமிழில் பாவமும் சுரமும் இணைய அபிராமி அந்தாதியைப் பாடிய அர்ச்சகரின் குரலைக் கேட்டுச் சிலிர்த்து நின்ற விநாடியில் தமிழ்நாட்டில் இருப்பதைப் போன்ற பிரமையே ஏற்பட்டது.

''மதுரையில் இருக்கிற மாதிரி ஆகுமா?'' என்று குருக்களின் குரலில் ஏக்கம் தொனித்தாலும், ''இங்கே வந்திருப்பதும் ஒரு கைங்கர்யம்தான் என்கிற சமாதானம் தெரிந்தது.''நம்மூரில் அனுஷ்டிக்கும் ஆசாரத்தை இங்கேயும் அனுஷ்டிக்கலாம்'' என்கிறதிருப்தி தெரிந்தது.

இந்திய கலாச்சாரத்தைப் பரப்பும் க்ஷேத்திர ஸ்தலமாக இந்தக் கோவில்கள் உருவானது மனத்துக்கு நிறைவைத் தரும் விஷயம். அமெரிக்க வாழ் இந்தியர்களின் ஆத்ம ஆன்மீக திருப்திக்காக மட்டுமே இந்தக் கோவில்கள் நின்று விடாமல் — நம்மைப் பற்றியோ நமது கலாச்சாரத்தைப் பற்றியோ பொது அறிவே இல்லாமல் இருக்கும் சராசரி அமெரிக்கனின் ஞான சூன்யத்தைப் போக்கும் நிலைக்களங்களாக இருந்தால் அது நமக்கு எத்தனை பெரிய சாதனை என்று நான் நினைத்துக் கொண்டேன்.

அமெரிக்க சமூகத்துடன் ஒட்டாமல் அதன் விளிம்பிலேயே மிதக்கும் நுரையாக, தாங்களே ஏற்படுத்திக் கொண்ட தீவுகளாக இந்தியர்கள் அங்கு இருக்கிறாற்போல் எனக்குப் பட்டது.

மீனாட்சி கோவிலிலிருந்து அமெரிக்க விண்வெளி சாதனைகளின் நிலைக்களமான NASA (National Aeronautics and Space Administration) வைப்பார்க்கச் சென்றோம்.

அன்றைக்கு சனிக்கிழமை. அலுவலகங்கள் மூடப்பட்டு பார்வையாளர்களைத் தவிர வேறு யாருமில்லாமல் சந்தடி குறைவாக இருந்தது. முகப்பிலேயே பிரும்மாண்டமான விண்வெளி ஷட்டில் நம்மை வரவேற்கிறது.

1960–ம் ஆண்டிலிருந்து மனிதன் முன்பின் நினைத்துப் பார்த்திராத விண்வெளி சாதனைகளை NASA–வில் பணிபுரியும்

✕ ...மேம்பாலங்களும்



விஞ்ஞானிகள் செய்து காட்டி வருகிறார்கள். 1969-ம் ஆண்டு ஜூலை மாதம் 20-ந்தேதி அப்போல்லோ-11 கமாண்டர் நீல் ஆர்ம்ஸ்ட்ராங் தமது இடது காலை முதல் முதலில் சந்திரனில் பதித்தார். சில நிமிஷங்கள் கழித்து விண்வெளி வீரர் எட்வின் ஆல்ட்ரின் அவருடன் சந்திரனின் தரையில் நடக்க ஆரம்பித்தார். சரித்திர நிகழ்ச்சியான இதை உலகம் நெடுகிலும் லட்சக்கணக்கான மக்கள் டி வி யில் கண்டு களித்தார்கள்....

இதுவும் மற்ற சாதனைகளின் விவரமும் பெரிய மியூஸியத்தில் காணப்படுகின்றன. விண்வெளி வீரர்களுக்கான பயிற்சியும் உடுக்கும் உடுப்பும் சுவாரஸ்யமாக விளக்கப்பட்டிருக்கின்றன. தனியாக சினிமா காட்டப்படுகிறது. பிரத்யேகமான அரங்கில் சந்திரனிலிருந்து மாதிரிக்கு எடுத்து வந்திருக்கும் கற்களைப் பதனப்படுத்தப்பட்ட கண்ணாடிப்பெட்டிகளில் பாதுகாத்து வருகிறார்கள். வெளிக்காற்றே அதன் மீது படவில்லையாம்.

விண்வெளியில் எதிர்காலத்தில் செய்யப் போகும் சாதனைகளின் பட்டியலையும் அட்டவணையையும் பார்க்கும்போது பிரமிப்பு ஏற்படுகிறது.

சந்திரனுக்குச் செல்லும் திட்டத்தின் ஆரம்ப காலத்தில் ஜனாதிபதி கென்னடி சொன்னாராம்:

'இந்தச் சகாப்தத்தில், சந்திரனுக்குச் செல்லத் தீர்மானித்தோம் – அது சுலபமான காரியம் என்பதால் அல்ல – கடினமான காரியம் என்பதால்! நமது சக்தியின் பரிமாணத்தையும், அதன் எல்லைகளின் விரிவாக்கத்தையும் உணருவோம் என்பதால்!''


அமெரிக்க குணத்துக்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு!

சவாலுக்காகக் காத்திருக்கும் தினவெடுத்த தோள்கள் இவர்களுக்கு. எல்லாத் துறைகளிலும் அசாதாரணமாக உயர்ந்து நிற்கத் துடிக்கும் தாகமும், தீவிரமும் உள்ளவர்கள் இவர்கள். எதையுமே சின்னதாக நினைக்க முடியாத விசுவரூப பார்வை உடையவர்கள். இவர்களது பிரும்மாண்ட விண்ணளாவும் கட்டிடங்களையும், நெடுஞ்சாலைகளையும், மேம்பாலங்களையும் பார்க்கும் போது இப்படித்தான் பிரமையேற்படுகிறது.

NASA–விலிருந்து ஸ்ரீராம் தம்பதியரின் வீட்டிற்குத் திரும்பும் வழியில் இந்தியர்களுக்காகப் பிரத்தியேகமான சாமான்கள் விற்கும் ஒரு குஜராத்தியரின் வீட்டிற்குச் சென்றோம்.

மழை பெய்து ஓய்ந்திருந்தது. நாங்கள் உள்ளே நுழையும் போது பட்டுப் புடவையும் நேர்த்தியான அலங்காரமுமாய்க் குஜராத்தி பாணியில் உடையணிந்து ஒரு பெண்மணி வெளிப்பட்டார். எங்களைக் கண்டதும் முகம் தொங்கிப் போயிற்று. வாருங்கள் என்று கூட வரவேற்காமல் விருட்டென்று உள்ளே போனார். கணவனிடம் குஜராத்தியில் ஏதோ வெடுவெடுப்பது தெளிவாகக் கேட்டது.

தீபாவளிக்காக அவர்களது சங்கத்தில் அன்றைக்கு விசேஷ நிகழ்ச்சியாம். எங்களைக்கவனித்துக் கொண்டிருந்தால் நிகழ்ச்சிக்கு நேரமாகி விடும் என்று அவருக்குக் கோபம். கணவரின் கவனம் உள்ளே மனைவியின் சிடுசிடுப்பிலும் எங்களது கோரிக்கைகளிலும் மாறி மாறித் தாவினதைப் பார்க்கப் படுதமாஷாக இருந்தது. அந்தக் குழப்பத்தில் அவர் சரியான விலை சொல்கிறாரா என்று எனக்குச் சந்தேகம். 'நீ வந்தால் வா, வராவிட்டால் போ. நான் போகிறேன்' என்று சூறாவளியாய் மனைவி வெளிப்பட்டுத் தன் காரில் (இரண்டு கார்கள் இருப்பது எத்தனை சௌகர்யம்!) கிளம்பிப்போனார். அதற்குப் பிறகு தான் அந்த மனிதர் நிதானமாக மூச்சு விட்டு



எங்களைச் சரியாகக் கவனிக்க ஆரம்பித்தார்! அங்கிருந்த சின்ன அறை முழுவதும், எலெக்டிரிக், எலக்ட்ரானிக் சாமான்கள். இந்த விலைக்கு உலகத்தின் எந்த பாகத்திலும் கிடைக்காது என்று ஆசைகாட்டும் விலைப்பட்டியல்கள். 'ஆசைக்கோர் அளவில்லை அகிலமெல்லாம் கட்டி' என்னும் வைராக்கியத்தில் நான் கையைக் கட்டிக்கொண்டு நின்றேன். (கையிருப்பு டேஞ்சர் ஸிக்னலுக்குச் சரிந்திருந்தது!)

வீடு போய் நாங்கள் சேர்ந்த நேரத்துக்குள் சீதா ஸ்ரீராம் பெரிய விருந்து சமைத்து வைத்திருந்தார். நாகரீக நங்கையான சீதாவின் சிநேக பாவமும் தானாக உதவ முன்வரும்கரிசனமும் என்னை மிகவும் கவர்ந்தது. தெளிவான சிந்தனையும் நிர்வாகத் திறனும் கொண்டவராகத் தெரிந்தார். வெகுநாள் பழகிய தோழி போல் உரிமையும் அன்பும் கலந்த அவரது உபசரிப்பு நெஞ்சை அள்ளியது. கணவருடைய தொழிலில் தானும் உதவுவதாகச் சொன்னார்.

''இதென்னங்க கஷ்டம்'' என்று எல்லாக் காரியத்தையும் அவர் மிகச் சரளமாகப் பாவித்தது கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் என்று நான் நினைத்துக் கொண்டேன். இரவு திரு. உதயமூர்த்தி மகனையும் மருமகளையும் அழைத்து வந்திருந்தார். சின்னப் பெண்ணாயிருக்கும் அவருடைய மருமகள் அங்கு டாக்டராக வேலை பார்க்கிறார். அமெரிக்க வாழ்க்கை பழகிவிட்டதென்றும், வேலை மிக அதிகமானாலும் மனத்துக்குத் திருப்தியாக இருக்கிறதென்றும் ஒரு வயதுக் குழந்தையை க்ரெஷ்ஷில் (உதயமூர்த்தி தம்பதிகள் இருப்பது லூஸியானாவில்) விட்டு விட்டு வேலைக்குப் போவதாகவும் சொன்னார். 'நோ ப்ராப்ளம்' என்று மிகத் தன்னம்பிக்கையுடன் பேசுவதைக் கண்டு மாமனாருக்கேற்ற மருமகள் என்று நினைத்துக் கொண்டேன்.

மறுநாள் விடியற்காலை சங்கர் ரமணி குடும்பத்தினர்கள் டல்லாஸுக்குக் கிளம்பிச் சென்றதும் நான் நியூயார்க்குக்குக் கிளம்பும் காலை விமானத்தைப் பிடிக்க வேண்டியிருந்தது. ஸ்ரீராமின் வீட்டிலிருந்து விமான நிலையம் நாற்பது மைல்கள்! மழை வேறு நசநச என்று பெய்து கொண்டேயிருந்தது. ஸ்ரீராமும் சீதாவும் சரளமாகப் பேசியபடியே என்னை விமான நிலையத்துக்கு அழைத்துச் சென்றது 'என்னால் இவர்களுக்கு எத்தனை சிரமம்' என்று நெருடிக் கொண்டிருந்த கூச்சத்தைச் சற்றுக் குறைத்தது.

அமெரிக்க வாழ்வு தனக்குப் பழகிப் பிடித்துவிட்டதென்றும் தான் மிக சந்தோஷமாக இருப்பதாகவும் சீதா சொன்னார். ஆளும் வசதியுமான குடும்பத்தில் பிறந்து வளர்ந்திருப்பவருக்கு எல்லா வேலையும் இங்கு தானே செய்வது ஏதும் கஷ்டமாக இல்லை என்றார். இந்தியாவில் இருக்கும் ஆள்வசதி சௌகர்யத்துக்காகவும்மற்றவற்றுக்காகவும் ஏங்கி அலுத்துக் கொள்ளும் இந்தியப் பெண்களைக் கண்டால் தனக்கு எரிச்சல் ஏற்படும் என்றார். ''தன் வாழ்க்கையையும் கெடுத்துக் கொண்டு கணவனின் மன நிம்மதியையும் கெடுக்கும் பெண்கள் இவர்கள். இங்கு அமெரிக்கர்களிடையே மிக மெச்ச வேண்டிய ஒரு குணம், இவர்களிடம் போலி கௌரவம் கிடையாது. நல்ல வசதியுள்ள குடும்பத்தைச் சேர்ந்த பெண்மணிகள்கூட நேரத்தை வீணாக்க விரும்பாமல் எந்த வேலை கிடைத்தாலும் கௌரவம் பார்க்காமல் செய்வார்கள். நான் ஒரு பெட்ரோல் பங்கில் பணிப் பெண்ணாக வேலை செய்தால் இங்கு யாரும் தவறாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள். இந்தியாவில் அப்படி முடியுமா? நாக்கை வளைத்துப் பேசத் தயாராக இருப்பார்கள். சின்ன வயசிலிருந்து எந்த வேலையும் ஈனமானதில்லை என்கிற உணர்வைப் பயில்விக்கிறார்கள் இங்கு. அது சுபாவமாகவே ஆகிவிடுகிறது.''

அமெரிக்கப் பொது வாழ்வும் அதைச்சமீபகாலமாகப் பிடித்திருக்கும் பயங்கர சமூகப் பிரச்னைகளைப்பற்றியும் பேச்சுத் திரும்பியது. AIDS வியாதியைப்பற்றி விசாரித்தேன்.

''ஓ, அது மிகவும் பயங்கரம் வாஸந்தி'' என்றார் சீதா வருத்தத்துடன்.

(தொடரும்)





சோறு

பசித்த ஒருவனுக்கு நீ இன்று சோறு போடலாம். ஆனால் நாளைக்கும் அவனுக்குப் பசிக்கும். அவனுக்கு நீ ஒரு தொழில் கற்றுக் கொடுத்தால் ஆயுள் உள்ள மட்டும் அவன் ஜீவனத்திற்குச் சம்பாதித்துக் கொள் கிறேன்.

—இராமதீர்த்தர்.

—சங்கிலி முருகனுக்குச் சோறு போடுபவர் மனோரமா.

கண்கள்

பெண்களின் வாயை விட அவர்கள் கண்களே அதிகம் பேசும்.

—காண்டேகர்.

பேசும் கண்கள்: அம்பிகா.

சில பிரபலங்களின் பொன்மொழிகள்; சில நட்சத்திரங்கள் நடித்த பட காட்சிகள்.

இரண்டையும் இங்கே ஒன்று சேர்த்துள்ளோம். பொருத்தம் தானே!

தொகுப்பு: **நிரைஞானி**

என்ன



நாக்கு

ஒரு பெண்ணின் நாக்கு மூன்று அங்குல நீளமே உள்ளது. ஆனால் ஆறடி உயரமான மனிதனை அது சில சமயங்களில் கொன்று விடுகிறது.

—ஜப்பான் அறிஞர்.

நாக்குடையவர்: சத்யகலா.

அழுகை

கவலையில் எட்டிப் பிடிக்க முடியாத க… இல்லை. சிலர் அழகாக அழுவதற்குக் கொள்கின்றனர்.

—பா…

அழுபவர்: கே.









ஆடு

ஒரு ஆடு சிக்கினால் ராஜதந்திரிகள் அதன் உரோமத்தை மட்டும் கத்தரித்துக் கொள்வர். ஆனால் அரசியல்வாதிகள் அதன் தோலையே உரித்து விடுவர்.

—ஆஸ்டின் ஓமோலே.

ஆட்டைப் பாதுகாப்பவர்: சுபத்ரா.

காதல்

இருட்டி விட்டதே என்பதற்காக ஒத்திப் போடாத ஒரே விளையாட்டு.

—ரீலன்.

காதலர்கள்: மோகன்—நளினி.



குதிரை

கவலைப்படுவது என்பது ஆடும் குதிரை மீது உட்கார்ந்திருப்பது போல. நிறைய அசைவுகள் இருக்கும். எங்கேயும் போய்ச் சேர மாட்டோம்.

—ரோஜர் பாப்ஸன்.

குதிரை மீது: விஜி

வீணை

ஒரு பெண்ணை எப்போதும் காதலித்துக் கொண்டிருக்க முடியாது என்று சொல்வது சுத்தப் பொய். ஒரே வீணை வாத்தியத்தை எப்போதும் வாசித்துக் கொண்டிருக்க முடியாது என்று சிறந்த சங்கீத வித்வான் எவரும் சொல்வதில்லை.

—பால்சாக்.

வீணை வாசிப்பவர்: உதயசந்திரிகா.

ம் எதுவுமே
டக் கற்றுக்

யங் நாஸோ.
ர். விஜயா.

பொருத்தம்





மர்ம
நாவல்



ஆறு மணிக்கு ஒரு கொலை!

ஜெயவண்ணன்

காலை மணி 11.00.

ஆரவாரமான அண்ணாசாலையின் மத்தியப் பிரதேசத்தில் உள்ள ஐந்தடுக்குக் கட்டிடத்தின் மூன்றாவது மாடி அது.

வெளியே—

சங்கர் பி. ஏ.

பிரைவேட் டிடெக்டிவ்.

பளிச்சிட்ட அந்தப் பெயர்ப் பலகையைப் பார்த்து விட்டு உள்ளே நுழைந்தால் விஸ்தாரமான ஹால். ஹாலின் மூன்று புறமும் வெளிர் ரோஸ் வண்ணத்தில் சோபா, டூர் சேர், தரை விரிப்பு....

இடதுபுறம் அரைவட்ட வடிவில் மேஜை.

அதன் உட்புறம் ஒரு பெண்.

மீண்டும் மீண்டும் பார்க்கத் தோன்றும் உருவம்.

வயது 19.

பெயர் நிஷா.

சங்கரின் அந்தரங்கக் காரியதரிசி.... ஸ்டெனோ... டைப்பிஸ்ட்... அக்கௌண்டண்ட்... மேனேஜர்... கேஷியர்... எல்லாம் அவள்தான்.

அவள் முன்னே மேஜைமேல் சினிமாப் பத்திரிகைகள்.

ஒன்றைக் கையில் எடுத்தாள் நிஷா.

அட்டையில் டிம்பிள்கன்னா யாரையோ கேள்விக் குறியுடன் பார்த்துக்கொண்டிருக்க—

பக்கங்களைப் புரட்டினாள்.

பஸ்ஸர் ஒலித்தது.

''ஏதாவது முக்கியமான செய்தி உண்டா?'' என்று சங்கர் கேட்டான்.

''எஸ் பாஸ். கமால் அம்ரோகி மேல் தர்மேந்திராவுக்கு ஏகக் கோபம்,'' என்றாள் பிரிக்கப்பட்ட பக்கத்தைப் பார்த்துக் கொண்டே.

''ஏன்?''

''ரஸியா சுல்தானில் ஹேமாவுக்குத் தரப்பட்ட முக்கியத்துவம் அவருக்குத் தரலியாம். அவர் நடிச்ச பல காட்சிகளை அநியாயமா வெட்டிட்டாராம். போஸ்டரில் கூட ஹேமாதான் மஹாராணி போல் ஜொலிச்சுக்கிட்டு இருக்காங்க. இவரு எங்கேயோ ஒரு ஓரத்திலே நின்னு வேடிக்கை பார்க்கிறாராம்.''

''அடப்பாவமே அப்புறம்?''

''பாஸ் இன்னொரு செய்தி தெரியுமா?''

''ம்...''

''நம்ப ஸ்ரீதேவி இல்லே...''

''நம்ப ஸ்ரீதேவி? சொல்லுங்க...''

''எஸ், பாஸ், நம்ப ஸ்ரீதேவி வடக்கே போய் எவ்வளவு குறைந்த காலத்திலே உச்சிக்கு வந்துட்டாங்க பார்த்தீங்களா? அமிதாப்பச்சன், ராஜேஷ்கன்னா, ஜிதேந்திரா, சன்னி தயால், குணால் கோஸ்வாமி, ராகேஷ்ரோஷன் இப்படி எல்லோருடனும் சேர்ந்து நடிக்கும் ஒரே நடிகை நம்ப ஸ்ரீதேவிதான்...''

''மிஸ் நிஷா.''

''எஸ், பாஸ்.''

''உனக்கு போன்லே அடிஷனலா ஏதாவது காதிலே விழுதா?''

''ம்... ஆமாம் பாஸ்... யாரோ முறுக்கு திங்கறாப் போல...''

''அது முறுக்கு இல்லே. என் பல்லு. என் பல்லை நானே நறநறன்னு கடிச்சுக்கறேன். அவ்வளவு கோபம். நாளையிலேருந்து இந்தச் சினிமாப் பத்திரிகை எல்லாத்தையும் நிறுத்தப் போறேன்.''

''பாஸ்...''

''இரண்டாவதா உன்னை டிஸ்மிஸ் பண்ணப் போறேன்.''

''பாஸ், பாஸ்...''

''அலறாதே! தலைக்கு மேல வேலை நிறைய இருக்கு. நீ தர்மேந்திராவையும் ஸ்ரீதேவியையும் படிச்சிக்கிட்டு உட்கார்ந்திருக்கே!''

''ஸாரி பாஸ். அமிதாப், ரேகா, ராஜேஷ்னு இவங்களைப் பார்க்காமல் என்னால் ஒரு நிமிஷம் கூட இருக்க முடியாது. வேணும்னா என்னை டிஸ்மிஸ் செய்யுங்க...''

''செய்துட்டு?''

''வேறே யாராவது அழகா, இண்டலிஜெண்டா, ஒரு பொண்ணு - ஐ மீன் உன்னைப் போல - கிடைப்பாளான்னு பாருங்க, கிடைக்க மாட்டா; நிச்சயம் கிடைக்கமாட்டா. எனக்குச் சொல்லி அனுப்புங்க. வீட்டிலே நகத்தைக் கடிச்சிக்கிட்டு சும்மாதான் இருப்பேன். கூப்பிட்டு உடனே வந்துடுறேன்.''

''ஸில்லி கேர்ல்''

சங்கர் சிரிக்க

நிஷா சிரிக்க

வெளியே...





2

மணி 11.15

வெகுவேகமாக வந்த ஒரு சிவப்புநிற பத்மினி பிரீமியர் அந்தக் கட்டிடத்தின் காலடியில் ஓரங்கட்டி நின்று, சற்றே குலுங்கி ஓய்ந்ததும் ஒரு பெண் அவசரமாகக் கீழே இறங்கினாள்.

வயது இருபது தேறும் சிவந்த நிறம். பணச்செழுமை மேனியெங்கும் அழகை வாரி இறைத்திருந்தது. வெளிர்பச்சையில் டிஸ்கோ சாரி; அதே நிறத்தில் பிளவுஸ். தலையை அவசரமாகப் பின்னியிருந்தாள். முகத்தில் அசாத்தியக் கலவரம்.

காரைப் பூட்டக் கூடத் தோன்றவில்லை அவளுக்கு.

நடந்தாள்.

பின்—

படிகளில் அவசர அவசரமாக ஏறினாள்.


''மிஸ்டர் சங்கரைப் பார்க்கணும். அவசரமாகப் பார்க்கணும் ரொம்ப அவசரம்...'' என்றாள் நிஷாவிடம். அதே அவசரம் அவள் கண்களில் கூட தெரிந்தது.

''ஒன் மினிட்...'' என்ற நிஷா இண்டர்காமை எடுத்தாள்.

பயோ ரிதம் வாட்ச்

ஒருவராலும் எல்லா சமயங்களிலும் சமமான திறமையோடு செயல்பட முடியாது. சில சமயங்களில் திறமை சுடர்விட்டுப் பிரகாசிக்கும்; சில சமயங்களில் திறமை மங்கிக் காணப்படும். இதை 'பயோரிதம்' என்றுகூறுவார்கள். நேரம், அலாரம் போன்றவை தவிர இந்த 'பயோரிதம்' சமயங்களையும் காட்டக் கூடிய க்வார்ட்ஸ் டிஜிட்டல் வாட்ச் இப்பொழுது தயாராகியுள்ளது. ஒவ்வொருவரும் தங்கள் பயோரித முக்குத் தகுந்தவாறு இந்த வாட்சை 'ப்ரோக்ராம்' செய்து கொள்ளலாம். வேறொருவர் இதே வாட்சை உபயோகிக்க நேரிட்டால் அந்த 'ப்ரோக்ராமை மாற்றித் தமக்கு ஏற்ப அமைத்துக் கொள்ளலாம்.

தகவல்: ரிசர்ச் அண்ட் ரெபரன்ஸ்.



''பாஸ், ஒரு பொண்ணு உங்களைப் பார்க்கணுமாம். அவசரமாப் பார்க்கணுமாம்... பாக்க அப்படியே ஜெயப்பிரதா போலவே இருக்காங்க...''

''அழைச்சுக்கிட்டு வா...''

இண்டர்காமை வைத்துவிட்டுக் ''வாங்க'' என்று சொல்லிச் சங்கர் அறைக்கு அழைத்துச் சென்றாள்.

''வணக்கம் ஸார்'' என்றாள் வந்தவள்.

''வணக்கம்... உட்காருங்க...'' என்று சங்கர் சொல்ல, அவள் எதிரே அமர, நிஷாவும் அவளருகே உட்கார்ந்தாள்.

''என் பெயர் கல்பனா...''

கல்பனாவின் முகத்தில் அசாத்தியக் கலவரம் வாடகை இல்லாமல் குடியிருப்பதை சங்கர் கவனித்தான்.

அவள் இதழ்கள் லிப்ஸ்டிக்கில் நன்றாகக் குளித்திருந்தன.

அதன் மென்மையில் அழகில் இளஞ் சிவப்பில் மயங்கி மூழ்கி, பின் தெளிந்து அவளைப் பார்த்துச் சொன்னான் சங்கர்:

''சொல்லு.''

''...''

கல்பனா மெல்லத் திரும்பி நிஷாவைப் பார்த்தாள். அவள் பேசுவதற்குத் தயங்குவது தெரிந்தது.

''ஷி இஸ் மை பி. ஏ. நீ தயங்காம எதையும் பேசலாம்'' என்றான் சங்கர்.

கல்பனா தொடர்ந்தாள்: ''தேனாம்பேட்டை வில இருக்கு என் பங்களா. என் அப்பா ஷேர் மார்க்கெட்டிலே பல லட்சங்களைச் சம்பாதித்தவர். அவரோட ஒரே பொண்ணு நான்.''

''இப்போ உன் அப்பா எங்கே இருக்கார்?''

''போன வருஷம் அவர் இறந்துட்டார். அவரு செத்த பிறகு நான் அனாதையாயிட்டேன். கார், பங்களா, ஃப்ரிஜ், டீ.வி., வீடியோ இவைகள் தான் இப்போ எனக்குத் துணையாய் இருப்பவை...''

''ஐ ஸீ.''

''இன்னைக்கு காலையிலே எனக்கு ஒரு கடிதம் வந்தது...''

''கடிதமா? தபாலிலா?''

''ஆமாம்'', என்றவள் ஹேண்ட்பேக்கைத் திறந்து மடிக்கப்பட்ட ஒரு கடிதத்தை எடுத்துச் சங்கரிடம் நீட்டினாள்.

அதை வாங்கிய சங்கர் பிரித்தான்.

''கண்ணே கல்பனா, இன்றைக்கு ஆறு மணிக்குள் உன் வாழ்க்கையின் கடைசி அத்தியாயம் முடிஞ்சுடும். உன் கடைசிப் பயணத்துக்கு யார் யாருக்குச் சொல்லணுமோ, அவர்கள் எல்லோருக்கும் முன்னதாகவே சொல்லி அனுப்பிவிடு.''

தமிழில் டைப் செய்யப்பட்டிருந்தது அந்தக் கடிதம்.

கடிதத்தில் கையெழுத்தில்லை.

''இந்தப் பிரச்னையை போலீஸ்கிட்டே கொண்டு போறதைவிட, உங்ககிட்டே வர்றதுதான் நல்லதுன்னு எனக்குப் பட்டுது. அதனால்தான் வந்தேன்...''

மணியைப் பார்த்தான் சங்கர்.

11.30.



''ஸோ, இன்னும் ஏழு மணி நேரம் கூட நீ உயிரோட இருக்கப் போற தில்லே...''

''ஸார்...''

பதறினாள் கல்பனா. ''எனக்கு உங்களோட பாதுகாப்பு வேணும்.''

''எது வரைக்கும்?''

''இன்னைக்கு மாலே ஆறு மணி வரைக் கும்.''

''ஓ. கே. என் திறமைக்குப் புதுசா சவால் விட்டிருக்கான், இந்தக் கொலே காரன். ஆமாம்... உன்னோடு வேறு யார், யார் பங்களாவில் இருக்காங்க...''

''ஒரு வேலேக்காரி மட்டுந்தான்...''

''உனக்கு ரொம்ப வேண்டியவங்க...''

''ரெண்டு பேர். ஒருத்தர் மிஸ்டர் பிரபு. என்னே அவர் உயிருக்குயிரா விரும்பறாரு. ஐ மீன், காதலிக்கிறாரு. அடுத்த மாசம் நாங்க ரெண்டு பேரும் பத்திரிகை அடிச்சிக் கல்யாணம் செய்துக்கப் போறோம். இன்னொருத்தர் என் மாமா மகன். பெயர் ராம்குமார். மந்தைவெளியில் டாக்டரா இருக்கார்...''

''இந்த இரண்டு பேரிலே நீ யாரைச் சந்தேகப்படுறே?''

''பிரபு என் கணவனு வரப் போறவரு. அவரை நான் சந்தேகப்பட்டா, என்னேவிட முட்டாள் வேற யாரும் இருக்க முடியாது. ராம்குமார்! ம்... ஆமாம் சங்கர்... அவர் தான் இந்த வேலேயைச் செஞ்சிருக்கணும்.''

''எப்படி இவ்வளவு உறுதியாச் சொல்றே?''

''சொல்றேன்...'' என்ற கல்பனா தொடர்ந்தாள்: ''பதினேந்து நாட்களுக்கு முன் ஒருநாள்...''

3

காப்பியைக் குடித்து முடித்த ராம் குமார் எதிரே உட்கார்ந்திருந்த கல்பனா வைப் பார்த்தான்.

''கல்பனா, நான் சொல்றேன்னு தப்பா நினேக்காதே. உன்னேப் பற்றிச் சில தகவல்கள் காதிலே விழுந்தது...''

அவனே வியப்போடு பார்த்த கல்பனா, ''என்ன தகவல்? சொல்லுங்க...'' என்று கேட்டாள்.

''உன்னேயும் இன்னொருவரையும் அடிக்கடி சேர்ந்து வெளியில பார்க்கிறதா எனக்குத் தெரிஞ்ச ஒருத்தர் சொன்னர்.''

''அப்படியா?''

''ஆமாம். அதெல்லாம் உண்மையா?''

ஒருகணம் நிதானித்த கல்பனா, மறுகணம் ''உண்மைதான்'' என்ருள் உறுதியோடு.

அவளது பதிலால் சற்றே அதிர்ந்த ராம்குமார், ''இதோ பார் கல்பனா, அவன் யாரு, பேரு என்ன, உனக்கும் அவனுக்கும் எந்த முறையிலே பழக்கம்னு நான் கேட்கத் தயாரா இல்லே. ஆனு ஒண்ணு மட்டும் சொல்றேன். கல்யாணம் ஆகவேண்டிய ஒரு பொண்ணு இப்படி ஒரு ஆணேடு சேர்ந்து வெளியிலே சுத்தறது அவ்வளவு நல்லதா எனக்குத் தோணலே..''

''......''

''நானும் பல தடவை உன்கிட்டே கேட்டுட்டேன். நீ எனக்கு இதுவரைக்கும் சரியான பதிலேச் சொல்லலே. இன்னேக்கு உன்கிட்டேயிருந்து ஒரு பதிலோட போறது என்கிற முடிவோடு வந்திருக்கேன்...''

''கேள்வி என்னன்னு சொல்லலியே!''

''கல்பனா, விளையாடுறியா? சரி, நேரா விஷயத்துக்கு வர்றேன். நம்ப கல்யாணம் எப்போது?''

அவனேப் பார்த்த கல்பனா மெல்லச் சிரித்தாள். பின், ''ஸாரி குமார், என்னே மன்னிச்சுடுங்க'' என்றவள் தொடர்ந்தாள்: ''நானும் நேரிடையாகவே பதில் சொல்லிடு றேன். நானும், நீங்களும் சின்ன வயசிலே ருந்து ரொம்ப நாளா ஒண்ணு வளர்ந்த வங்க. உங்க மேல எனக்கு ஆசை இருக்கு. பாசம் இருக்கு. பட், உங்களே என்னால் காதலிக்க முடியலியே!''

ஒருவர்: யார் என்ன சொன்னாலும் நான் ரொம்ப யோசனே பண்ணித் தான் பதில் சொல்வேன். நீங்க என்ன சொல்றீங்க?

மற்றவர்: நாளைக்கு வாங்க...! யோசித்துப் பதில் சொல்கிறேன்.

—தேனி. எஸ். மாரியப்பன்.



''கல்பனா!''

''ஆமாம் குமார், என்னேயும் மீறி என் மனசிலே ஒருத்தருக்கு இடம் கொடுத்துட் டேன். கொஞ்ச நேரத்துக்கு முன்னே நீங்க கேட்டீங்களே அந்தப் பிரபுவைத் தான் நான் கல்யாணம் செய்துக்கப் போறதா முடிவு செஞ்சிருக்கேன்.''

''நான் இந்தக் கல்யாணத்துக்கு ஒரு நாளும் சம்மதிக்க மாட்டேன்.''

''நான் யாருடைய சம்மதத்தையும் கேட்டு நடக்க வேண்டிய நிலேயிலே இல்லே...''

''உன் நிலே என்னன்னு எனக்குத் தெரியும். நீ எப்படி அவனேக் கல்யாணம் செய்துக்கப்போறேன்னு பார்த்துடுறேன்..''



படபடவெனப் பொரிந்த ராம்குமார், வெகு வேகமாக அந்த வீட்டை விட்டு வெளியேறினான்.

கல்பனா எதுவும் புரியாது திகைத்து நின்று கொண்டிருந்தாள்.

4

பகல் 12.05.

"இதுதான் நடந்தது" என்ற கல்பனா, "சங்கர், எனக்கு என்னவோ அவர்மேல் தான் சந்தேகமா இருக்கு" என்றாள்.

"ஐ. ஸி..." என்ற சங்கர், "ஓ. கே. நிஷா நீ புறப்படு. கல்பனாவோடு அவுங்க வீட்டுக்குப் போ. நானும் கொஞ்ச நேரத்திலே அங்கு வந்து சேர்ந்துடுறேன்..." என்றான்.

"சீக்கிரமா வந்துடுங்க, சங்கர்" என்ற கல்பனா இடத்தை விட்டு எழுந்தாள்.

"ராம்குமார் முகவரி என்ன?"

சொன்னாள்.

நிஷாவும் இடத்தை விட்டு எழுந்தாள்.

5

பகல் 12.35.

அந்த அழகிய பங்களாவைப் பார்த்து நிஷா அதன் வனப்பில் மயங்க, போர்டிகோவில் வந்து நின்று கார் இளைப்பாறியபோது கல்பனா சொன்னாள்.

"இதுதான் என் பங்களா."

இருவரும் இறங்கினார்கள்.


அந்தப் பங்களாவைச் சுற்றி வண்ண மலர்களின் முறையான ராணுவ அணிவகுப்பு...

உள்ளே நுழைந்தார்கள்.

ஆசிரியர்: இரண்டும், இரண்டும் நாலு. நாலும், நாலும் எட்டு. எட்டும், எட்டும் எவ்வளவு?

மாணவன்: என்ன சார், சுலபமான கணக்கையெல்லாம் நீங்கள் சொல்லி விட்டுக் கஷ்டமான கணக்கையெல்லாம் என்னைக் கேட்கிறீர்கள்?

—வீ. முருகன்.



ஆனால் சுத்தமாக இருந்தது.

நடுவே விலையுயர்ந்த சோபாக்கள்.

அதில் படுத்து ஆசைதீர ஒருமுறை புரளவேண்டும் போல் இருந்தது நிஷாவுக்கு.

கல்பனாவுக்கு முன்னால் அப்படிச் செய்வது நன்றாக இருக்காது என்பதால் அந்த ஆசையின் கடிவாளத்தை இழுத்துப் பிடித்துக் கொண்டாள் நிஷா.

சுவரில் வெளிர் நீல வண்ண சூப்பர்செம் புதுக்கவிதை படித்தன.

இருவரும் உட்கார—

ஒரு பெண் வேகமாக வந்து அவர்கள் முன்னே நின்றாள்.

"இவ பேரு மாலதி. நம்ப வேலைக்காரி. ரொம்ப நல்ல பொண்ணு. ஏழையான குடும்பத்திலிருந்து வந்தவ..."

வந்தவளுக்கு வயது இருபது அல்லது இருபத்தொன்று இருக்கலாம். நல்ல அழகி. விருப்பப்பட்டால் மிஸ். இந்தியாவுக்கு முயற்சி செய்யலாம்.

"காப்பி கொண்டு வா."

போனாள்.

"எனக்குப் பயமா இருக்கு, நிஷா."

"இவளைப் பற்றியா?"

"இல்லே. அந்தக் கடிதத்தைப் பற்றி.."

"ஏன்?"

"சாகறதிலே யாருக்குத் தான் விருப்பம் இருக்கும்? அந்தக் கொலைகாரன் என்னை எப்படிக் கொல்லப் போறானோ? கத்தியா? துப்பாக்கியா? நினைக்கும்போதே உடம்பு சிலிர்க்குதே..."

"நோ... நோ..." என்ற நிஷா, "அனாவசியமா மனசைப் போட்டுக் குழப்பிக்காதே" என்று அவளுக்கு ஆறுதல் சொன்னபோது காப்பி வந்தது.

மாலதி நீட்டிய தட்டிலிருந்து காப்பியை எடுத்த போது நிஷாவின் கண்கள் அவள் கரங்களில் மின்னிய வளையல்களின் மேல் பதிய—

"வளையல் புதுசா?"

நிஷா கேட்டாள்.

"ஆமாம்மா... கில்ட் வளையல். சைனா பஜாரில் வாங்கினேன். டஜன் அஞ்சு ரூபாய்..."

பொன்னிறமாய்க் கண்களைக் கவரும் அந்த வளையல்களை மீண்டும் பார்த்தாள் நிஷா.

ஒவ்வொரு கரத்திலும் ஆறு வளையல்கள்...

"நிஷா, ஏதாவது படிச்சுக்கிட்டு இரு. டிரஸ் மாத்திக்கிட்டு வந்துடுறேன்."

கல்பனா நகர்ந்ததும்—

காப்பி டம்ளரை எடுக்க முயன்ற மாலதியைப் பார்த்தாள் நிஷா.

"என்ன சொன்னே? டஜன் அஞ்சு ரூபாயா? ரொம்ப மலிவா இருக்கே. எங்கே, கழட்டு பார்க்கலாம்..."

சற்றே தயங்கி, ஒரு கையிலிருந்த ஆறு வளையல்களைக் கழற்றி நிஷாவிடம் கொடுத்தாள் மாலதி.

மறுகணம்—

ஹேண்ட் பேக்கைத் திறந்து புத்தம்புதிய இருபது ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்த நிஷா, அதை அவளிடம் நீட்டினாள்.

''இந்த வளையலை நான் வச்சுக்கறேன். நீ வேறு வாங்கிக்கோ.''

நிதானமாகச் சொன்னாள் நிஷா.

''அம்மா!''

அலறினாள் மாலதி.

''என்னை மன்னிச்சுடுங்கம்மா. அது கில்ட் வளையல் இல்லே. பவுன் வளையல்...''

''பன்னிரண்டுமா?''

''ஆம...மா...ம்...''

ஒருகணம் நிதானித்த நிஷா, மறுகணம், ''இந்தா'' என்று வளையலை அவளிடம் கொடுக்க, அவள் உடனே இடத்தைக் காலி செய்தாள்.

மாலதி ஏழைக் குடும்பத்தில் வந்தவள். மிஞ்சி மிஞ்சிப் போனால் கல்பனா இவளுக்கு எவ்வளவு சம்பளம் கொடுத்து விடப் போகிறாள்?

பன்னிரண்டு வளையலும் எப்படியும் ஏழு அல்லது எட்டு பவுன் தேறுமே! அந்த அளவுக்கு இவளிடம் பணம் ஏது?

நிஷா நினைத்துப் பார்த்தாள்.

கணக்கு எங்கேயோ உதைத்தது.

அந்த உதைப்பு அடங்குவதற்குள் டெலிபோன் அலறியது.

6

பகல் 1.10.

நடந்து சென்று போனை எடுத்த நிஷா ஹலோ'' என்றாள்.

''கல்பனா, பிரபு பேசறேன்...'' என்றவன் தொடர்ந்தான்: ''என்ன டியர், இன்னைக்கு ஈவினிங் ஷோவுக்கு டிக்கெட் புக் பண்ணிட்டேன். போகலாமா?''

''சினிமாவுக்கா?''

''ஆமாம். ஆனால் ஒன் கண்டிஷன். நீ பக்கத்திலே இருக்கும் போது என் கை சும்மா இருக்காது. போன வாரம் தேவி பாலாவில் கோபிச்சிக்கிட்டது போல இந்த முறையும் உனக்குக் கோபம் வந்ததோ...''

''ஸாரி மிஸ்டர் பிரபு. நான் உங்களோட சினிமாவுக்கு வர்றதா இல்லே.''

''ஏன்? ஏன் வரமாட்டே? ஏன் உன் குரல் கூட ஒரு மாதிரியா இருக்கு?''

''மூன்று 'ஏனு'க்கும் ஒரே பதில். என்னு நான் கல்பனா இல்லே.''

''அப்போ நீ?''

''நிஷா.''

''நிஷாவா? எந்த நிஷா?''

''சங்கரோட அஸிஸ்டெண்ட்...''

''நீங்க எப்படி அங்கே? கல்பனா எங்கே?''

''கல்பனா இங்கேதான் இருக்காங்க. இன்னைக்கு ஆறு மணிக்குக் கல்பனாவை யாரோ கொலை செய்யப் போறாங்களாம். அந்தக் கொலை எப்படி நடக்கப் போறதுன்னு வேடிக்கை பார்க்கணும்னு வந்திருக்கேன்.''

''மிஸ். நிஷா... விளையாடுறீங்களா?''

''அப்படி எந்த எண்ணமும் எனக்குக் கிடையாது. அதுக்கு முதல் காரணம் உங்களோட விளையாட எனக்குத் துளியும் விருப்பமில்லே. இரண்டாவது காரணம் கல்பனாவுக்குச் சக்களத்தியா வர எண்ணமும் எனக்கில்லே...''

''அப்போ நீங்க சொல்றது?''

''ஓபன் ஸ்பேக்ட்.''

''கொஞ்சம் விவரமாத்தான் சொல்லுங்களேன்.''

சொன்னாள்.

''ஆல் ரைட். நான் நேரே அங்கே வர்றேன்.''



7

பகல் 1.45.

பஸ்ஸர் ஒலித்தது.

கல்பனா நடந்து போய்க் கதவைத் திறந்தாள்.



1954—ஆம் ஆண்டு கனடா நாட்டில் ஒரு டாலர் நோட்டில் ராணியின் உருவம் அச்சடிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. மக்களிடம் புழக்கத்திற்கு வந்த உடனேயே அந்நோட்டை அரசு திரும்பப் பெற வேண்டிய சூழ்நிலைக்கு ஆளானது. காரணம் ராணியின் சுருள் முடியில் சாத்தானின் முகம் தெரிந்ததுதான்!

காயத்ரி

வெளியே—

பிரபு.

''வாங்க பிரபு...''

உள்ளே வந்த பிரபு, நிஷாவுக்கு அருகே வந்ததும், ''இவங்க மிஸ். நிஷா. சங்கரோட அஸிஸ்டெண்ட்...'' என்றாள் கல்பனா.

பரஸ்பர அறிமுகம் முடிந்ததும்,

''நிஷா போன்லே சொன்னதை என்னால நம்ப முடியலே. ரியலி, ஐ காண்ட் பிலீவ் இட்...'' என்றான் பிரபு குரலில் கவலை இழையோட.

கல்பனா நடந்ததைச் சொன்னாள்.

ஒருவேளை யாராவது விளையாட்டாச்செய் திருப்பார்களோ?



''நிச்சயம் இருக்காது'', என்றான் நிஷா.
''அப்படீன்னா நான் ஆறு மணிக்குச் சாகப் போறது நிச்சயம்னு சொல்றியா?''
கல்பனா பயம் கலந்த குரலில் கேட்டாள்.
''டேக் இட் ஈஸி. வீணா மனசைப் போட்டு அலட்டிக்காதே...'' என்று பிரபு சொன்னபோது டீ கொண்டு வந்தாள் மாலதி.
டீயைக் குடித்துக் கொண்டே கல்பனா அருகே இருந்த புத்தகத்தை எடுத்துப் பிரித்துப் பார்த்தாள்.
பிரித்த பக்கத்தில் ஒரு கதை.
கதையின் தலைப்பு—
-அழகாக ஒரு கொலை.

ஏட்டுச் சுரைக்காய்...

'செவாரா' என்ற இடத்தில் நடந்த ஒரு மல்யுத்தப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற 20 மல்யுத்த வீரர்கள், தங்கள் ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். அப்போது, 'ஷேக்பூர்' என்னும் ஊரின் அருகே இவர்கள் வந்த வாகனம் நிறுத்தப்பட்டு, சில திருடர்கள் இவர்களிடமிருந்த எல்லாப் பொருட்களையும் பறித்துக் கொண்டு, கட்டிய துணியோடு அனுப்பினர்கள்.

—சம்பத் குமாரி.
ஆதாரம்: ஸண்டே



''வாவ்.''
அதிர்ச்சியோடு புத்தகத்தைக் கீழே போட்டாள் கல்பனா.

8

பகல் 2.15.
சங்கர் வந்தான்.
பிரபுவுக்குச் சங்கரை அறிமுகப்படுத்தி வைத்தாள் கல்பனா.
''மிஸ்டர் சங்கர், ரொம்ப நாளா நான் உங்களை மீட் பண்ணணும்னு நினைச்சுக்கிட்டு இருந்தேன். இன்னைக்குத்தான் வாய்ப்புக் கிடைச்சுது'' என்றான் பிரபு.
''ஏன் உங்களையும் யாராவது கொலை செய்யப் போறாங்களா?''
சங்கர் சொன்னதைக் கேட்டுப் பிரபு சிரித்தான்.
சங்கரும் சிரித்தான்.
பின், அனைவரும் சிரிக்க—
கல்பனா மட்டும் சிரிப்பது போல் பாவனை செய்தாள்.
அவள் உயிர் இன்னும் நான்கு மணி நேரத்தில் பிரியப் போகிறது. அதை நினைக்கும் போது அவளுக்குச் சிரிப்பா வரும்?

9

பகல் 2.30.
அனைவரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். மாலதி பரிமாறிக் கொண்டிருந்தாள்.
சங்கர் சொன்னான்.
''இதே போலத்தான் ஒரு கொலைகாரன் ராத்திரி எட்டு மணிக்குள் உன்னைக்கொலை செய்யப் போறேன்னு ஒரு பெண்ணை மிரட்டினான்...''
''நேரிலா?''
கல்பனா கேட்டாள்.
''இல்லே போன்லே...''
''இது எங்கே சார் நடந்தது?''
பிரபு கேட்டான்.
''நம்ப நாட்டிலே தான். ஆனா, தமிழ் நாட்டிலே இல்லே.''
''சொல்லுங்க.''

''சாயந்தரம் ஆறு மணி இருக்கும். இதேபோலத்தான் எல்லோரும் ஹாலில் உட்கார்ந்து சாப்பிட்டுக்கிட்டு இருந்தாங்க. கொலைகாரனும் அந்தக் கூட்டத்திலே இருந்தான். இருட்டத் தொடங்கியது.' அங்கிருந்த ஒருவர் 'லைட்டைப் போடு'ன்னுசொல்லலே அந்தப் பொண்ணு எழுந்து போய் ஸ்விட்சைப் போட்டிருக்கா...''
''அப்புறம்?''
''அவ்வளவுதான்.''
''என்ன ஸார் ஆச்சு?''
''அந்தப் பொண்ணு ஸ்விட்சைத் தொட்டாள். அப்புறம், அப்படியே நின்னுக்கிட்டிருந்தா.''

''என்ன சங்கர், சஸ்பென்ஸ் வேண்டாம்! நடந்ததைச் சொல்லுங்க.''
கல்பனா பயம் கலந்த குரலில் கேட்டாள்.
''ஸ்விட்ச் போர்டிலே கண்ணுக்குத்தெரியாதபடி மெல்லிய ஒயரை அந்தக் கொலைகாரன் முன்னதாகவே பதிச்சி வச்சிருந்திருக்கான். அந்தப் பொண்ணு ஸ்விட்சைத் தொட்டது தான் தாமதம், அப்படியே ஷாக் அடிச்சி கருகி செத்துப் போயிட்டா.''
''ஓ, காட்...''
கல்பனா அதிர்ச்சியில் முணுமுணுத்தாள்.
''இப்படிக் கூட நடக்குமா ஸார்?''
பிரபு கேட்டான்.
''எப்படியும் நடக்கும்'' என்ற சங்கர், ''சே, ஏன் இவ்வளவு புழுக்கமா இருக்கு? கல்பனா, கொஞ்சம் ஃபேனைப் போடேன்'' என்றான்.

''ஐயோ, நான் மாட்டேன்'' என்று கல்பனா அலற—
சங்கர் சிரிக்க—
மற்றவர்களும் சிரிக்க—
நிஷா எழுந்து ஸ்விட்சைத் தட்ட—
ஃபேன் சுழலத் தொடங்கியது.

10

பகல் 3.30.
ஹால்.
கல்பனா, நிஷா, பிரபு மூன்றுபேரும் கேரம் ஆடிக் கொண்டிருக்க, சங்கர் பேப்பரில் மூழ்கியிருந்தான்.
''மிஸ்டர் சங்கர்!.''
பிரபு அழைக்க—
சங்கர் நிமிர்ந்தான்.
''எனக்கு ஒரு சந்தேகம்...''
''நீங்க ஜெயிப்பீங்களான்னுதானே.... அந்தச் சந்தேகமே வேண்டாம். நீங்க நிச்சயம் தோற்று விடுவீங்க...''
''இல்லே ஸார், கொலேகாரன் ஆறு மணிக்குள்ளே கொலே செய்யப்போறேன்னு மிரட்டியிருக்கானே! ஒருவேளை ஆறுமணிக்குள்ளே முடியலேன்னா...?''
''கடிதம் எழுதி டயம் கொடுத்த கொலேகாரன் நிச்சயம் ஒரு ஜெண்டில்மேன் டைப் கொலேகாரனாத்தான் இருப்பான்.''
''புரியலே...''
''ஆறு மணி ஆயிட்டுதுன்னா நிச்சயம் அவன் இந்தக் கொலேக்கு முயற்சி செய்யவே மாட்டான்....''
''அப்படியா...?''
''ஆமாம்... ஏன் கேட்கறீங்க?''
''விஷயம் இப்படி இருக்கும்னு எனக்குத் தெரியாததாலே, இன்னைக்கு ஈவினிங் ஷோவுக்கு எனக்கும் கல்பனாவுக்கும் சினிமாவுக்குப் போக டிக்கெட் வேறே ரிசர்வ் செஞ்சுட்டேன்.''
''அதனாலென்ன? படம் ஆறரைக்குத்தானே?''
''ஆமாம்.''
''ஆறேகாலுக்கு நீங்க ரெண்டுபேரும் வீட்டை விட்டுப் புறப்படுங்க. அப்புறம் எந்த பயமும் வேண்டாம். படத்தை மிஸ் பண்ண வேண்டாம்.''
''தேங்க்ஸ் ஸார்.''
பிரபு மகிழ்வோடு கூற—
''நான் வரலே.''
கல்பனாவைத் திரும்பிப் பார்த்தான் சங்கர்.
''இதோ பார் கல்பனா, எதையும் வாழ்க்கையில் நாம ஸ்போர்டிவ்வா எடுத்துக்கணும். அப்போதான் லைஃபை நல்லா அனுபவிக்க முடியும்.''
''கொலே செய்யறதைக் கூடவா?''
கல்பனா கேட்டாள்.
''ஆமாம் கல்பனா. நீதான் அனாவசியமாப் பயப்படறே. நான் உன் கூட இருக்கிற வரைக்கும் இங்கு எந்தக் கொலேயும் நடந்துட முடியாது. நீ எந்தக் காரணத்தைக் கொண்டும் பயப்பட வேண்டாம். பிரபு ஆசையை ஏன் கெடுக்கிறே? பி



ஹேப்பி... சினிமாவுக்குப் போயிட்டு வாங்க... ஓ. கே....''
ஒருகணம் நிதானித்த கல்பனா பின் சொன்னாள்.
''உங்களுக்காக ஓ. கே.''

11

மாலே 4.30.
அனைவருக்கும் பாஸந்தி கொண்டு வந்தாள் மாலதி.
ஒரு ஸ்பூன் பாஸந்தியை எடுத்துச் சுவைத்த சங்கர், ''கொலே செய்யணும்னு திட்டம் போடும் கொலேகாரன் எப்படியும் அதைச் செய்து முடிக்கலாம்'' என்றான்.
கல்பனா அதிர்ந்து நிமிர்ந்து சங்கரைப் பார்த்தாள்.
''இந்தப் பாஸந்தியிலே விஷத்தைக் கலந்து கூடகொலே செய்யலாம் இல்லேயா பாஸ்?''
நிஷா கேட்டாள்.
மறுகணம்—
வாயருகே கொண்டு போன ஸ்பூனைப் பதற்றத்துடன் கீழே போட்டாள் கல்பனா.
''ஏன் கல்பனா?'' என்று நிஷா கேட்க—
''எனக்கு வேண்டாம்'' என்ற கல்பனா பாஸந்தி நிரம்பிய கப்பை மேஜைமேல் வைத்தாள்.
''பயந்துட்டியா?'' என்ற நிஷா, அவள் வைத்த பாஸந்தியைத் தான் எடுத்துக் கொண்டு, தன்னிடமிருந்ததை அவளிடம் கொடுத்தாள்.
''நிச்சயமா இதில் விஷம் இருக்காது. தைரியமாச் சாப்பிடு.''
பயம் தெளிந்த கல்பனா சாப்பிடத் தொடங்கினாள்.
சற்று நேரத்தில் டிரேயில் காப்பியை எடுத்துக் கொண்டு வந்த மாலதி, அதை

அறிவிப்பாளர்: தலேவருக்கு மாலேகள் போட்டவர்கள், விழா முடிந்ததும், நேரிலே வந்து, மாலேக்கான பணத்தைப் பெற்றுச் செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
—கே. அனுராதா.





சங்கரிடம் நீட்ட, அதை சப்பை எடுத்துக் கொண்ட சங்கர்—

''மாலதி'' என்றான்.

அவள் நிமிர்ந்து சங்கரைப் பார்த்தாள்.

''நீ சினிமாவில் நடிக்கிறாயா?''

சட்டென்று சங்கர் இப்படிக் கேட்கவே மாலதிக்கு ஏதுவும் புரியவில்லை.

''உண்மையாத்தான் சொல்றேன். என் நண்பன் ஒரு சினிமா டைரக்டர். அடுத்த படத்துக்கு ஒரு புதுமுகத்தைத் தேடிக்கிட்டு இருக்கான். நீ அழகா இருக்கே. உனக்கு சினிமாவுக்கு ஏற்ற முகவெட்டு இருக்கு. நீ மட்டும் ஒரு படத்திலே நடிச்சுட்டா, அப்புறம் என்ன நடக்கும் தெரியுமா? நதியா; ரேவதி, ஊர்வசி, கலைஞானு எல்லோரையும் விட்டுட்டுத் தயாரிப்பாளர்கள் உன்னை ஒப்பந்தம் செய்ய க்யூ வரிசையில் நிற்பாங்க...''

மாலதியால் பதில் பேச முடியவில்லை.

'நான் அவ்வளவு அழகாவா இருக்கேன்? சினிமாவிலே நடிக்கும் தகுதி எனக்கு இருக்கா? சினிமாவிலே நடிச்சா நிறையப் பணம் கிடைக்குமே! அந்தப் பணத்திலே இதே போல — ஏன்? — இதைவிடப் பெரிய பங்களா வாங்கலாம். கார், டி. வி., வீடியோ, ப்ரிட்ஜ், இன்னும் இரண்டு டஜன் வளையல், பாப்கார்ன் எல்லாம் வாங்கலாம். பாக்கிப் பணத்தை பெட்டியில் வைத்துப் பத்திரமாய்ப் பூட்டி வைக்கலாம்.''

அவள் சிறகின்றி விண்ணில் பறக்கத் தொடங்கினாள்.

அவளது மௌனத்தைக் கண்டு அவளது மனச்சலனத்தைத் துல்லியமாகப் புரிந்து கொண்ட சங்கர் தொடர்ந்தான்: ''உனக்கு இஷ்டம்னு சொல்லு. நாளைக்கே அந்த டைரக்டர்கிட்டே உன்னை அழைச்சுக்கிட்டுப் போறேன்.''

''ஐயா, உண்மையாத்தான் சொல்றீங்களா?''

''ஆமாம். நாளைக்குப் போகலாமா?''

இடையே குறுக்கிட்டான் பிரபு.

''என்ன ஸார் நீங்க? போயும் போயும் இவளைப் போய் சினிமாவுக்குச் சிபாரிசு செய்றேன்னு சொல்றீங்களே?''

''ஏன்?''

சங்கர் கேட்டான்.

''சினிமாவுக்குத் தேவையான முகவெட்டு இவளுக்கு இருக்கிறதா நான் நினைக்கலே. அதுவுமில்லாம இருக்கிறதை வச்சுக்கிட்டு நிம்மதியா இருக்கிறவளைப் போய் சினிமா, அது, இதுன்னு ஆசை காட்டிக்கிட்டு...'' என்ற பிரபு, ''நீ போ மாலதி'' என்று கூறவே, மாலதி 'வெடுக்'கென்று திரும்பி அவனை நோக்கி அனலாய் ஒரு பார்வையை வீசிவிட்டு உள்ளே போய் விட்டாள்.

சங்கர் மெல்லத் திரும்பி நிஷாவைப் பார்க்க, நிஷா மெல்ல இடத்தை விட்டு எழுந்து யதேச்சையாய்ச் செல்பவள் போல் அடுக்களையை நோக்கி நடக்க—

''ஆமாம். அதுவும் சரிதான்'' என்று கூறிய சங்கர், மெல்ல மனதிற்குள் சிரித்துக் கொண்டே பேப்பரில் மூழ்கத் தொடங்கினான்.

12

மாலை மணி 5.00.

''நிஷா.''

''எஸ். பாஸ்.''

''இன்ஸ்பெக்டர் ராஜுவேல் இருக்காரா பார்.''

எழுந்து சென்ற நிஷா டெலிபோனைச் சுழற்றினாள்.

ராஜுவேல் சிக்கினார்.

''பாஸ்'' என்று நிஷா கூப்பிடவே, எழுந்து சென்ற சங்கர் டெலிபோனை வாங்கிக் கொண்டான்.

''ராஜு, சங்கர் பேசறேன். இப்போ என்ன செஞ்சுக்கிட்டு இருக்கீங்க?''

''கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே ஒரு பொண்ணு வந்து டெலிபோனை க்ளீக் செய்துட்டுப் போனா. அவ போட்டிருந்த செண்ட் அவ போன பிறகும் என்னையே சுத்திக்கிட்டு இருக்கு. அந்த செண்ட்டை அந்தப் பொண்ணு பர்மா பஜாரில் எந்தக் கடையில் வாங்கியிருப்பான்னு யோசிச்சுக்கிட்டு இருக்கேன்.''

''ஏதாவது துப்புக் கிடைச்சுதா?''

''இன்னும் இல்லே...?''

''ஒண்ணு செய்யுங்க. 5.45 வரை யோசிச்சுப் பாருங்க. எந்த ஒரு முடிவுக்கும் வரலேன்னு — நிச்சயம் வரமாட்டீங்க— உங்க யோசனையை இரண்டு மணி நேரத்துக்கு ஒத்தி வைச்சுட்டு, உடனே புறப்பட்டு இங்கே வாங்க.''

''இங்கேன்னு?''

இடத்தைச் சொன்னான் சங்கர்.

''என்ன விஷயம்?''

''ஆறு மணிக்குள் கல்பனாவைக்கொல்லப் போறானும் ஒரு கொலைகாரன். முடிஞ்சா நீங்க வரும்போது அவன் யாருன்னு சொல்றேன்.''

''ஐ. ஸீ.''

''கட்டாயம் வந்துடுங்க...''

''ரைட்... வந்துடறேன்...''

13

மாலை மணி 5.15.

சங்கர் கல்பனாவைப் பார்த்தான்.

''கல்பனா.''

நிமிர்ந்தவள் சங்கரைப் பார்த்தாள்.

''மணி ஐந்தேகால் ஆயிட்டுது. நீ போய் டிரஸ் மாத்திக்கிட்டுப் புறப்படு. 6.15-க்கு நீங்க புறப்பட்டுப் போகலாம்.''

கையிலிருந்த ஸ்டிரைக்கரைப் போர்டில் போட்ட கல்பனா இடத்தை விட்டு எழுந்தாள்.

''ஆமாம் கல்பனா. நீ போ. நானும் நிஷாவும் விளையாடிக்கிட்டு இருக்கோம்'' என்றான் பிரபு.

கல்பனா புறப்பட்டு உள்ளே போனாள்.

இன்னும் சுத்தமாக நாற்பத்தைந்து நிமிடங்கள் உள்ளன. அதற்குள் கல்பனாவைக் கொலைகாரன் கொல்ல வேண்டும்.

எப்படி?

என்னதான் இந்த விஷயத்தை 'லைட்'டாக எடுத்துக் கொண்டதாக மற்றவர்களிடம் நடித்தாலும், சங்கரின் மனத்தில் கொஞ்சம் பயம் இருக்கவே செய்தது.

கையிலிருந்த ஆங்கில நாவலில் அவன் கவனம் பதியவில்லை. உட்கார்ந்தபடியே கல்பனாவின் ஒவ்வொரு அசைவையும் மிகவும் உன்னிப்பாகக் கவனிக்கத் தொடங்கினான்.

அவன் மனத்தில் 'ரெட் சிக்னல்' எரியத் தொடங்கியது.

அதோ—

கல்பனா டர்க்கி டவலை எடுத்துத்தோளில் போட்டுக் கொண்டு குளியல் அறையை நோக்கி நடந்தாள்.

சிறிது நேரத்தில் —

குழாயிலிருந்து 'சள்'ளென்ற ஒலியுடன் தண்ணீர் வாளியில் சரணடையும் ஓசை...

தொடர்ந்து, கல்பனா முகம் கழுவும் சப்தம்...

சில நிமிடங்களில்—

சந்தனச் சோப்பின் மணம் உடன் உலாவர, சுத்தமாகக் கழுவப்பட்ட முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டே வந்தாள் கல்பனா.

சங்கர் அவளைப் பார்த்தான்.

முன்பே அழகான முகம், இப்போது மேக்கப் இல்லாமல், பௌர்ணமி சந்திரனைப் போல் சுத்தமாக மிக அழகாக இருந்தது.

ஆனால்—

அவளிடம் ஏதோ ஒரு மாறுதல்...

அவளது உதடுகள்...

கதிரவனின் சங்கமத்தால் வெட்கி குங்குமமாய்ச் சிவந்திருந்த செவ்வானம் போல் இருக்கும் அவளது உதடுகள் இப்போது லிப்ஸ்டிக் யாவும் தண்ணீரில் கரைந்து விடவே, சாயம் போன நிலையில், அவை வெளுத்திருந்தன.

தன் அறைக்குச் சென்று, தீபாவளிக்கு வாங்கிய 'டிஸ்கோ' சேலையைக் கட்டிக் கொண்டு, கூந்தலைப் பிரித்து விட்டுக் கொண்டு, மெதுவாக நடந்து வந்தகல்பனா, அதே ஹாலின் ஓரமாய் இருந்த 'டிரஸ்ஸிங்' டேபிளின் முன் போய் அமர்ந்தாள்.

14

மாலை மணி 5.30.

எண்ணெய்யை எடுத்துக் கூந்தலில் கொஞ்சம் கொஞ்சமாகத் தடவிக் கொண்டு, நிதானமாக விரல்களால் நீவி அதிலிருந்த சிக்கலைப் பிரித்தாள் கல்பனா.

சங்கர் அவளைப் பார்ப்பதும், பின் கையிலிருந்த நாவலை மேய்வதுமாக இருந்தான்.

கல்பனாவின் பின்புறம் அவனது பார்வையின் நேர்க்கோட்டில் வர, அவளது முகம் கண்ணாடியில் தெளிவாகத் தெரிந்தது.

சிக்கல் எடுக்கப்பட்ட கூந்தலை நிதானமாகப் பின்னத் தொடங்கினாள் கல்பனா.



'லேடி டே' பவுடரைக் கையில் கொட்டிக் குழைத்து, முகம் பூராவும் வஞ்சனையில்லாமல் பூசத் தொடங்கினாள் கல்பனா.

அந்தப் பவுடரின் மணம் அந்த ஹால் முழுவதும் ரம்மியமாகப் பரவ—

சங்கர் மணியைப் பார்த்தான்.

15

மாலை மணி 5.45.

அந்தக் கொலைகாரன் தோற்றுவிட்டான் என்றுதான் சொல்ல வேண்டும்.

இன்னும் 15 நிமிடங்கள்.

கல்பனா தன் இதழ்களைத் துணியால் மெல்ல துடைத்து விட்டுக் கொண்டாள்.

இனிமேல் எவ்வளவு முயற்சி செய்தாலும் கல்பனாவைக் கொல்ல முடியாது.

பாவம் அந்தக் கொலைகாரன்!

இன்று நன்றாக ஏமாந்து விட்டான்.

பக்கத்திலிருந்த லிப்ஸ்டிக்கைக் கையில் எடுத்தாள் கல்பனா.

நிஷாவும், பிரபுவும் உற்சாகமாகக் கேரம் ஆடிக் கொண்டிருக்க—

சங்கரின் பார்வை கல்பனாவின் மேலேயே பதிந்திருந்தது.

கண்ணாடியில் தெரிந்த அவளது சாயம் போன உதடுகளை ஒருமுறை பார்த்தான் சங்கர்.

லிப்ஸ்டிக்கால் ஜொலிப்பாட்டியபின் புத்துயிர் பெறப் போகும் அந்தச் சிவந்த இதழ்களை ஒரு முறை கற்பனையில் தரிசித்தான்.

லிப்ஸ்டிக்கைப் போட்டபின் அந்த இதழ்களைக் காண நிச்சயம் இரண்டு கண்கள் போதாது.

அந்தப் பனி சிந்தும் அழகிய அதரங்கள்—

மெல்ல அந்த லிப்ஸ்டிக்கின் மூடியைத் திறந்தாள் கல்பனா. லிப்ஸ்டிக்கை இதழ்களுக்கு அருகே கல்பனா கொண்டு சென்ற போது... மறுகணம்—

"பொண்ணு உட்காரவே மாட்டேங்குதே ஏன்?"

"பொண்ணு பெயர் அமராவதி ஆயிற்றே!"

—பி. கலாநிதி.





சடேரென்று தன் இடத்தை விட்டு எழுந்த சங்கர், கண்ணிமைக்கும் நேரத்தில் வழியில் கிடந்த நாற்காலியை எட்டி உதைத்து விட்டு ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து கல்பனாவின் கையைப் பற்றினான்.

பயந்து, அதிர்ந்து 'வீல்'லென்று அலறிய கல்பனா திரும்பியபோது—

நிஷாவும், பிரபுவும் எதுவும் புரியாது திரும்பிச் சங்கரைப் பார்க்க —

சங்கர் கல்பனாவின் கரத்தை உறுதியாகப் பற்றியிருந்தான். அவள் கையில் அந்த லிப்ஸ்டிக்.

''சங்கர்.''

கூவினாள் கல்பனா. பின் கேட்டாள்:

''என்ன ஆச்சு உங்களுக்கு?''

''முதலில் அந்த லிப்ஸ்டிக்கை இப்படிக் கொடு.''

கொடுத்தாள்.

''என்னங்க தந்தி?''

''ஊரிலேருந்து என்னோட அம்மா வர்றாங்களாம்.''

''நினைச்சேன்! தந்தின்னு சொன்ன உடனேயே ஏதோ அபாயம் வருதுன்னு!''

—பா நுஷா.



அவள் கரத்தை விட்டுவிட்டு, அந்த லிப்ஸ்டிக்கை வாங்கிய சங்கர், சற்றுத் தொலைவில் வைத்துக் கொண்டே அதன் நெடியை நுகர—

அவன் முகம் அஷ்டகோணலாக மாற—

அதை மூடிவிட்டுக் கல்பனாவைப் பார்த்தான் சங்கர்.

''உன்னைக் கொல்லக் கொலைகாரன் சரியாகத்தான் திட்டம் போட்டிருக்கான். இந்நேரம் நான் கொஞ்சம் கவனக் குறைவா இருந்திருந்தா உன்னோட கடைசி அத்தியாயம் அவன் சொன்னபடியே முடிஞ்சிருக்கும்.''

''சங்கர்!''

''ஆமாம் கல்பனா. உனக்கு லிப்ஸ்டிக் மேல இருக்கிற 'கிரேஸை' நல்லாத் தெரிஞ்சுக்கிட்ட கொலைகாரன், அந்த லிப்ஸ்டிக்கிலே சயனைடைக் கலந்து வச்சிருக்கான். இதை உன் உதட்டிலே தடவின மறு நிமிடமே உன் கதை முடிஞ்சுடும்.''

''வாவ்...''

கூவினாள் கல்பனா.

''அப்படியா?'' என்று திகைத்து, பின் வியந்த பிரபு, இடத்தை விட்டு எழுந்து சங்கருக்கு அருகே வந்து நின்றான்.

பின், ''என்ன ஸார் அநியாயமா இருக்கு. லிப்ஸ்டிக்கிலே சயனைடா? நம்ப முடியலையே...?'' என்றான்.

சங்கர் பதில் பேசாது அவனைப் பார்த்தான்.

''சயனைட் எவ்வளவு சீக்கிரமா ஆளைக் கொல்லுமா? ஒரு மருந்தைப் பற்றி இவ்வளவு தெரிஞ்சு, இந்தக் கொலையைச் செய்ய அவன் திட்டம் போட்டிருப்பதைப் பார்க்கும் போது...''

''அந்த ஆள் இது போன்ற ஆளிடோட ரொம்பவும் பழக்கம் உள்ளவனாகத்தான் இருக்கணும்.''

''அப்படித்தான் நானும் நினைக்கிறேன்.''

''அந்த ஆள் ஒரு பார்மஸிஸ்டாகவோ, டாக்டராகவோ கூட இருக்கலாம்.''

''கரெக்ட் மிஸ்டர் சங்கர்.''

''அந்தக் கோணத்திலே பார்க்கும்போது கல்பனாவை வெறுக்கிற ஆள் . டாக்டர் ராம்குமார் மட்டுந்தான் .''

''கரெக்ட்... கரெக்ட்...'' என்று துள்ளிய பிரபு, ''ராம்குமார் ஒரு டாக்டர், ஒரு டாக்டர் ஒரு கொலையைச் செய்யற அளவுக்கு மனம் மாறுவார்ன்னு நான் எதிர்பார்க்கலே'' என்றான்.

''நானும் எதிர்பார்க்கலே.''

''என்ன சொல்றீங்க, நீங்க?''

''உயிரைக் காக்க உறுதி மொழி எடுத்துக்கற ஒரு டாக்டர் நிச்சயம் ஒருநாளும் இப்படிப்பட்ட கொடூரமான ஒரு கொலையைச் செய்யத் துணிய மாட்டார்ன்னு சொல்றேன்.''

''எனக்குப் புரியல்லே.''

''சயனைடை வைச்சி இந்தக் கொலையைச் செஞ்சா, எல்லோருடைய கவனமும் டாக்டர் பக்கம் திரும்பிடும்னு முட்டாள்தனமாக் கணக்குப்போட்ட ஒரு புத்திசாலியோட தப்புக் கணக்குத்தான் இது...''

''அந்தப் புத்திசாலி யாராக இருக்கும்?''

''ஏன், நீங்களாகக் கூட இருக்கலாம்.''

''சங்கர்! உங்களுக்கு என்ன பைத்தியமா பிடிச்சிருக்கு?''

''இல்லே மிஸ்டர் பிரபு. நான் நிதானமாத்தான் பேசறேன். இந்தக் கொலையைச் செய்ய முயற்சி செய்தது நீங்கதான்...''

''சங்கர், என்ன சொல்றீங்க?'' என்று திகிலோடு கேட்டாள் கல்பனா.

''சொல்றேன்'' என்ற சங்கர் தொடர்ந்தான்: ''கல்பனா என்னைப் பார்க்க வந்தப்போ உங்களைப் பற்றிச் சொன்னாங்க. 'நானும் பிரபுவும் அடுத்த மாசம் பத்திரிகை அடிச்சிக் கல்யாணம் செய்துக்கப் போறோம்'னுதான் சொன்னாங்க. பொதுவா, 'கல்யாணம் செய்துக்கப் போறோம்'னுதான் சொல்வாங்களே தவிர, 'பத்திரிகை அடிச்

சின்னு' யாரும் சொல்லமாட்டாங்க. கல்பனு அப்படிச் சொன்னதிலே ஏதோ விஷயம் இருக்குன்னு விசாரிச்சேன். நீங்களும் கல்பனுவும் போன வாரம் பதிவுத் திருமணம் செய்துகிட்ட விஷயம் அப்புறம்தான் எனக்குத் தெரிஞ்சுது...''

''....''

''ராம்குமார் கல்பனுவை மிரட்டிட்டுப் போனதை உங்களுக்குச் சாதகமா எடுத்துக்கிட்டு, கல்பனுவைப் பதிவுத் திருமணத்துக்குச் சம்மதிக்க வைத்து, ரகசியமா அந்தத் திருமணத்தை முடிச்சுட்டீங்க. அடுத்த மாதம் ஊரறியத் தாலி கட்டறதாச் சொல்லிக் கல்பனு வாயை மூடிட்டீங்க...''

''சங்கர்!''

கோபத்தோடு கூவினுன் பிரபு.

''சும்மா கத்தாதீங்க மிஸ்டர் பிரபு. மற்றதையும் சொல்லிடுறேன். உங்களோட நோக்கம் கல்பனுவோட சொத்து. ஆனு, உங்களோட மயக்கம் மாலதி மேல். நீங்க அவமேல இருக்கிற மோகத்திலே பவுனில் ஒரு டஜன் வளையல் வாங்கிக் கொடுத்தது தப்பில்லே. ஆனு, அதைக் கையிலே போட்டுக்கிட்டு வேலைக்கு மாலதி வந்தது தப்பு. அவ நிஷாவின் கண்ணில் பட்டது அதைவிடப் பெரிய தப்பு. அப்போ நிஷா மூலம் உருவெடுத்த சந்தேகம், நீங்க மாலதி சினிமாவிலே நடிக்க வேண்டாம்னு அவசாரப்பிலே பேசியபோது உறுதியாயிட்டுது.''

''......''

''கொஞ்ச நேரத்துக்கு முன்னுல் நிஷா தோட்டத்துப் பக்கம் போவது போல அடுக்களைக்குச் சென்று மாலதியை மிரட்டியிருக்கா. அவ எல்லா உண்மையையும் சொல்லிட்டா. 'கல்பனுவை ரகசியமா திருமணம் செய்ததாலே அவ இறந்ததும் இந்தச் சொத்து அனைத்துக்கும் நான்தான் சட்டபூர்வமான வாரிசு. அவ இறந்த மறு மாசமே நம்ம கல்யாணம்'னு நீங்க செஞ்ச சத்தியத்தையும் அவள் சொன்னு. 'நான் செய்யப் போற இந்தக் கொலையை எவனும் கண்டுபிடிக்க முடியாது. போலீஸுக்குச் சவால் விட்டுட்டு இந்தக் கொலையை என்னுல செய்ய முடியும்'னு மாலதிகிட்டே நீங்க சவால் விட்டதையும் அவள் சொன்னு. இவ்வளவு விஷயத்தைச் சொன்ன நீங்க கல்பனுவை எப்படிக் கொல்லப் போறீங்கன்னு மாலதிகிட்டே சொல்லியிருந்தா எங்க வேலை ரொம்ப எளிதாயிருக்கும்.''

அப்போது தான் அந்தச் சம்பவம் நடந்தது.

''யூ டர்ட்டி ராஸ்கல்... நீ இவ்வளவு மோசமானவன்னு புரிஞ்சிக்காம என் வாழ்க்கையை உன்கிட்டே பறிகொடுத்திட்டேனே...'' என்று கூறிய கல்பனு, துயரம் தாங்காது, வெடித்துச் சிதறிய விம்மலுடன் அப்படியே சரிந்து உட்கார —

இனியும் இங்கே இருப்பதைவிட ஆபத்து வேறெதுவும் இல்லே என்ற முடிவுக்கு வந்த பிரபு, சடேரென்று வாயிற்கதவைநோக்கிப் பாய்ந்தான்.

கதவைக் கடந்து, கேட்டைத்தாண்டி, தெருவில் காலடி எடுத்து வைத்து ஓடத் தொடங்கியபோது—



எதிரே போலீஸ் ஜீப் வந்து நின்றது. குதித்துக் கீழே இறங்கிய இன்ஸ்பெக்டர் ராஜவேல், இரண்டே எட்டில் தாவிப் பிரபுவைப் பிடித்துக் கொண்டார்.

16

மாலை மணி 6.30.

காரில் சங்கர்.

அருகே நிஷா.

''கங்கிராட்ஸ்'' — நிஷா.

''எதுக்கு?'' — சங்கர்.

''இந்தக் கேஸை ரொம்ப ஈஸியா 'சால்வ்' பண்ணிட்டீங்களே, அதுக்காக...!''

''எல்லாம் உன்னுல் தான். நீ மட்டும் மாலதியோட வளையலைப் பார்த்துச் சந்தேகப் படலேன்னு என்னுல் ஒன்றும் செய்திருக்க முடியாது.''

ஒரு மாதத்திற்கு முன்புவரை மூடை ஒன்றுக்கு ரூபாய் 2 விதமே விற்பனையாகி வந்த உப்பு, தற்போது ஒரு மூடை 30 ரூபாய் வரை விற்பனையாகி, வரலாறு காணுத விலை ஏற்றத்தை எட்டியுள்ளது.

—த. த. மனேகரன்.



''எனக்கு ஒரு ஆசை பாஸ்.''

''சொல்லு.''

''நானும் நாளையிலேயிருந்து லிப்ஸ்டிக் போட்டுக்கலாம்னு...''

''ஓ. எஸ். போட்டுக் கொள்ளேன். உனக்கும் அழகாகத்தான் இருக்கும்.''

''அப்போ கடைத் தெருவிலே காரை நிறுத்துங்க. லிப்ஸ்டிக் வாங்கிட்டு வந்துடறேன்.''

''ரைட். நிறுத்தறேன். அப்படியே மெடிகல் ஷாப்பிலே எனக்கும் கொஞ்ச வேலை இருக்கு.''

''என்ன வாங்கப் போறீங்க?''

''சயனைட்...''

அவன் சிரிக்க—

அவள் சிரிக்க—

(முற்றும்)

ஜெயிலிலே ஒரு மேம்பாலம்

22

ஹரி புயல் கேசியரைக் கொடுத்து விட்டுத் திரும்பி வந்தான்.

''இன்று சொன்னு?'' என்று கேட்டான் காசி.

''நான் அவளைப் பாக்க முடியலே. ஜெயில் வார்டன் ஒரு கான்ஸ்டபிளை உட்டு வாங்கிக்கச் சொன்னாரு. குடுத்துட்டு வந்துட்டேன். போறப்ப நீ சொன்னதை மட்டும் சொல்லியனுப்பிச்சேன்!...வா அன்னத்தை சாப்டுட்டு வரலாம்.''

''எனக்குப் பசியில்லே.''

அவன் சொல்வது உண்மையில்லை என்று ஹரிக்குத் தோன்றியது.

''எனக்குப் பசிக்குது!''

அவர்கள் சற்றுத் தூரம் நடந்து ஒரு ஹோட்டலுக்குப் போனார்கள். ஹரி இரண்டு சாப்பாடு டிக்கெட்டுகள் வாங்கினான்.

''ஹரி ஒண்ணு போதும்.''

''நீ சாப்பிடறதா இருந்தா நான் சாப்பிடறேன். இல்லேன்னா வேணாம்.''

ஹோட்டலில் கல்லாவில் உட்கார்ந்திருப்பவர் எதிரில் தகராறு வேண்டாமென்று காசி அவனுக்கு இணங்கினான்.

பயங்கரக் கொலை!

ஆஸ்திரேலிய அரசு அங்குள்ள 20 லட்சம் கங்காருகளைத் துப்பாக்கியால் சுட்டுக் கொல்ல முடிவு செய்துள்ளது. காரணம் கங்காருகளின் எண்ணிக்கை கட்டுக்கடங்காமல் பெருகிக்கொண்டே போகிறதாம். மிருகங்களைப் பாதுகாக்கும் கமிட்டியும் மக்களும் அரசின் இந்தத் தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும் பலன் இல்லை. கங்காருவின் மாமிசம் நாய்களுக்குக் கொடுக்கப் படும். அதன் தோல் கைப்பைகள் உட்படப் பல பொருட்கள் செய்யப் பயன்படுத்தலாம்.

—எஸ். எஸ். மணி.



எதிரெதிரே இரண்டு இலைகளில் தண்ணீர் தெளித்து விட்டு உட்கார்ந்திருந்தனர். நீள்வரிசையில் ஒரு பந்திக்கு சப்ளை நடந்து கொண்டிருந்தது. அது முடிந்து தான் இங்கே பரிமாறப் போகிறார்கள். பரிமாறுபவர் வருகின்ற அந்த இடைவெளியில் ஹரியிடம் ஏதோ மனசில் அடுக்கடுக்காக அழுந்திக் கொள்ளும் பளுவைக் கொஞ்சம் இறக்கி விட வேண்டும் என்று காசிக்கு ஓர் ஆயாசம் ஏற்பட்டது. காசி கொஞ்சம் காத்துப் பார்த்தான். பிறகு ''ஹரி'' என்று மெதுவாய்க் கூப்பிட்டான்.

அந்த மேஜையில் அவர்கள் இருவர் மட்டும் தான் உட்கார்ந்திருந்தனர். அந்த ஒதுக்கம் காசிக்கு ஒரு நிம்மதி அளித்தது.

''இன்னு அன்னத்தே!''

அந்தக் குரலின் கனிவு நெஞ்சைக் குத்தியது. இவன் எதற்கு எனக்காக முதுகிலே இரண்டு குத்து வாங்கிக் கொண்டான்?

''கையிலே காயம் ஆறலியே, நீ எப்படி சாப்பிடுவே?''

''ஸ்பூன் வாங்கிக்கறேன்.''

''இலைலே ஸ்பூன் வச்சா கிழிஞ்சிருமே''

''அதெல்லாம் ஜாக்கிரதையா சாப்புட்டுக்குவேன்.''

''என்னாலே எத்தினி பேருக்கு வேதனை.''

காசி சட்டென்று நெகிழ்ந்து விட்டான்.

''நான் இன்னுத்துக்கு இப்பிடி தகராறு பண்றேன்...''

ஹரி அமைதியாக, கம்பீரமாகச் சிரித்தான்.

''சும்மா மனசை அலட்டிக்காதே... அன்னத்தை.. வளிலே மணியைப்பார்த்தேன்...'' அவன் பேச்சை மாற்றினான்.

''எந்த மணி?''

''அதான் ரவுடி மணி... அந்த லாரி ஏத்த வந்த விஷயத்தை போலீஸ் கைல சொல்லவேண்ணதும் வில்லம் ரொம்ப மாறிட்டானும். நீ வந்து திருப்பி அடிப்பேன்னு நெனச்சிருக்கான். வர்லே. ஜெயா மேம்பாலத்திலே நேருக்கு நேரா சவால் வுட்டதும் அதை அவனுக்கு ரொம்பப் புடிச்சுப் போச்சாம். நம்பத் தகராறை இப்பிடிப் பொண்ணு கட்டி சமரசம் பண்ணிக்கலாம்னுதான் வந்திருக்கான் பாவி!''

அதற்குள் காய்கறித் தூக்கு அங்கே வந்தது.

மாத்யூ சாருக்குத் தலையெல்லாம் ஒரு முடி விடாமல் தும்பைப் பூ மாதிரி நரைத்து விட்டிருந்தது. தாடி, மீசை கூட வெள்ளை வெளேரென்று நரை. பழைய

கோட்டு இல்லை. தலையை அசைத்து நிமிர்ந்து கொண்டு நடந்து வரும் அந்த ராஜநடை இல்லை. பளபளவென்று கையில் பாலிஷ் மின்னுகிற ஒரு வாக்கிங் ஸ்டிக் வைத்திருந்தார்.

காரிலிருந்து என்ஜினியர் பீட்டரும், எஸ்தரும் ஆளுக்கு ஒரு கை பிடித்துக்கைத்தாங்கலாக இறக்கி விட்டனர். இறங்கியவுடனே அவர்கள் உதவி தேவைப்படுகிற நிலையில் தாம் இருப்பதைக் குறித்து வெட்கப்படுகிறவர் மாதிரி இருவர் கைகளையும் லேசாக ஒதுக்கினார்.

கையில் வாக்கிங் ஸ்டிக்கை ஊன்றிக் கொண்டு, மெதுவாக நின்று நிதானித்து நடந்து வருவது போல் அவர் வந்தார். உடம்பில் சிறு நடுக்கம்.

அவர் விழுந்து விடுவாரோ என்று காசி பயப்பட்டான். ஆனால் அவர் உறுதியோடு தான் நடந்து வந்தார்.

மார்பளவு வெண்மையான தாடியும், மீசையுமாக, வெள்ளை ஜிப்பாவும் வேஷ்டியுமாக அவர் நடந்து வருவது ஒரு ரிஷிமாதிரி இருந்தது. முகம் கனிந்து விட்டிருந்தது. வயது மட்டும் பழுத்த பழமாயிராமல், மனசே பழுத்த பழமாயிருக்கும் ஒரு மனிதன் முகத்தில் தான் அந்தக் கனிவு இருக்க முடியும்.

இவ்வளவு தள்ளாமை அவருக்கு வந்திருக்கும் என்று காசி எண்ணிப் பார்க்கவில்லை. கோவை சிறைச்சாலையில் இலக்கியப் பேச்சிற்காகப் போனதாக எஸ்தர் சொன்னபோது கூட பழைய மாதிரி சாரைத்தான் அவன்

வையவன்



கற்பனை செய்து கொண்டான். இந்தத் தள்ளாமை அவருடைய சமூகத் தொண்டின் மீதுள்ள ஆர்வத்தைக் குறைக்கவில்லையா?

சப்ஜெயில் வராந்தாவில் நின்று கொண்டு அவரைப் பார்த்த காசி விறுவிறுவென்று படிக்கட்டில் இறங்கி அவரை நோக்கி நடந்து வந்தான்.

கண்ணாடியை ஒரு கையால் தள்ளிவிட்டுக் கொண்டு ''காசி'' என்று அடையாளம் கண்டுபிடித்தவர் மாதிரி சொன்னார்.

வெள்ளை மீசைக்கும், வெண் தாடிக்கும் இடையும் அவருடைய ஆரோக்கியமான பற்கள் அன்போடு சிரித்தன.

''ஆமா சார்.''

''சௌக்கியமா இருக்கியா...?''

''இருக்கேன் சார்.''

''என்ன சொல்றாரு ஜட்ஜ்?''

''பெய்ல் அனுமதி குடுத்துட்டாரு.''

''அப்ப அனுப்பிச்சுடுவாங்க இல்லே.''

''ஓ... இவங்க வந்து ஜாமீன் கையெழுத்துப் போடணும்...''

''ஆல்ரைட்... பீட்டர்'' என்று அவரைத் திரும்பிப் பார்த்தார்.

''இதோ போறேன். நீங்க படியேறிவர வேண்டாம்.''

''இருக்கட்டுமே... படியேறினா ஒருதேகப் பயிற்சிதானே'' மறுபடியும் காசியைப் பார்த்துப் பற்கள் ஒளிவீசச் சிரித்தார்.

மாத்யூசார்பக்கத்தில் எஸ்தரைப் பார்க்கும்போது மகள்மாதிரிதோன்றவில்லை.பேத்தி மாதிரி இருந்தது.

எஞ்சினியர் பீட்டர் சிறைச்சாலை அலுவலகத்தில் நுழைந்தார்.

ஒரு சைக்கிள் கடையில் கண்ட அறிஞர் இராஜாஜியின் வாசகம்:

மனிதனின் மிகச் சிறந்த நண்பன் சைக்கிள். காரைப்போல இதற்குப் பெட்ரோல் வேண்டாம். குதிரையைப் போல இதற்கு உணவு வேண்டாம். ஒரு ஆணுக்கு மனைவியைப் போலவும், பெண்ணுக்குப் புருஷனைப் போலவும் உள்ளது சைக்கிள். அவர்களையும் விட ஒரு விதத்தில் சிறப்பாக உள்ளது. எப்படியெனில் இது கணவனைப் போல் சர்வாதிகாரியும் அல்ல; மனைவியைப் போல் குற்றம் கண்டுபிடிப்பதும் அல்ல.

—அன்னலக்ஷ்மி செல்லம்.



மாத்யூ சார் மெதுவாக இருபுறமும் காசியும் எஸ்தரும்உடன்வரப்படிக்கட்டில் ஏறினார்.

அந்த அதிகாலைப் பொழுதில் சப்ஜெயிலின் நீளமான வராந்தாவில் கூட்டமில்லை. அதை ஒட்டியே சப் – டிரஷரி. அந்த வராந்தாவும் கட்டிடமும் பழைய பிரிட்டிஷ் காலக் கட்டுமானம்.

ஏதோ வாக்கிங்குக்கு வந்தவர் போன்று மாத்யூ சார் நடந்தார். கூடவே எஸ்தர் தொடர்ந்து வருவதைப் பார்த்து விட்டு, ''நீயும் பீட்டரோடப் போம்மா. அந்தப் பொண்ணு வெளியே வர்றப்ப யாராவது ஒரு பொம்பளைத் துணை வேணும் இல்லே'' என்றார்.

''சரிப்பா'' என்று எஸ்தர் காசியை அவரோடு தனியே விட்டுவிட்டு உள்ளே போனாள்.

காசி அவரோடு உடன் நடந்தான்.

''இங்கே ஒரு சுதந்திர தினத்தன்னைக்கி நான் வந்திருக்கேன். அந்த ரூம்லேதான் கலெக்டர் ஆபிஸ்.''

''இப்பக் கூட அங்கேதான் கலெக்டர் ஆபீஸ் இருக்கு.''

''அப்போ ஒரு அருமையான கலெக்டர் இருந்தார். பேரு மறந்து போச்சு. பக்கா ஜெண்டில்மேன். பழைய ஐ. சி. எஸ். ஆபீஸர். பாதிரியார் மாதிரி இருப்பார். இந்த உத்தியோகத்துக்கு இருக்க வேண்டிய கெடுபிடி, கண்டிப்பு ஒண்ணும் இருக்காது. ரொம்ப மென்மையாப் பழகுவார். பெரிய பெரிய ரௌடிங்கள்ளாம் அந்தக் கண்ணியத்துக்கு முன்னாடி நடுங்குவாங்க... எத்தினியோ கலகங்களை ரொம்ப சுலபமா சமாளிச்சிருக்கிறார்...''

மாத்யூ சார் எதையோ சுற்றி வளைக்கிறாரா இல்லை...சாதாரணமாக முதுமையில் அசை போடும் ஞாபகமா... காசியால் உய்த்துணர முடியவில்லை.

''ம்ம்... அதெல்லாம் ஒரு காலம்...மனுஷனுக்கு மதிப்பிருந்த காலம்...''

தூரத்தில் சந்தனக்கட்டை டெப்போவிலிருந்து சந்தன மரங்களை வெட்டி அறுத்துப் பரப்பிய மணம் காற்றில் இழைந்துவந்தது.

சட்டென்று அவர் விஷயத்துக்கு வந்தார்.

''காசி பீட்டர் ஒரு கடிதாசி போட்டிருந்தான்.''

அவன் குற்றவாளி போல் ஒடுங்கினான்

''எஸ்தரும் சொன்னா.''

அவனுக்கு என்சாணும் குறுகிற்று.

எப்பேர்ப்பட்ட மனிதர் இவர்! எவ்வளவு ஒழுக்க சீலர். என்ன உத்தமமான ஆசிரியர். என் பேரில் என்ன தவறு?

அடுத்து என்ன சொல்லப் போகிறாரோ என்று எந்தத் தண்டனைக்கும் சித்தமாயிருப்பவன் போலத் தலைகுனிந்து நின்றான் காசி.

''ம்ம்ம்...'' என்று அவர் ஒரு பெருமூச்சை ஒலியாக இழைத்தார்.

''நான் யார் விருப்பத்துக்கும் குறுக்கே நிக்கறவன் இல்லே... ஆனா?...''

காசிக்கு அந்த ஆனால் வேண்டாம் போலிருந்தது. பளாரென்று ஓர் அறை விட்டு என்ன உன் யோக்கியதை என்று கேட்டால் ஆறுதலாக இருக்கும் போலிருந்தது.

(தொடரும்)



வட்ட மேசை

● ஒவ்வொரு மாதமும் குறைந்தது லாட்டரிச் சீட்டுகளுக்காக இருநூறு ரூபாய் வரை செலவழிக்கும் திருநெல்வேலியிலுள்ள எனது உறவினருக்காக இன்னொரு 'கல்கி'யும் கடையில் வாங்கி அவருக்குத் தபாலில் அனுப்பி விட்டுத்தான் மறு காரியம் பார்த்தேன்.
ஸ்ரீரங்கம், ஆர்.கோபாலன்.

● எங்கள் அலுவலகத்தில் பணியாற்றும் கடைநிலை ஊழியர் ஒருவர் லாட்டரிச் சீட்டு விற்பனையில் இறங்கினார். நூறு சீட்டுகள் வாங்கி எழுபது சீட்டுகள் வரைதான் விற்பார். மீதி முப்பது சீட்டுகள் அவரிடம் தங்கிவிடும். இப்படியே சேர்ந்து, சேர்ந்து சுமார் இரண்டாயிரம் ரூபாய் வரைக்கும், நஷ்டப்பட்டு விட்டார். அந்தக் கவலையை மறக்கக் குடிக்கவும் ஆரம்பித்து விட்டார். லாட்டரி கொடுத்த லாகிரி!
கல்பாக்கம், பி. பி. ராஜா.

● ம. ஸ்ரீதரனின் (மாணவர் பக்கம்) 'சுயதரிசனம்' வித்தியாசமான ஒரு படைப்பு.
சிதம்பரம்–1. கே. ராஜா.

● தேர்தலை முன்விட்டுப்பட்ட ஜெட்டில் பல சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன என்பதனை பாமரமக்களும்அறியும் விதத்தில் விளக்கியுள்ளீர்கள்.
சென்னை–5.
எஸ். சம்பத்குமார்



ராஜாஜி வோட்டுக்களைக் கோர முடியும்?
சென்னை–8 டி.ஆராவமுதன்

● ''லாட்டரி என்னும் லாகிரி'' கட்டுரையின் கடைசிப் பகுதியில்: ''நுழைவு வரியை ரத்து செய்ததற்குக் கப்பம் பெற்றுக் கொண்டார்கள்...'' என்று யாரோ ஒருவர் சொன்னதாக எழுதப்பட்டிருக்கிறது.
நுழைவு வரி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டவன் என்ற முறையில் 'இந்தச் செய்தி, உண்மைக்குப் புறம்பானது என்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.
திருச்சி–8. கே.மாயாண்டி.
தலைவர் திருச்சி மாவட்ட வணிகர் கழகம்.

● சென்னை – ''அரும் பொருட் காட்சியகம்!'' உள்ளே நிற்கும் ''காவலர்கள்'', வரும் மக்களிடம் டிப்ஸ் கேட்கின்

தீர்க்க தரிசனம்

● கடந்த இரண்டு வாரங்களாகக் கல்கியில் வெளி வந்த மருத்துவக் குறிப்புகளைக் கண்ட எங்களது பொருளியல் ஆசிரியர் எங்களையும் அதைப்படித்துப் பயன் பல பெறுமாறு



கூறினார். நாங்களும் அதே போல் படித்துப் பயன்பல பெற்றோம்.

விருத்தாசலம்–1.
அ. சிவாராவணன்.

● ''ங்கள் கார்ட்டூனிஸ்ட் தீர்க்கதரிசி. சுப்ரமண்ய சுவாமியை முயல் ஆகவும், சந்திரசேகரை ஆமை ஆகவும் 4–ந் தேதி இதழில் போட்டாலும் போட்டார். அவர் கருத்துப்படியே சந்திரசேகரே வெற்றிபெற்றுள்ளாரே!
காட்டாங்குளத்தூர்–3.
வி. ச. கிருஷ்ண ரத்னம்.

● பட்டதாரித் தொகுதி தேர்தல் முடிவு எப்படி யானாலும் சரி, ''ராஜாஜி வோட்டுக்கள் பிரிந்துவிடும்' என்பதால் சந்தானத்தை வாபஸ் பெறுமாறு கேட்டுக் கொள்ள ஜனதாவுக்கு எந்தவித தார்மீக அருகதையும் கிடையாது. பல முறை கட்சி விட்டுக் கட்சி தாவி, மதுவிலக்கு போன்ற ராஜாஜியின் உயிர்க்குயிரான கொள்கைகளை அமல் படுத்தாத அ.தி.மு.க.வில் இன்றுள்ள அவர் எவ்வாறு

றனர். தர மறுத்தால் பின் தொடர்ந்து நச்சரிக்கின்றனர். இதனால் கலைப் பொருட்களை நிம்மதியாக ரசிக்க முடியவில்லை. இவர்களின் நச்சரிப்புத் தாளாமல் ஒரு அயல்



நாட்டுப் பெண், பாதியிலேயே வெளியேறியது, என் மனத்தை வேதனையுறச் செய்தது.

அந்தணப்பேட்டை.
—அ. அன்பழகன்

(கடைசி கடிதம் பரிசு பெறுகிறது)

அபிமானவல்லி



கி. ராஜேந்திரன்

அத்தியாயம் 21

வீரமும் வஞ்சமும்

'ஓம், ஓம்' என்று ஒலித்தது. காஞ்சி மாநகரின் கைலாசநாதர் கோயில் கண்டா மணி. மங்கல வாத்தியங்கள் முழங்கின. மூலவருக்கு சர்வ உபசாரங்களையும் செய்து தீபாராதனை காட்டினார் அர்ச்சகர். பயபக்தியுடன் கரம் கூப்பி நின்று தொழுதான் அபராஜிதன். மனைவி வலப்புறமும் மகள் இடப்புறமுமாக நிற்க ஏகாந்த தரிசனம். 'இறைவா இந்தப் பெரும் சோதனையிலிருந்து மீண்டு வரத் துணிவை எனக்குக் கொடு. வெற்றியை என் பக்கலில் இருப்ப எனக்குப் போதிய அறிவாற்றலையும் தா' என்று மனத்துக்குள் வேண்டினான். திரிபுவனிக்கோ ஒரே பரபரப்பு. எப்போது தான் இந்தச் சோடச உபசாரங்கள் முடியுமோ, அப்பாவின் கவனம் நம் பக்கம் திரும்புமோ என்று காத்திருந்து காத்திருந்து பொறுமை இழந்தவளாக,





"அப்பா! யுத்த களம் செல்லு முன் சாவகாசமாகச் சற்று நேரமாவது என்னுடன் பேசுவதாக வாக்களித்தீர்கள்" என்றாள்.

"நினைவிருக்கிறது குழந்தாய்!"

"இப்படிச் சொல்கிறீர்களே தவிர, வழிபாடு முடிந்ததுமே படை கிளம்பச் சித்தமாய் இருக்கிறதே. பட்டத்து யானை உங்களை எதிர் நோக்கிக் கோயில் வாசலில் காத்திருக்கிறதே!"

"அதற்கென்ன செய்வது, திரிபுவனி! பல்லவ நாட்டுக்குள் சோழன் படையுடன் புகுந்த செய்தி தெரிந்த பிறகும் வாளா இருக்க முடியுமா? தாமதமின்றிச் சோதிடர் குறித்துத் தந்த நேரத்தில் பகைவனைச் சந்திக்கச் சேனைகளுடன் புறப்படத்தானே வேண்டும்?" என்று கேட்ட பல்லவேந்திரர், 'இறைவா, ஆதித்தனிடமிருந்து மட்டுமல்ல, இந்த யுவதி தொடர்பாகவும் எனக்குப் பெரும் சோதனை ஏற்பட்டிருக்கிறது. இதுவும் உன் திருவிளையாடலா?' என்று கண்கள் பனிக்கக் கேட்டார் மௌனமாக.

"அப்பா இதென்ன இப்படியும் பேசுகிறீர்கள், அப்படியும் சொல்கிறீர்கள்? வரவர நான் கேட்பது எதையுமே மனத்தில் வாங்கிக் கொள்வதில்லை நீங்கள். யுத்த தந்திரங்களை யோசித்துக் கொண்டிருக்கிறீர்களோ என்னவோ சம்பந்தா சம்பந்தமில்லாமல் பதிலளிக்கிறீர்கள்."

"அப்படியொன்றுமில்லையே, அம்மா. படை இப்போது புறப்பட்டாலும் உடனேயா யுத்த களத்தை அடைந்து விடும்? நெடுந்தூரப் பயணத்துக்குப் பின் தகுந்ததொரு இடத்தில் தானே எதிரியைச் சந்திக்கப் போகிறோம்? நீயும் என்னுடன் வா. செல்லும் வழியெல்லாம் பேசலாம். இரவு படை தண்டு இறங்கும் போது பாசறையில் என்னுடன் இரு. விடிய விடிய உரையாடலாம். காலையில் காஞ்சிக் கோட்டைக்குத் திரும்பிவிடு. தக்க காவலுடன் அனுப்பி வைக்கிறேன்."

தந்தை இப்படிக் கூறி வரும்போதே மகள் ஆனந்தமும் ஆச்சர்யமும் மீதூற, "நிஜமாகவா அப்பா?" என்று கைகூப்பவில் உயர்ந்திருந்த அவன் இடக்கரத்தைப் பற்றிக் கொண்டு தொங்கினாள்.

"திரிபுவனி!" என்று அதட்டினாள் பட்ட மகிஷி மாதேவி அடிகள். "இத்தனை வயதாகியும் இப்படிச் சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொள்ளலாமா? அர்ச்சகர் தீர்த்தம் வழங்கிப் பரிவட்டம் கட்ட வருகிறார் பார். மரியாதையாக நில்!" என்று ரகசியக் குரலில் கண்டித்தாள்.

அடங்கி ஒடுங்கினாலும் திரிபுவனியின் வாய் மட்டும் முணுமுணுத்துக் கொண்டுதானிருந்தது: "போம்மா! நான் அப்பாவின் தலைமையை ஏற்றுப் போர்முனை நோக்கிப் புறப்படுவதால் இனி அவர் சொற்படி மட்டுமே கேட்க முடியும். அந்தப்புரத்தில் உருட்டல் மிரட்டலெல்லாம் சேனை வீரரிடம் செல்லுமா என்ன?"

மன்னரும், மகாராணியும் மிகுந்த பிரயாசைப்பட்டுச் சிரிப்பை உள்ளடக்கிக் கொண்டு அர்ச்சகரிடம் பிரசாதங்களை மரியாதையுடன் பெற்றுக் கொண்டார்கள். கடைசியாக ஒருமுறை கண்குளிர இறைவனைத் தரிசித்துக் கொண்டு கோயில் வாசலுக்கு வந்தார்கள்.

"தேவி! விடை கொடு" என்றார் மன்னர்.

"பிரபோ! நேற்றிரவு எனக்கு எவ்வளவோ ஆறுதல் கூறினீர்கள்; இருந்தாலும் மனம் பதைக்கிறது. காவலரும் மக்களும் காது கேளாத தூரத்தில் கைகட்டி நின்றாலும் அவர்கள் பார்வையெல்லாம் நம்மையே மொய்க்கின்றன. கண்ணீர் பெருக்கவும் முடியாமல் தவிக்கிறேன்" என்றபோதே அவள் ஒரு முறை கேவினாள்.

"கூடாது தேவி!" என்று எச்சரித்தார் பல்லவேந்திரர். "மனத்தைத் திடப்படுத்திக் கொள்!"

ஆரத்தி சுற்றித் திலகமிட்டாள் மகாராணி மாதேவி அடிகள். "திரிபுரமெரித்த பெருமான் ஒவ்வொரு கணமும் உங்களுக்குத் துணை நிற்பார்."

"ஏகாம்பரேசுவரர் அருளால் ஆதித்தனைப் புறமுதுகிடச் செய்து வெற்றி வேந்தனாகத் திரும்புவேன். ஆனால் அன்பே! ஒருவேளை தெய்வ சித்தம் வேறாக இருந்தால்.... நான் கூறியதெல்லாம், நினைவிருக்கிறதா? மறக்க மாட்டாயே?"

"நிச்சயம் நிறைவேற்றி வைப்பேன், பிரபோ!" என்று உணர்ச்சி மேலிட நாத் தழுதழுத்தாள். "அதன் பிறகு தங்கள் இருப்பிடம் தேடி நானும் வருவேன்."

தோள்களைப் பற்றினான். "கண்ணே! ஆண்டாண்டுக் காலமாக உனது அன்பு எனக்கு அளித்து வந்துள்ள பலத்தையெல்லாம் திரட்டி உடன் எடுத்துச் செல்கிறேன்."

"நானும் தங்கள் காதல் ஊட்டிய துணிவிலே காத்திருப்பேன்."

புன்னகைத்தான். பிரதிபலித்தாள். ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொண்டதால் பிரவகித்த அன்பின் சங்கமத்திலே கவலைகள் மூழ்கடிக்கப்பட்டுப்பரவசமும் மன உறுதியும் நம்பிக்கைகளும் மேலோங்கின.

இதற்குள் படிகள் வழியே பட்டத்து யானை மீதேறிக் காத்திருந்தாள் திரிபுவனி. அம்பாரியிலிருந்து எட்டிப் பார்த்த அவளுக்குப் பெற்றோர் இன்னமும் பேசிக் கொண்டு நிற்பது அலுப்பளித்தது.

"அப்பா!" என்று அழைத்துவிடத் துடித்தவள் கட்டுப்படுத்திக் கொண்டாள். கண்ணிமைக்கும் நேரத்தில் அபராஜிதன மனைவியின் கன்னத்தைச் செல்லமாக ஒரு



மனைவி: அதுசரி, தேன் நிலவுக்கு அழைச்சுக்கிட்டுப் போறேன்னு காஷ்மீருக்குக் கூட்டி வந்திருக்கீங்களே ஏங்?

முறை நட்டியதை யாரும் கவனித்திருக்க முடியாது. சரேலென்று திரும்பி யானையருகே சென்று தொட்டதும், மிருதுவாகப் பேசியதும் அது முழங்காலை மடித்தது. அதன் கால் மீது கால் வைத்துக் காதைப் பிடித்துக் தாவி ஏறிய போது முன்னெச்சரிக்கையாகத் தும்பிக்கையால் அவன் முதுகைத் தாங்கிற்று. அம்பாரியில் மின்னலெனப் பாய்ந்தேறி அமர்ந்து கொண்டதும் யானை நிமிர்ந்தெழுந்து கம்பீரமாக நடந்தது. அதன் கண்டாமணியோசை எழுந்த மறுகணம்-

சங்கங்கள் ஒலித்தன, துந்துபிகள் முழங்கின, முரசங்கள் அதிர்ந்தன. மேன்மாடங்களிலிருந்து நூற்றுக் கணக்கான பெண்மணிகள் மலர் மாரி பொழிந்தனர். வேதியர் மந்திரங்கள் ஓதினர். ''ஜய விஜயீபவ'' என்ற வாழ்த்தொலி நாலுதிசைகளிலிருந்தும் எழுந்தது.

கோட்டைக்கு வெளியே சைன்யம் ஒரு மாகடலைப் போல் வியாபித்திருந்தது. இடையில் தென்பட்ட அகன்ற பாதை வழியே பட்டத்து யானை நடந்து செல்லவும் ''திருப்புறம்பயப் பெருவீரர் அபராஜிதன் வாழ்க! வரகுண பாண்டியனை வெருண்டோடச் செய்த வெற்றி வேந்தர் வாழ்க, வாழ்க!'' என்று ஆயிரமாயிரம் கண்டங்கள் முழங்கின. கரமசைத்து அனைவரது வாழ்த்துக்களையும் ஏற்று கைக்கமளித்தபடியே சென்றான் அபராஜிதன். படையின் தலைமையிடத்தை அடைந்து அவன் சைகை காட்டி முன்னேறவும் நால்வகைச் சேனையானது ஓர் அடர்ந்த வனம் இடம் பெயர்ந்து நகர்வது போலச் சக்கரவர்த்தியைப் பின் தொடர்ந்தது. உயரமான யானை மீது அமர்ந்து மேலிருந்து கீழாகப் பார்த்தபோது பிரமிப்பாக இருந்தது திரிபுவனிக்கு. புழுதிப் படலம் சுருண்டெழுந்து புகை மண்டலமாக வான் நோக்கி உயர்ந்தது.

திடும்மென்று அவன் பிரமிப்பிலிருந்து விடுபட்டவனாக, ''அப்பா நான் பெரிய தவறு செய்து விட்டேன்'' என்றான். உடனேயே தன்னைத் திருத்திக் கொள்பவனாக ''இல்லை, இல்லை நீங்கள்தான் என்னை ஏய்த்து விட்டீர்கள்!'' என்று குற்றம் சாட்டினான்.

விரைவில் பரவும் செய்தி...



''நான் உன்னை ஏமாற்றினேனா? என்ன உளறுகிறாய்?'' என்றார் பல்லவேந்திரர்.

''பிறகென்ன? படை கிளம்பு முன்னர் என்னிடம் பேசுவதாக வாக்களித்தீர்கள். நானும் உங்களிடம் வாதாடி இந்தப் போரையே தவிர்த்து விட எண்ணியிருந்தேன். ஆனால் உங்களுடன் பட்டத்து யானை மேல் அமர்ந்து சைன்யத்துக்குத் தலைமை தாங்கிச் செல்லலாம் என்று ஆசை காட்டவும் இந்தக் காட்சியைக்காண்கிற கிளுகிளுப்பில் உடன்பட்டு விட்டேன்! மோசம் போய் விட்டேன் அப்பா!''

''அசடே! என்ன வார்த்தை கூறத்துணிந்தாய்? எதிரி படையெடுத்து வரும் செய்தி தெரிந்த பிறகும் அவனைச் சந்திக்கச் செல்லாமலிருக்க முடியுமா? பல்லவர் மரபிலே வந்தவன் பேசுகிற சொற்களா இவை?''

''அப்பா, நீங்கள் ஆதித்தனோடு போர் புரிந்து தான் ஆக வேண்டுமென்றால் என் மனத்தில் அந்த ஆணழகனைப் பற்றிய ஆசைகளை ஏன் வளர்த்தீர்கள்?''

''கண்ணே! நான் நல்ல நோக்கத்துடன் தான் செய்தேன். ஆனால் உன் கோமளமான இதயத்தைக் கீறிப் பார்க்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகி விட்டேன். விதி வலியது என்று இதைத்தான் பெரியவர்கள் சொல்கிறார்கள். தெய்வ சித்தம் என்றும் கூறலாம்.''

''அப்பா இவ்வாறெல்லாம் பேசினால் நான் ஆறுதல் அடைய முடியுமா? என் மனம் உங்களுக்குத் தெரியாததா? காதல் விதைகளை ஊன்றி, அழகன் எனவும் குணவான் என்றும் ஆதித்தனை வர்ணித்தும், சிலாகித்தும் பேசி நீர் வார்த்தீர்கள். இப்போது 'விதி' என்றும் ''தெய்வ சித்தம்'', என்றும் சமாதானம் சொல்கிறீர்கள் அப்பா! கனவிலும் நினைவிலும் அந்தப் பேரழகனின், பேரறிவாளனின் உருவம் தேஜோமயமாக என் மனத்தில் நிலைத்திருக்கச் செய்தவரே நீங்கள்தானே! அதன் பிறகு அவனுடைய வண்ணச் சித்திரங்களையும் எனக்குக் காட்டி ஆசைத் தீயில் நெய் வார்த்ததும் தாங்களே அல்லவா?''

''திரிபுவனி! நான் பொறுப்பைத் தட்டிக் கழிக்கவில்லை. ஆதித்தன் செய்நன்றி மறந்து என் மீது படையெடுத்து வருகிறானே என்பதை விடவும் உனக்கு ஏமாற்றம் ஏற்படுமோ என்பதால் என் மனம் அதிகமாக வேதனை அடைகிறது. எனவே உனக்கு வாக்களிக்கிறேன். உன் மனத்தில் நான் துளிர் விடச் செய்த காதலை நானே கருக்கி விட மாட்டேன். இந்தப் போரில் நான் வென்றாலும் தோற்றாலும் உன் காதலை நிறைவேற்றி வைப்பேன்!''

''அது எப்படிச் சாத்தியமாகக் கூடும் அப்பா?'' என்று ஆவலும் வியப்பும் மேலிடக் கேட்டாள்.

''ஆதித்தன் தோற்றால் அவன் காதைப் பிடித்துத் திருகி இழுத்து வந்து உனக்கு மணமாலை அணிவிக்கச் செய்வேன்! ஒருவேளை நான் தோற்றாலோ — மரணப்படுக்கையிலிருந்தபடி நான் கேட்கிற கடைசி வரமாக உன்னை அவன் திருமணம்

செய்து கொள்ள வேண்டும் என்று கோருவேன். அவனும் தட்ட முடியாது!''

''அப்பா! உங்களை இழந்து அவரை அடைய நான் விரும்பவில்லை.''


''திரிபுவனி! உன் விருப்பப்படியே எல்லாம் நடக்குமானால் என்னை விட அதிகம் மகிழப் போகிறவர் யார்? ஆனால் ஒருவேளை இறைவன் சித்தம் வேறாக இருந்தால்.... ஆதித்தன் எனது இறுதி ஆசையை நிறைவேற்ற வரும்போது நீ மறுக்காமல் அவனை ஏற்க வேண்டும். இந்த உறுதி மொழியைப் பெறவே நான் உன்னை உடன் அழைத்து வந்தேன். மகாராணியிடமும் சம்மதம் பெற்றிருக்கிறேன். நீ மகிழ்ச்சியோடு ஆதித்தனுடன் தஞ்சைக்குச் செல்லும் போதுதான் என் ஆன்மா சாந்தி அடையும்.''

''அப்படியே செய்கிறேன் அப்பா'' என்று அவர் வலக்கரத்தைக் கையிலேந்தி முத்தமிட்டாள் திரிபுவனி. கண்ணீர் முத்துக்களையும் அதில் பதித்தாள். ''ஆனால்.... ஒருவேளை ஆதித்தன் என்னை ஏற்க மறுத்தால்... நான் காடுபட்டிகளுக்குப் பிறந்தவள் என்பதாக அன்று அம்மா ஏதோ சொல்லிக் கொண்டிருந்தாளே அது...''

''அதுவா...'' என்று சிரித்தார் பல்லவேந்திரர்.

பல்லவருடைய ஆதிக்கம் தெற்கே பரவியபோது கானகத்தில் வாழும் சில தமிழருடன் அவர்களுக்குத் தொடர்பேற்பட்டது. காடவர்கள் என்றழைக்கப்பட்ட இவர்கள் கானகத்தில் சிறிய ஊர்களை உருவாக்கிக் கொண்டு வாழ்ந்தனர்; காடு வெட்டி நாடாக்கிப் பயிர் செய்தனர். இதனால் காடுபட்டிகள் என்றும் காடு வெட்டிகள் என்றும் அவர்களுக்கு மாற்றுப் பெயர்கள் தோன்றின. எளிய மக்களாயினும் இவர்களின் வீரம் அளவிடற்கரியது. கானகத்தின் இயற்கைச் சூழலில் ஆண்களும் பெண்களும் நன்கு வளர்ச்சியுற்றுப் பலசாலிகளாகத் திகழ்ந்தனர். பிற்காலப் பல்லவர்கள் இந்தக் காடுபட்டிகளைத் தங்கள் நண்பர்களாக்கிக் கொண்டனர். பாண்டியருடன் சதா பகை. சோழர்களையோ நம்ப முடியவில்லை. எனவே இவர்கள் தொல்லை கொடுப்பார்களேயானால் இந்தக் காடுபட்டிகளின் உதவி தேவைப்படலாம் என்று பல்லவ மன்னர்கள் கணக்குப் போட்டனர். நட்பை உறுதி செய்த காடுபட்டிச் சிற்றரசன், பல்லவ சக்கரவர்த்தி நந்திவர்மனுக்கு 'காடுபட்டி நந்திப் போட்டரையன்' என்று பெயர் சூட்டி அவன் மேலாதிக்கத்தை ஏற்றான். பல்லவ சக்கரவர்த்தியும் பதிலுக்கு 'காடுவெட்டி தமிழ்ப் பேரரையன்' என்று சிற்றரசனுக்குப் பட்டமளித்துக் கௌரவித்தான். அன்று முதல் பல்லவ மன்னர்கள் 'காடவர் கோன்' என்றழைக்கப்பட்டனர். நந்தி வர்மன், நிருபதுங்கவர்மன், அபராஜிதன் போன்ற பிற்காலப் பல்லவப் பேரரசர்கள் இப்பட்டப் பெயரினைப் பெருமிதத்தோடு தாங்கினர்.

நட்பு உறுதியானதும் சிற்றரசருக்கும் பேரரசருக்கும் இடையே பெண் கொடுக்கல்



மனைவி: மேலே இறங்கி வர்றீங்களா, இல்லே ஃபேன் போடட்டுமா?

வாங்கல் நிகழ்ந்ததிலும் வியப்பில்லை. காடுபட்டி அரச குலத்தைச் சேர்ந்த நங்கையர் இயற்கைச் சூழலில் கவலையற்று வளர்ந்ததால் செழிப்பான அங்க எழிலுடன் விளங்கிப் பல பல்லவ மன்னர்களின் மனங்களை அபகரித்துக் கொண்டனர். அவ்வாறு அபராஜிதன் இதயம் கவர்ந்த ஒரு காடுபட்டி நங்கையே திரிபுவனியின் தாய்.

இந்த விவரங்களையெல்லாம் அன்றிரவு பாசறையில் மகளிடம் கூறி முடித்த பல்லவேந்திரர், ''திரிபுவனி! உன் அன்னை குறுநில மன்னர் குலத்தைச் சேர்ந்தவள் தான். ஆனால் ஒரு சக்கரவர்த்தியின் இதயம் கவர்ந்தவள். எளியவள்தான், ஆனால் தமிழ் மகள். உன்னை மணக்க ஆதித்தன் மறுப்பானேயானால் அதற்கு உன் அன்னையை அவன் காரணமாக்க முடியாது. வேறு ஏதேனும் கற்பனை செய்ய வேண்டியதுதான்'' என்றார்.

''அப்பாடா! இதுதான் விருத்தாந்தமா? அன்று மகாராணியார் ஐயம் எழுப்பிப் பேசியபோது நான் என்னமோ ஏதோ என்று பயந்தே போய் விட்டேன்!''

''அவளுக்கு நீ தன் வயிற்றில் உதிக்கவில்லையே என்ற ஆதங்கம். அது சிலசமயம் நாக்கைப் புரளச்செய்து விடுகிறது.''

''அப்பா! என்னைப் பெற்றெடுத்தவள் என்ன ஆனாள்? நான் ஏன் அவளைப் பார்த்ததேயில்லை?''

''உனக்குத் தாய்ப்பால் அருந்தும் பருவம் மாறுமுன்னரே அவள் திடீரென்று ஒருநாள் விஷக் காய்ச்சல் கண்டு இறந்துபோனாள்'' என்று பெருமூச்செறிந்த அபராஜிதன், ''மகளே, இரு சாமங்களாவது அயர்ந்து உறங்கினால்தான் என்னால் நாளைக்குக் களைப்பின்றிப் போர் நடத்த முடியும்'' என்று கூறி மஞ்சத்தில் சயனித்தான். சில கணங்களிலேயே மெல்லிய சீரான குறட்டை ஒலி எழுந்தது.

'விடிந்தால் யுத்தம் என்ற சிந்தனையே இன்றி எப்படித்தான் அயர்ந்து தூங்குகிறாரோ?' என்று அதிசயித்த திரிபுவனி, இரவெல்லாம் இமைத்தலுமின்றிப் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள்.

மறுநாள் அதிகாலையில் திரிபுவனி தலைநகர் திரும்பிச் செல்ல, படைகளைப் பல பகுதிகளாகப் பிரித்து, ஆதித்தனின் வியூகத்தை உடைத்தெறிய எண்ணினான் அபரா

பரிட்சை நெருங்கிடும் காலம்? கவனமாக படித்திடும் நேரம்



முழுதும் தயாராயிருந்திட வேண்டிய காலம் **காம்ப்ளான்®** பருக வேண்டிய நேரம்.

காம்ப்ளான் ஒன்றில்தான் அவனுக்கு தேவையான அதி ஊட்டமளிக்கும் 23 மூலாதார சத்துணவுகள் உள்ளன.

குழந்தைகள், முக்கியமாக பரிட்சைக்கு படிக்கும் காலத்தில், திடமாக இருந்திடுவது அவசியம். அதனால்தான் பரிட்சை நடக்கும் நேரம் **காம்ப்ளான்** நேரம் என்று அன்னையர் அறிவர்.

உடல் வளர்ச்சியில் பங்கு பெறுவதே புரதம் என்ற சத்துதான். **காம்ப்ளானில்** குழந்தைகளுக்குத் தேவையான புரதம் (20%) இருப்பது மட்டுமல்ல, அப்புரதம் மிகச்சிறந்த புரதமுமாகும் (பால் புரதம்). அத்துடன், அது குழந்தைகளுக்கு தேவையான அதி ஊட்டமளிக்கும் கார்போஹைட்ரேட்டுகள், கொழுப்புச்சத்து, வைட்டமின்கள், தாதுக்கள் ஆகிய 22 கூடுதல் மூலாதார சத்துணவுகள் கொண்டதாகும்.

துவங்குங்கள் **காம்ப்ளான்** உங்கள் குழந்தைகளுக்கு—அன்றாடம் இருவேளை. நினைவில் இருக்கட்டும் டாக்டர்களின் சிபாரிசுபெற்ற திட்டமிட்ட உணவு **காம்ப்ளான்.**

காம்ப்ளான் கிடைக்கிறது இனிய சுவைகளாம் சாக்கலேட், ஏலக்காய்—குங்குமப்பூ, ஸ்ட்ராபெர்ரியும், சாதா ரகத்திலும்.

குழந்தைகள் மிகவும் விரும்பிடும் சுவைகள்.



GKBE.B84.GLC.11 Tam.

காம்ப்ளான்® — திட்டமிட்ட பரிபூர்ண உணவு

'கிழவன்' என்ற பெயரை யாராவது பெருமிதத்துடன் குழந்தைக்குச் சூட்டுவதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

முகவை வட்டார சிற்றூர்களில் இன்றும் 'கிழவன்' என்ற பெயரில் பலர் இருக்கின்றனர். 'கிழவனூர்' என்றொரு சிற்றூரே உள்ளது.

லாலும், மராட்டியர் படையெடுப்பாலும் பலவகையில் சிதறிக் கிடந்த சேது நாட்டை ஒன்றாக்கியவன் கிழவன். ஆங்கிலேயர் ஆட்சியில் தமிழகத்தில் திகழ்ந்த ஒரே ஒரு தனி அரசு புதுக்கோட்டை. அந்தப் புதுக்கோட்டை அரசைத் தோற்றுவித்தவன் அவனே. கட்டபொம்மன் [illegible]



எழுதலாம், ஒரு சரித்திரக் கதை!

இந்தப் பெயர் வைப்பதன் மூலம் மக்கள் கிழவன் சேதுபதியின் நினைவைப் போற்றுகின்றனர். யார் இந்தக் கிழவன் சேதுபதி?

36 ஆண்டுகள் ஆட்சி புரிந்த இவன் ராமநாதபுரம் சீமையை இன்றைய தஞ்சை, புதுக்கோட்டை, நெல்லை, மதுரை, முகவை மாவட்டங்களில் வியாபித்த ஒரு பரந்த அரசாக உருவாக்கியவன். 5000 சதுர மைல் பரப்பளவு. சிறந்த நிர்வாகியாகவும் ஆற்றல் மிக்க படைத் தலைவனாகவும் விளங்கினான் என்பதை விடவும் பெருமை சுதந்திர உணர்வுள்ளவனாக விளங்கினான் என்பதே. நாயக்க அரசனின் தாக்குத

[illegible] சுதந்திர எழுச்சி ஓய்ந்து விட்டது என்று எண்ணியிருந்த ஆங்கிலேயருக்கு சிவகங்கைச் சீமையில் ஏற்பட்ட எழுச்சி பேரதிர்ச்சி. அந்தச் சிவகங்கைச் சீமை உருவாக அடிகோலியவன் கிழவனே. இலங்கையில் ஆதிக்கம் செலுத்திய வெள்ளையருள் டச்சுக்காரர் இந்தியப்பெருநிலத்தில் கால் ஊன்ற முடியாது போனதற்கும் கிழவனே காரணம்.

அவன் பட்டத்துக்கு உரியவனா இல்லையா என்பது பற்றிக் கருத்து வேறுபாடு உள்ளது. குல மரபுப்படி ஆட்சிக்கு வர உரிமை இல்லாதிருந்தும் தகுதி அடிப்படையில் உரிமை பூண்டவன் (கிழவன் — உரிமை பூண்டவன்) என்பதை உலகுக்குப் பறைசாற்றவே இரகுநாதன், 'கிழவன்' என்ற பெயர் சூடினான்.

இத்தகைய சுதந்திர புருஷனின் வீர சரித்திரத்தை ரசமாக எழுதியுள்ள மீ. மனோகரன் எண்பதாவது வயதில் இவன் இறந்த போது இவனது 47 மனைவியரும் சுதந்திரம் சிறிதும் இன்றி உடன்கட்டை ஏறியதையும் விரிவாகவே வர்ணிக்கிறார். அருவருப்பும் எரிச்சலும் ஏற்படுகிறதென்றாலும் சரித்திரம் சரித்திரமேயல்லவா?

கிழவன் சேதுபதி. ஆசிரியர்: மீ. மனோகரன், அகரம் பதிப்பகம், சிவகங்கை - 623 560. விலை: ரூ. 16.

ஜிதன். 'பகைவனின் போர்த் திட்டத்தை முன்கூட்டியே தெரிந்து கொள்ள முடிந்தது எவ்வளவு வசதி! வஞ்சனைதான் என்றாலும் செய்நன்றி கொன்றவனை ஒற்றுடல் மூலம் வெல்வதில் என்ன தவறு?'

வெற்றிச் செய்தியை எதிர்பார்த்துக் காத்திருந்தான் அபராஜிதன். மாலைச் சூரியன் மலைவாயிலில் விழும் நேரம். மிக விரைவாக வந்த குதிரை நிலைத்து நிற்கு முன்னரே பாய்ந்திறங்கினான் துருவன். ''மன்னவா! மோசம் போனோம்'' என்று சக்கரவர்த்தியின் தாள் பணிந்தான்.

ஆயிரம் தேள்கள் ஒரு சேரக் கொட்டியது போலுணர்ந்தான் அபராஜிதன். உடலும் உள்ளமும் பதற, ''துருவா, என்ன நடந்தது?'' என்று தானைத் தலைவனைக் குனிந்து நோக்கி கர்ஜித்தான்.

எழுந்து நிற்கவும் அஞ்சியவனாகப் பற்றிய பாதங்களை விடாமல் பேசினான் துருவன்: ''பிரபோ! ஆதித்தனின் படைபலம், அவை முன்னேறும் விதம் ஆகியவை குறித்து நமக்குக் கிடைத்த தகவல்கள் பொய்யானவை. நம்மை ஏமாற்றுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டவை. பிரபோ நமது படைகள் எதிர்ப்பே தெரிவிக்காத பலவீனமான பகுதிகளில் ஆதித்தனின் சேனை வீரர்கள் ஊடுருவி வெகு வேகமாய் முன்னேறுகிறார்கள். ஆங்காங்கே திடீர் திடீரென்று சோழ வீரர்கள் எங்கிருந்தோ முளைத்தெழுகிறார்கள். களஞ்சியங்களுக்குத் தீ வைத்தும், மாடு கன்றுகளை அடித்து விரட்டியும் ஆறு குளங்களை உடைப்பெடுக்கச் செய்தும் நாசம் விளைவிக்கிறார்கள். சிறுசிறு கூட்டமாக நமது வீரர்களைப் பிரித்துச் சுற்றி வளைத்துத் துவம்சம் பண்ணுகிறார்கள். பிரபோ! எல்லாம் ஏதோ மாயா ஜாலம் போல் நடக்கிறது!''

''ஆகா! ஆதித்தனை வீராதி வீரன் என்றுதான் எண்ணியிருந்தேன். வஞ்சனையிலும் நிகரற்றவன் என்று நிரூபித்து விட்டான்! துருவா! இனி யோசிக்கவோ தயங்கவோ இடமில்லை. ஆதித்தனை நானே நேருக்கு நேர் சந்தித்து இறுதி முடிவு காண வேண்டியதுதான். வெற்றி அல்லது வீரமரணம்!'' என்றான் அபராஜிதன்.

(தொடரும்)

ஆரோக்கியம் அழைக்கிறது



மனம்

மனசை உற்சாகமாக வைத்துக் கொள்வது என்பது ஒரு கலை. எப்போதும் பரபரப்பாக, எந்த வயதிலும் ஏதாவது ஒரு காரியத்தில் ஈடுபட்டிருப்பார்கள்.

அதிகாலை 5, 5.15க்குத் தான் புதுசாகக் கீரைக் கட்டு கிடைக்கும் என்று தெரிந்து கொண்டு சோம்பல் படாமல் அங்கே போய் நிற்பார்கள். சுற்றுலாப் பொருட்காட்சியோ, சோழவரம் ரேஸோ - அலுக்காமல், சலிக்காமல் போய்ப் பார்த்து ரசிப்பார்கள். எங்கேயாவது விபத்து, விவகாரம் என்றால் கூடத் தலைபோகிற விஷயமாய்ப் பாவித்துப் போய்ப் பார்ப்பார்கள். எதிலும் தங்களுடைய நிதானத்தை இழந்து விடாமல் செய்தி அறிந்து கொள்கிற ஒரே ஆர்வத்தில் அலைகிற பேர்வழிகள் இவர்கள். ஒன்றுமே இல்லை என்றால் கூட சினேகிதர்களைத் தேடிப் போய் வம்பு, அரட்டை... சூடாகத் தகவல் ஏதாவது கிடைக்குமே என்கிற எதிர்பார்ப்பு...

இவர்களின் மனநிலைக்கு நோய்கள் மிரண்டு ஓடி விடும்.

சங்கீதம், குழந்தைகளுடன் மனைவி மக்களுடன் உற்சாகமாகச் சில மணி நேரங்கள் பொழுதைச் செலவிடுவது. புத்தகங்கள் படிப்பது... விளையாடுவது.. என்று எத்தனை விஷயங்கள் இல்லை? மனசை ஆனந்தமாக வைத்திருந்து ஆரோக்கியமாக வாழ எத்தனை வழிகள் உண்டு தெரியுமா?

'பையன்... அமெரிக்காவிலே பெரிய்ய டாக்டராக்கும்... காலம்பறத்தான் போனில் பேசினான்... அடுத்த வாரம் வரானும்... பொண்ணு... ஜெர்மனியிலே 'இருக்கா...' என்று பேசிக் கொண்டு கிழவரும், கிழவியும், 'உன்னைப்பார், என்னைப் பார்' என்று ஏதாவது ஒரு அபார்ட்மெண்டின் ஐந்தாவது மாடியில் முடங்கிக் கிடப்பார்கள். அவர்களைப் பொறுத்தவரை, படியிறங்கிக் கீழே வருவதே மிகப் பெரிய பொழுது போக்குத்தான். பிள்ளை பெண்களின் அரவணைப்பு இல்லாமல் சமையல்காரன், வேலைக்காரியின் தயவில் பொழுதை ஓட்டுகிற வாழ்க்கை என்ன வாழ்க்கை? அப்படியே குடும்பம், குழந்தைகள் என்ற பிடிப்பே இல்லாமல் ஆயிரம் ஆயிரமாய்ச் சம்பாதித்துக் கொண்டு இயந்திரமாய் அலைகிற மனிதர்கள்.... பணம் மட்டும் தான் வாழ்க்கை என்கிற நம்பிக்கை தவறானது. இவர்களை விட, வேலை முடிந்து வீடு திரும்புகிற சாதாரணத் தொழிலாளி, பையனுக்குப் பத்துப் பைசாபலப்பமும், பெண்சாதிக்கு ஒரு முழமும், பூவும் வாங்கிக் கொண்டு போகிற போது அடைகிற சந்தோஷம் அலாதியானது!

அந்தக் காலத்திலசந்தடியில்லாத கிராமப்புற அமைதியில், தாத்தாவும், பாட்டியும் வாழ்ந்தகாலம் இப்போது இல்லை. நம்மைப் போல் அவர்கள் அவசரங்களுக்குப் பலியாகி விட



தொகுப்பாசிரியர்: டாக்டர் வியாஸ்
கட்டுரைவடிவம்: சுப்ரபாலன்




வில்லை. நிதானமாக உட்கார்ந்து ரசித்துச் சாப்பிடுவார்கள். பிரமாதமான ஆசைகள் எதுவும் அவர்களுக்கு இருந்ததில்லை. ரொம்பவும் திருப்தியாக ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள். ஹோட்டல்களில் எதை வைத்தாலும், எப்படிப் போட்டாலும், கண்ணை மூடிக் கொண்டு சாப்பிட்டுவிட்டுச் சாது வாய் வெளியே போய்விடுவோம். கிராமங்களில் அப்படி விட மாட்டார்கள். கூரைக் கொட்டகை உணவுவிடுதியில் போடுகிற இலையின் ஒரு ஓரத்தில் கொஞ்சம் அழுக்கு இருந்தால் கூடக் கூச்சல் போட்டு ஊரைக் கூட்டி விடுவார்கள். அவர்களுக்கெல்லாம் பொருள்களின் தரம்தான் முக்கியம்.

ஆஸ்த்துமா நோய் வருகிறது. அறுபது சதவீதம் மன உளைச்சல்கள், கற்பனைகளே இதற்குக் காரணம். மார்ச் மாதம் முடியப் போகிறது என்கிற போது பாங்குகளிலோ மற்ற இடங்களிலோ பணம், கணக்குகளில் மூழ்கியிருக்கிறவர்கள் அதிகமாகப் பரபரப்படைகிறார்கள். ஆஸ்த்துமா அதிகமாகிறது.

பல்லாவரமோ, முடிச்சூரோ... ஏதோ ஒரு இடம்... தாத்தாவும், பாட்டியும் நிம்மதியாக இருக்க வேண்டிய காலம். பிள்ளைக்கு ரொம்பவும் பிஸியான உத்தியோகம். இன்றைக்கு பம்பாய், நாளை கல்கத்தா, அப்புறம் லண்டன் என்று பூமியையே பார்க்காமல் பறந்து கொண்டிருக்கிறவன். அவனுக்கு மன வளர்ச்சியடையாத ஒரு குழந்தை... பதினைந்து - பதினாறு வயசு... உயிர் மட்டும் இருக்கிறது. பசி, தாகம், பேச்சு எதுவும் கிடையாது... அதுவும் ஒரு காய்கறி வகை மாதிரி கிடக்கும்...

அந்தக் குழந்தைக்குத் தேவை இரண்டு... கவனித்துக் கொள்ள ஒரு ஆயா, சீக்கிரத்தில் இயல்பான மரணம். ஆயிரத்துக்குப் பத்து – பதினைந்து கேசுகள் இப்படி ஆகின்றன. மூளைக் காய்ச்சல் காரணமாக வருகிற விபரீதம் இது. பிஸியான பிள்ளையோ மருமகளோ தங்கள் குழந்தையைக் கவனிக்க, பணமிருந்தும் நேரமின்றி அவதிப்படுகிறார்கள். மருத்துவமனைகளுக்கும் இதுபோன்ற கேஸ்களை வைத்துக் காப்பாற்றுவதில் பொருளாதார லாபமில்லை. கிழவரும், கிழவியும் அகப்படுகிறார்கள். அவர்களுடைய நிம்மதி குலைய வேறு என்ன வேண்டும்?

ஆனாலும், சில பெரியவர்கள் எந்த நிலையிலும் ஆரோக்கியம் குறையாமலிருக்கப் பழகிக் கொள்கிறார்கள். பிள்ளையோ, பெண்ணோ அவர்களுடன் இல்லையென்றாலும், பக்கத்து வீடு, நண்பர்கள் என்று உறவுகளை வளர்த்துக் கொள்கிறார்கள். ஒரு நல்ல நாள், பிறந்த நாள் என்று பக்கத்து வீட்டுத் தம்பதி வந்து நமஸ்காரம் பண்ணி ஆசீர்வாதம் பெறுகிறபோது இவர்களுக்குக் கிடைக்கிற சந்தோஷமும் மன அமைதியும், ஆறுதலும் சொந்தப் பிள்ளைகள் எங்கோ அமெரிக்கா, ஐரோப்பா என்று போய் டாலர்க் கணக்கில் சம்பாதிக்கிறார்கள் என்கிற பெருமையில் கிடைப்பதில்லை.



கை நகங்களைக் கடிப்பதால் **Food Poisoning** ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளன. இன்ன காரணம் என்று அறிய முடியாமல் வாந்தியும், பேதியும் ஏற்பட்டு, உடலில் நீர் வற்றிப் போய், 'Saline' கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டால், நோயாளியின் நகங்களை ஆராய்ந்து பாருங்கள்.

விசேஷ பரிசுகளுடன்


டெபாசிட் சேகரிப்பு விழா!

(15-3-1984 முதல் 14-7-1984 வரை)

22% வட்டி வழங்கப்படுவதுடன்
V.I.P. BRIEF CASE
அன்பளிப்பும் வழங்கப்படும்.

மற்றும் மேற்படி காலத்தில் டெபாசிட் செய்பவர்கள் ஒவ்வொருவரும் விசேஷ பரிசு போட்டியில் கலந்துகொள்ளும் வாய்ப்பை பெறுவார்கள். சென்னை கிளையில் டெபாசிட்தாரர்கள் முன்னிலையில் நடைபெறும் பரிசு போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு

முதல் பரிசு
கலர் TV
(அல்லது ரூ. 10,000/- ரொக்கம்)




இரண்டாவது பரிசு
குளிர் சாதனப் பெட்டி
(அல்லது ரூ. 5000/- ரொக்கம்)



மூன்றாவது பரிசு
வாஷிங் மெஷின்
(அல்லது ரூ. 4000/- ரொக்கம்)



நான்காவது பரிசு
பிளாக் & ஒயிட் TV
(அல்லது ரூ. 3000/- ரொக்கம்)



கவர்ச்சிகரமான வட்டி விகிதங்களில் பிக்சட் டெபாசிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன

1-வருடம்	2-வருடங்கள்	3-வருடங்கள்	5-வருடங்கள்
17%	18%	19%	22%

பாலாஜி மோட்டார் & ஜெனரல் பைனான்ஸ்

(Hire Purchase Financiers for Motor Vehicles)

சென்னை : 91, உஸ்மான் ரோடு (சிவா-விஷ்ணு கோயில் அருகில்) தி. நகர், சென்னை-600 017 போன் : 447186 442218

பெங்களூர் : 24/1-A, மார்கோஸா ரோடு (10வது கிராஸ்) மல்லேஸ்வரம், பெங்களூர்-560 003 போன் : 366971

திருச்சி : 22, மதுரை ரோடு (முதல் மாடி) திருச்சிராப்பள்ளி-620 008

பாண்டிச்சேரி : 11, நேரு தெரு (கனரா வங்கி எதிரில்) பாண்டிச்சேரி-605 001

தஞ்சாவூர் : எண் : 2 & 3, முதல் மாடி, ஜி. ஏ. கனால் ரோடு, தஞ்சாவூர்-613 100 போன் : 1626

திருவண்ணாமலை : 14/A, ஆனைக்கட்டி தெரு, திருவண்ணாமலை-606 601 போன் : 483

பட்டுக்கோட்டை : 9-A, தலையாரி தெரு, பட்டுக்கோட்டை-614 601 போன் : 453

டெபாசிட்தாரர்களை அறிமுகம் செய்பவர்களுக்கும் அன்பளிப்பு வழங்கப்படும்.

ராஜதந்திரமாவது வேண்டாமா?

மீ.ப.சோமு

"இந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட குடியரசு தின விருதுகளில் தமிழை முற்றிலும் புறக்கணித்து விட்டார்களே, இது நியாயமா? கடந்த சில ஆண்டுகளின் பட்டியலைப் பாருங்கள். இந்தப் புறக்கணிப்பு அநீதி தமிழுக்குத் தொடர்ந்து வருஷந்தோறும் நடந்து வருகிறதே! "பத்மஸ்ரீ" என்னும் அடிமட்ட விருதுக்குக் கூட நம்மூரில் யாரும் தகுதியில்லையா? வடநாட்டுப் பாஷைகள் பிரமாதமாக வளர்ந்து விட்டன என்றே வைத்துக் கொள்ளுவோம். மலையாளமும், கன்னடமும் வளர்ந்துள்ள அளவுக்காவது தமிழ் அறிஞர்களோ அல்லது எழுத்தாளர்களோ வளரவில்லையா? அந்த மொழிகளுக்கு விருது கொடுத்து விட்டுத் தமிழுக்கு இல்லையா?"

"சில ஆண்டுகளாகத் தில்லிக் குடியரசு தமிழை உதாசீனம் செய்து வந்தது என்பதற்கு நுட்பமான காரணம் நமக்குப் புரிகிறது. ஆனால் இப்போது தான் தில்லி மேளத்துக்கு நாம் நன்றாக ஒத்து ஊதி வருகிறோமே. அப்படி இருந்தும் இந்த ஆண்டிலுங்கூடத் தமிழ் அறிஞர்களைத் தில்லிக்காரர்கள் ஏன் ஒதுக்கிவிட்டார்கள்? இதுதான் ஒருமைப்பாடு உபதேசமா? கட்சியிலே சேர்ந்திரா விட்டால் சிவாஜியின் அற்புத நடிப்புக் கூட அவர்களின் கண்ணில் பட்டிராது அல்லவா?"

இந்த வகையான கேள்விகள் வெவ்வேறு வடிவத்தில் கடிதம் மூலமும் நேரிலும் பல நேயர்கள் கேட்டிருக்கிறார்கள்.

சீர்காழியும், பத்மா சுப்பிரமணியமும், சிவாஜியும், இன்னும் சிலருமாவது விருதுப் பெருமை பெற்றார்களே என்று நான் மகிழ்ச்சியடைகிறேன். உபசாரமில்லை. உண்மையாகவே மகிழ்கிறேன். ஏனென்றால், நீண்ட நீண்ட பட்டியல்களின் நடுவில் தகுதியுள்ள நம்மவர் சிலருடைய பெயர்களும் ஏதோ ஓர் இடத்திலே சேர்ந்திருந்தாலே போதும். அதற்காகவே மாநில, மைய அரசுகளை நாம் பாராட்ட வேண்டும். கால நிலை அப்படி இருக்கிறது! என்ன செய்ய!

நமக்கும், தில்லிக்கும் உள்ள இப்போதைய, அதாவது, இந்த நிமிடக்கூட்டுறவைப்பற்றி ஒரு வார்த்தை. "உணர்ச்சி தான் நட்பாங் கிழமை தரும்" என்பது தமிழ் மறை! ஒத்த உணர்ச்சியும், ஒத்த பின்



னணியும் உள்ளவர்கள் ஒன்று சேர்ந்தால் அது நிஜமான கூட்டுறவு என்று சொல்லலாம். மற்ற உறவுகள் எல்லாம் நிலையற்றவை மட்டுமல்ல, வேடிக்கையானவையுங்கூட! ஓணான் தரைக்கு இழுக்கும், தவளை தண்ணீருக்கு இழுக்கும். இரண்டையும் 'தேர்தல்' என்ற சன்னமான அரசியல் நூலினால் கட்டிப் போட்டிருக்கிறார்கள். இன்றைய அரசியலின் இந்த ரசமான கண்காட்சியைப் பார்த்து



நாம் ரசித்து வருகிறோம். ஓணானும் தவளையும் இரண்டுமே நம்மோடு சேர்ந்து ரசித்து வருகின்றன! இதற்கு மேல் இந்த உறவைப் பற்றிச் சொல்ல வேறு என்ன உண்டு? ஆனால் விருதுகள் விஷயம் அப்படி இல்லை. அதன் அடிப்படையே வேறு.

எல்லா வட்டார மொழியாளர்களையும் சரியாகச் சீர்தூக்கி நிறை போடுகிற தராசு மைய அரசிடம் இல்லை என்றால், அது படிக்கல்லின் தவறே தவிர பொருள்களின் தவறு ஆகாது. நம்முடைய தமிழக அரசின் வருடாந்திரப் பட்டியலான கலைமாமணியைப் போல, ஒவ்வொரு காரணத்துக்காக ஒவ்வொருவர் என்று, 'சாக்கி'லே இரண்டு 'பேக்கி'லே இரண்டு போட்டு, ஒரு கிலோ மீட்டர் நீளத்துக்குக் குடியரசுப் பட்டியலையும் அறிவித்தால் உரிய கௌரவம் அதற்கு இல்லாது போய் விடும்! உண்மை; ஆனால், துலாக்கோலின் கயிற்றிலே, ஒருமைப்பாடு என்ற ஒரு முடி போட்டிருக்க வேண்டும்! தில்லியில் நடைபெற்ற குடியரசு ஊர்வலத்தில் தமிழ் சிரித்த சிரிப்பும் இதேகதைதான்! தேர்வு செய்கிற குழுவிலே உள்ளவர்களுக்கு



ஒருமைப்பாடு என்ற பேருணர்வு இல்லாவிட்டாலும், ராஜ தந்திரமாவது இருக்க வேண்டும் அல்லவா?

• • •

இப்போது சில நாட்களாகச் சென்னையிலும், வெளியூர்களிலும், ஏழை மக்கள் குடியிருக்கும் வட்டாரங்களில், ஒரு புதிய விழிப்பு ஏற்பட்டுப் பரவி வருகிறது. ஏழை பங்காளனாகிய பரம்பொருள் இந்த எளிய வீடுகளைத் தேடிப் பிடித்து, இந்த மக்கள்மீது புதியகருணையைச்செலுத்தத் தொடங்கியிருக்கிறார்.


நகராட்சிப் பள்ளிகளில் படிக்கிற, சத்துணவுஉண்டு சத்தோடு படித்து வருகிற சிறுமியர்களும், சிறுவர்களும், தங்கள் பள்ளித் தலங்களிலே வந்து இலவசமாக வழங்கப்படுகிற விவிலிய வேதப் புத்தகத்தின் அழகழகான தமிழ்ப் பதிப்புகளைப் பெருமையோடு தங்கள் வீடுகளுக்கு எடுத்து வருகிறார்கள்! முன்பும் இந்தப்பழக்கம் இருந்தது. ஆனால் இப்போது சீரிய முறையிலே இட்டத்தோடு இந்தப் பக்திப் பிரசாரம் நன்கு நடந்து வருவதைப் பாராட்ட வேண்டும். பிஞ்சு உள்ளத்திலே நல்லெண்ணத்தைப் பதிக்கிற மனத் தத்துவம் இதுவேயாகும். இதை அழகாகச் செய்கிறார்கள்.

எதைச் செய்தாலும், திருத்தமாகவும் செம்மையாகவும் நிருவாகம் செய்கிற கிறிஸ்துவ சபையை நாம் வியப்போடு கவனிக்க வேண்டும். உணவுப் பங்கீடு நிலையங்களிலும், நியாய விலை அங்காடிகளிலும் சென்று, முகவரிகள் பெற்றுத் திறமையோடு பணி செய்கிறார்கள். எங்கள் பேட்டையிலுள்ள குடிசைச் சகோதரர்களுக்கு அண்மையில் இவர்கள் ஏக பெருமானின் கருணையை விளக்குகிற அழகழகான நூல்களை, எளிய தமிழில் எல்லோருக்கும்புரிகிற முறையில் வண்ண அச்சிலே பதித்து, அன்போடு இலவசமாக வழங்கியிருக்கிறார்கள்! இத்தகைய சில நூல்களை நானே பார்த்தேன். இவற்றில் சில நூல்கள் ஒவ்வொரு பிரதியும் பதினைந்து ரூபாய்க்கு மேல் அடக்க விலை பெறும்! இலவசமாகக் கிடைக்கிற இந்த அழகான நூல்களை எங்கள் பேட்டையிலே ஒரு குடிசை வாழ் சகோதரர் எத்தனை பக்தியோடும் பெருமையோடும் என்னிடம் கொண்டு வந்து காட்டினார் என்கிறீர்கள்! அவருடைய பரவசமே பரவசம்!

'எளிய தமிழிலே முறையிட்டால் ஏகபெருமான் அந்த மொழியைப் புரிந்து கொண்டு அருள் செய்வார்' என்று அந்தச் சகோதரர் திண்ணமாக நம்புகிறார்! இது அல்லவோ மதத்தலைவர்கள் செய்ய வேண்டிய பொது மக்களுக்குரிய சமயத் 'தொண்டு!

• • •

'கிருஷ்ணுயில்' என்று வடமொழியிலும், 'கிருஸ்ணுயில்' என்று சென்னைத் தமிழிலும், 'மண்ணெண்ணெய்' என்று தூய தனித் தமிழிலும் அவதரிக்கிற எரி பொருள் மூர்த்தியானவர், இந்தக் கலிகாலமான மழைக் காலத்தில் தாகம் தாங்காமல் பீப்பாய் பீப்பாயாகத் தண்ணீர் குடிக்கிறார் என்றும், அவர் மண்ணெண்ணெய் மூர்த்தியா அல்லது தண்ணெண்ணெய் மூர்த்தியா என்று கண்டுபிடிக்க முடியாத அளவுக்குப் புதிய அவதாரம் எடுத்து வீதிகளிலே வலைய வருகிறார் என்றும் கேள்வி! அவரைக் கொஞ்சம் விசாரணை செய்தால் நலம் என்று தாய்க்குலம் கருதுகிறது!



கமலா: ஏண்டி, விமலா! நீ கல்யாணம் செய்துக்க மாட்டேன்னு சபதம் செய்தாயே, பின்னே இப்ப ஏன் செய்துக்கிட்டே?

விமலா: அதுவா! செய்துக்காட்டி மெடர்னிடி லீவ்' வேஸ்டாப் போயிடுமேன்னுதான்!

மனைவி: புடவையா இது? சேச்சே! உங்களுக்கு செலக்ஷன் பண்ணவே தெரியாது.

கணவன்: நெஜம்தாண்டி! அது தெரிஞ்சா நீ என் மனைவி ஆகியிருக்க மாட்டே!





வாய் துர்நாற்றத்தை தடுத்திடுவீர்...
பற்சிதைவை எதிர்த்திடுவீர்

கோல்கேட்டின் நம்பகமான ஃபார்முலா, சிறப்புடன் செயல்பட்டு நீங்கள் பல்துலக்கும் ஒவ்வொரு முறையும் உங்களுக்கு புத்துணர்ச்சிதரும் தூய சுவாசம் அளிக்கின்றது. பற்களுக்கு ஆரோக்கியமும் உறுதியும் தருகிறது.

எப்படி என்றால்...

உணவுத் துணுக்குகள் பற்களுக்கிடையே சிக்கிக் கொள்வதால் துர்நாற்றத்தையும் பற்சிதைவையும் உண்டாக்கும் பாக்டீரியாக்கள் வளருகின்றன.



கோல்கேட்டின் ஒப்பற்ற செயல்புரியும் நுரை ஆழ ஊடுருவிச்சென்று உபாதை தரும் உணவுத் துணுக்குகளேயும் பாக்டீரியாக்களேயும் அகற்றி விடுகிறது.



பயன்: தன்னம்பிக்கை தரும் இனிய சுவாசம், பற்சிதைவுக்கு எதிராகப் பாதுகாப்பு, உறுதிமிக்க ஆரோக்கியமான பற்கள்.

ஆகவே, சாப்பிட்டு முடிந்தவுடனேயே மறக்காமல் கோல்கேட் டென்டல் க்ரீம் உபயோகித்து பிரஷ் செய்யுங்கள்.

கோல்கேட்டின் புத்துணர்ச்சி தரும் பெப்பர்மென்ட் சுவை உங்களுக்கு விருப்பமானது!

CKSE 862 86 TM

பொழுது விடிஞ்சாச்சு

"இன்னிக்கு வெள்ளிக் கிழமையா இருக்கு. இல்லேன்னு ஒன்னைத் தொலைச்சி கட்டியிருப்பேன்" என்று வாரத்தின் ஒவ்வொரு கிழமையையும் இதே பாணியில் சொல்லிப் பின் வாங்கும் நம்பியார் கதாநாயகனுக்கு உதவியாய் வரும் பாத்திரம். பொதுவாக முன்பெல்லாம் காமெடியன்கள் செய்கிற பாத்திரம்! இருந்தாலும் நம்பியார் நன்றாகவே செய்திருக்கிறார். ஆ. நீ.போச்சு படத்தில் இதே போன்ற ரோல் செய்த அனுபவம் உதவியிருக்கும். நம்பியார் ஒவ்வொரு தடவையும் முடுக்கி விட, அந்த வேகத்தோடு முகத்தில் கரி, மூக்கில் வெட்டு, காதில் பூ ஆகிய ரகவாரியான அனுபவங்களை கலக்ஷன் அன்கோவிடம் பெற்றுத் திரும்பும் 'வெற்றி வீரனாய்' பிரபு.

பண்ணையார் — என்றாலே கொடுமை, இரக்கமின்மை நிறைந்த காரெக்டர்தானே தமிழ்ப்பட வழக்கம். இதிலும் அப்படியே. மருதுப் பிள்ளை செய்த, செய்கிற கொடுமைகளுக்காக அவனை சிட்சித்து பிறரை ரட்சிக்கச் சங்கு சக்கரம் தரிக்காமல் பிரபு அவதரித்திருக்கிறார். முன்பாதியில் மனத்தில் துணிவில்லாத கோழையாய்க் கதாநாயகன் வருவதும் பின் பாதியில் ஒற்றைக் கையால் பத்துப் பதினைந்து பேரைத் துவம்சம் பண்ணுவதும் — இருபது வருஷங்களாய்ப் பார்த்துக் கொண்டிருக்கிறோமா? — இதிலும் பார்க்கிறோம்.

வடு மாங்காய்ப் பேச்சு கலக்ஷன் காலில் 'அடி' வாங்கிக் கொண்டு அப்பாவிப் பிரபுவை மே. மூச்சு, கீ. மூச்சு வாங்க தூக்கச் செய்யும் இடம்— பெரிதாய்ப் புன்னகையைத் தட்டிச் செல்லும் இடம்.



அம்மா — அஞ்சலிதேவி. பாட்டி ரோலுக்கு இன்னும் பொருத்தமாய் இருக்கும்.

பண்ணையார் மருதுப் பிள்ளையாய் நடிக்கும் சண்முகசுந்தரத்தைத் திரையில் அடிக்கடி பார்த்த ஞாபகம் இல்லாவிட்டாலும், மனிதர் நன்றாகவே வில்லத்தனம் செய்திருக்கிறார்.

கதை — திரைக்கதை— வசனம் — டைரக்ஷன் கங்கை அமரன். இந்த அரைத்த மாவு படத்துக்குக் கதை, திரைக்கதை என்று போட்டுக் கொள்ளாமலே இருந்திருக்கலாம். மனத்தில் நிற்கிற மாதிரி இளையராஜா எதுவும் செய்யவில்லை என்பது கொஞ்சம் வருத்தமான விஷயம்தான்.

காலைக் கருக்கல் இன்னும் மிச்சம் இருக்கிறது. பொழுது சரியாய் விடியவில்லை.

—ஜெயமன்மதன்

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600032. (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani

Editor: K. Rajendran

கொள்ளை மலிவா இருக்கே!

ஆமாம். மற்றதையெல்லாம் விட சுமார் 7 ரூபாய் விலை குறைவு நியூட்ராமுல்.

மற்றது என்றால்?

பேரைச் சொல்வானேன்? எட்டாத விலையில் எத்தனையோ
மால்ட்-கோக்கோ பானங்கள் இருக்கின்றனவே.

மிக உயர்ந்த ரகங்களோ?

அதுதான் இல்லை! ISI முத்திரை கொண்டது நியூட்ராமுல் ஒன்றுதான்.
மற்றவற்றுக்கு இல்லை. இன்னும் விளக்கிச் சொல்லணுமா என்ன?

அது எப்படி முடியுது?

விளம்பரச் செலவுகளிலே, விற்பனைச் செலவுகளிலே சிக்கனம்.
அதுவும் தவிர புதிய உற்பத்தி உத்திகள். கிடைக்கும் லாபமெல்லாம்
உங்களுக்குத்தான். இப்ப புரிஞ்சுதா?

பலே! பலே!

என்னவென்று நினைத்தீர்கள்? எங்கள் தயாரிப்பின் மகிமையே அதுதான்.
மிக மலிவான விலையிலே மிக உயர்ந்த தரம். அமுல் போன்ற இந்தியக்
கூட்டுறவுங்களாலதான் இதையெல்லாம் சாதிக்க முடியும்.
வெளிநாட்டு வியாபாரக் கூட்டுங்களால முடியவே முடியாது.
முடிஞ்சாலும் செய்ய மாட்டார்கள்.

நியூட்ராமுல்	ரூ. 13.34
போர்ன்விடா	ரூ. 20.48
மால்டோவா	ரூ. 19.70
பூஸ்ட்	ரூ. 20.70

அக்டோ '83 நிலவரப்படி, 500 கி.
[illegible]ப்பெட்டிகளிலும் பேக்குகளுக்கான
அனுபோக, உச்ச விலைகள். வரிகள் தனி.



அமுல் படைப்பு
நியூட்ராமுல்

daCunha/GCM/100/83/TM/R

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka